Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - info@cityhoteljaffna.com
T.P - 0212225969
Web - www.Cityhoteljaffna.com

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 தை 30 செவ்வாய்க்கிழமை (12.02.2013) பக்கங்கள் 20 ஓசை - 135
















## பயங்கரவாதம் தலையெடுக்க மீண்டும் இடமளிக்க முடியாது

(யாழ்ப்பாணம்)



பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கவோ, பயங்கரவாதத்தை தூண்டவோ இனிமேலும் இடமளிக்க முடியாது. அரசுக்கு எதிராகவோ, ஆதரவாகவோ செய்திகள் வெளியிடுவதற்கு ஊடகங்களால் முடியும். அதற்கு யாரும் தடை விதிக்கவில்லை, இதற்கு மாறாக பயங்கரவாதத்தைத் தூண்டும் வகையில் செய்திகளை வெளியிட வேண்டாம். இது சமூகத்தின் வளர்ச்சிக்கு எதிராக சமூக அழிவுக்கு வழி அமைக்கும். அழிவையும், பயங்கரவாதத்தையும் தூண்டுவது ஊடகத்துறையின் தர்மம் அல்ல என்று யாழ். கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமுல்படுத்தப்படும் பாதுகாப்பு நடைமுறைகள் சம்பந்தமாக (19) ஆம் பக்கம் பார்க்க

## பாப்பரசர் இராஜினாமா

ஒருபோதும் எவரும் எதிர்பாராத வகையில் பாப்பாண்டவர் இந்த மாத இறுதியில் இராஜினாமாச் செய்யவுள்ளதாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாப்பாண்டவர் ஜோன் போல் மரணமடைந்ததைத் தொடர்ந்து 85 வயதான பதினாறாவது பெனடிக்ற் பாப்பாண்டவர் ஆனார். கத்தோலிக்கத் திருச்சபை தலைவரின் எதிர்பாராத இப்பதவி விலக (19) ஆம் பக்கம் பார்க்க

## உறவுகளுடன் இணைந்த சிறுமி

(திருநெல்வேலி)

வன்னி யுத்தத்தின் போது காணாமற் போன ஒன்பது வயதுப் பெண் பிள்ளையொன்று மூன்று வருடங்களின் பின்னர் பிள்ளையின் எண்பது வயதுடைய முதியவரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முதியவர் விறகு வெட்டிவரச் சென்றபோது இவரது குடும்பம் தொடர்ச்சியாக வந்து விழுந்த எறிகணைகளுக்குப் பயந்து பங்கருக்குள் பதுங்கியிருந்த போது எங்கிருந்தோ வந்த எறிகணையொன்றினால் முதியவரின் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என எட்டுப்போர் பலியானார்கள். அதிர்ஷ்டவசமாக பங்கருக்கு வெளியே நின்று விளையாடிக் கொண்டிருந்த ஆறு வயது நிரம்பிய முதியவரின் பேத்தி ஒருவர் உயிர் பிழைத்துள்ளார். (19) ஆம் பக்கம் பார்க்க

# "யாழ் ஒளி" மின் நிலையத்தை ஜனாதிபதி இன்று திறந்து வைப்பார்



## இனி தடையற்ற மின்சாரம்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு மூன்று நாள் விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று பல நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார்.

இதற்காக நேற்று மாலை 5.00 மணியளவில் சிறப்புவிமானத்தில் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கைலாகுகொடுத்து வரவேற்றனர்.

ஜனாதிபதியுடன் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரியா, பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் வருகை தந்தனர்.

இன்று காலை 10.00 மணிக்கு சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள யாழ் ஒளி மின்னூட்டல் (19) ஆம் பக்கம் பார்க்க



## கிளிநொச்சி பொதுச்சந்தை இரண்டாவது தடவையாகவும் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால், திறந்து வைக்கப்பட்ட பொதுச்சந்தை நேற்று மாலை மீண்டும் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல் வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி நகரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 250 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தையின் முதற்கட்டக் கட்டடம் கடந்த 25.09.2012 அன்று ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தையே நேற்று மீண்டும் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வை.குகராஜா திறந்து வைத்துள்ளார். இந்தச் சம்பவம் சந்தை வர்த்தகர்கள் மத்தியிலும் பொது மக்கள் மத்தி (19) ஆம் பக்கம் பார்க்க

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு கூட்டமைப்புக்கும் அழைப்பு

### ஊடகப் புரளி அம்பலம்

(யாழ்ப்பாணம்)

இன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெறவிருக்கும் யாழ்.ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஜனாதிபதி செயலகத்தினால் அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இக்கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அழைக்கப்படவில்லை என்று சில ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இது குறித்து யாழ்.அரச அதிபரிடம் வினவியபோது இது தவறானது என்றும், ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட அழைப்புக் கடிதங்கள் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கூடாகவே விநியோகிக்கப்பட்டது என்றும் கூட்டமைப்பு (19) ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய நாடுகளின் மாநாடு திட்டமிட்டபடி கொழும்பில்

திட்டமிட்டபடி எந்தமாற்றமும் இல்லாமல் பொதுநலவாய மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது என்று அமைப்பின் பொதுச் செயலாளர் கே.சர்மா நேற்று உறுதிப்படுத்தினார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகமவுடனான சந்திப்பின் போதே அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். மாநாட்டிற்கான ஏற்பாடுகளை பரிசீலனை செய்த பின்னரே அவர் இந்த அறிவிப்பை மேற்கொண்டுள்ளார்.

அதேவேளை, பொது நலவாய அமையத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று அலரிமாளிகையில் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

இன்றைய தினமுரசில்...

வேகமாக முன்னெடுத்தது. இருந்தபோதிலும் முன்னர், தாமாக இணைவது போன்று போராளிகள் புதிதாக இணைகின்ற தொகை பெரியளவில் இருக்காத சூழ்நிலையில், கட்டாய ஆட்சேர்ப்பை மேற்கொள்வதே பொருத்தமானது என புலிகளின் தளபதிகள் சிலர் பிரபாகரனிடம் தொடர்ச்சியாக வற்புறுத்தத் தொடங்கினர். இந்த நிலையில் கட்டாய ஆட்சேர்ப்பு என்பது பலமானதாக இருக்காது எனவும், ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் இந்திய

விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 22

ஒருபோதுமே நம்புவதில்லை நீங்கள் ஏன் சுரேசிடம் நிதி கொடுத்தீர்கள்? அவர்களை நாங்கள் காலத்தின் தேவை கருதி விரும்பியோ விரும்பாமலோ கூட்டமைப்பில் இணைத்துள்ளமை தவிர, அவர்களை நம்பிக்கைக்குரியவர்களாக நாங்கள் ஒருபோதுமே கருதுவதில்லை. மக்களிடம் சரண்டுகின்ற மக்களிடம் கப்பம் பெறுகின்ற பல நடவடிக்கைகளை அவர்கள் கூட்டமைப்பில் இருந்தவாறு செய்வதாக யாழ்ப்பாணத்திலிருந்து எங்களிற்கு



# சைவசமயத்தின் தொன்மை புலம்பெயர் நாடுகளிலும்

## வடமாகாண ஓய்வுநிலை பிரதம செயலாளர்*

(வடமராட்சி)

புலம்பெயர் நாடுகளில் எமது சைவசமயத்தின் தொன்மைகளும் வழிபாடுகளும் பின்பற்றி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது என வடமாகாண ஓய்வுநிலைப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் சிவநெறி - III இறுவட்டு வெளியீட்டுவிழா அண்மையில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக சைவ ஆலோசனைத் தலைவரும் பிரதேச செயலருமாகிய ச.சிவசிறி தலைமையில் நடைபெற்றிருந்தது.

அதிசிறப்பு விருந்தினராக கலந்துகொண்டிருந்த வடமாகாண ஓய்வுநிலை பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும உரையாற்றுகையில் இங் கிலாந்தில் சைவசமய விழுமி யங்களைக் கொண்டும் அதனை எதிர்கால சந்ததிகள் சீர்தூக்கிப் பார்க்கும் வகையிலான புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அந்தப் புததகம் லண்டனில் உள்ள புலம்பெயர்ந்த சைவசம யப் பெரியார்களினதும் இலங்கையின் தந்தைதேசம் என்று சொல்லப்படும் இந்திய தமிழ்நாட்டைச் சேரந்த சமயப் பெர யார்களினதும் ஆக்கங்கள் உள்ளடங்கலாகவே வெளியிடப்பட்டிருந்தது.

குறிப்பாக நல்லை ஆறுமுக சாமி, தெல்லிப்பளையைச் சேர்ந்த ஆறுதிருமுருகன், புலோலியைச் சேர்ந்த மு.கதிரவேல் பிள்ளை, உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவசம்புப் புலவர், மட்டக்களப்பைச் சேர்ந்த விபுலானந்த சுவாமிகள் மற்றும் கம்பபாரதி, வ.கணபதிப்பிள்ளை உட்பட பல சமயப் பெரியார் களை அடக்கிய இந்தியாவில் சென்று புகழ் முருகிய சைவசமயப் பெரியார்கள் 32 பேர்களின் ஆக்கங்கள் மற்றும் கட்டுரைகள் வெளியிடப்பட்டிருந்தன. இவ்வாறு இங்கிலாந்தில்கூட சைவசமயத்தின் பண்பாடுகள், வழிபாட்டு முறைகள், கலாசாரங்கள் பேணப்பட்டுப் பின்பற்றப்பட்டு வருகின்றது என்றார். (116)

## தேர்வுக்கு விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின இரண்டாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வுகள் (End of Course Examinations) எதிர்வரும் பங்குனி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்திகளாகத் தோற்றவிரும்பும் மாணவர்கள் தேர்வு அனுமதிப் படிவங்களைப் பூரணப்படுத்தி, தேர்வுக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்பாக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (54)

## கிணற்றில் விழுந்து மூதாட்டி மரணம்

நோயின் தாக்கத்தால் மன முடைந்த மூதாட்டி ஒருவர் கிணற்றில் வீழ்ந்து மரணமான சம்பவம் ஒன்று பண்டத்தரிப்பில் இடம் பெற்றுள்ளது.

பிள்ளையார் கோயிலடிலேன பண்டத்தரிப்பைச் சேரந்த இராசரட்ணம் சரஸ்வதி (வயது -73) என்ற மூதாட்டியே இவ்வாறு மரணமாகியுள்ளார். தனது நோயினைத் தாங்க முடியாமல் இவ்வாறு கிணற்றில் வீழ்ந்து மரணமானதாக விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது.


சடலம் மரணவிசாரணைளின் பின் நேற்று யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. (இ)



யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தினரால் சுன்னாகம் வாழ்வகத்துக்கு இரண்டு கணனிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வர்த்தக சங்கத் தலைவர் க.ஜெயசேகரம் வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரனிடம் கணனிகளை வழங்குவதையும், அருகில் சங்க உத்தியோகத்தர்களுடன் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் க.தேவராஜா உட்பட பலர் நிற்பதைக் காணலாம். (137)

## பாதைகள் படுமோசம்; சீரமைக்குமாறு வேண்டுகை

முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பூணைச்சிக் குளம் மற்றும் பண்டாரவெளி ஆகிய கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் உள்ள மணற்குளம், இலந்தைக்குளம் மற்றும் வெளிமலை ஆகிய மீள் குடியேற்ற கிராமங்களில் உள்ள பிரதான வீதிகளும் உள்ளக வீதிகளும் இன்னும் செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுவதாகவும் மேலும் மழைகாலங்களில் பாடசாலை மாணவர்களும் கர்ப்பிணித் தாய்மாரும், முதியோர்களும் பல்வேறுபட்ட அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.



இந்தப் பிரதேசத்தில் உள்ளவர்கள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு/ வெளி இடங்களில் இருந்து டிப்பர்களையும் வேறு பாரிய அளவிலான வாகனங்களைக் கொண்டு வருவதனால் பாதைகள் சிதைவடைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த முறை முசலிப் பிரதேசசபைக்கு பல இலட்சக் கணக்கான வருமானங்கள் கிடைக்கப் பெற்றுள்ளபோதும் பிரதேச சபை செயலாளர் அந்த பணங்களை அரிப்பு வீதி, சவேரியார் புறம் ஆகிய வீதிகளை கொங்கிரீட் பாதைகளாக செப்பனிட்டுள்ளார். யுத்தத்தினால் பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரதேசமாக முசலியில் இன்னும் எத்தனையோ வீதிகள் காணப்படுகின்றன. எனவே இந்த வீதிகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு உரிய அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு முசலிப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுககின்றனர்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட முசலி கிராம மக்களுக்கு உதவி



மன்னார், முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த வருடம் வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கி வைக்கப்பட்டது.

முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம், மருதமடு, கரடிக்குளி, காயக்குழி, பாலக்குளி ஆகிய கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு இவ்வுதவித் தொகை வழங்கிவைக்கப்பட்டதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிறைவேற்று அதிகாரி ருக்சன் ஒஸ்வேல்ட் தெரிவித்தார். இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினூடாக வறட்சி நிவாரண செயல்திட்டத்தினூடாக இவ் உதவித் தொகையை வழங்கிவைத்ததாகவும் அவர் கூறினார்.

கடந்த வருடம் சுமார் 6 மாத காலப்பகுதியில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மீளவும் கட்டியெழுப்பும் வகையில் இவ்வுதவித்தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 10,000 ரூபா படி இவ்வுதவித் தொகை காசோலையாக வழங்கி வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். இவ்வுதவித்தொகையை பெற்றுக்கொண்ட பயனாளிகள் பணத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்றும்

அதற்கான ஆவணங்களை எவ்வாறு சமர்ப்பிப்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன.

மேலும் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 5 கிராமங்களுக்கு 2,000 லீற்றர் தண்ணீர் கொள்கலன்களும் வழங்கபட்டன. முசலி பிரதேச செயலளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை ம.வி.பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டி மெல், முசலி பிரதேசச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர் பி.பி.சிந்தாத்துரை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## முழுமைபெறாத மதகுகள் அமைப்பு கிராமமக்கள் விசனம் தெரிவிப்பு

இடர் முகாமைத்துவ அமைச்சினால் வெள்ளப்பெருக்கின் காரணமாக பாதிக்கப்படும் கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு கல்வெட்டு(மதகு) அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் குறித்த வேலைத்திட்டம் மன்னார் மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் கிராமங்களான பனங்கட்டிக்கொட்டு, பெரிய கமம், சாவக்காடு உட்பட சில கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு குறித்த மதகுகள் அமைக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதும் அவை இதுவரை முழுமையாக்கப்படவில்லை என குறித்த பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமங்களில் இடர் முகாமைத்துவ அமைச்சினால் 16 மதகுகள் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்பந்தகாரர்கள் தெரிவு மற்றும் தொழில்நுட்ப அலுவலர் தெரிவு போன்றவற்றை மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் இணைப்பாளரே மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் ஒரு மதகு அமைப்பதற்கு 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் (180,0000) செலவிடப்பட்டுள்ளது. ஆனால் நீண்ட நாட்களாகியும் குறித்த வேலைத்திட்டம் முழுமையடையவில்லை.

மன்னார் நகர சபையினால் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு சிபாரிசு செய்யப்பட்ட நிலையில் மன்னார் நகர சபையின் தொழிலநுட்ப அலுவலகர் ஒருவரினால் குறித்த 16 மதகு வேலைத்திட்டங்களும் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பல மாதங்களாகியும் குறித்த வேலைத்திட்டம் பூர்த்தியாக்கப்படவில்லை.

இதனால் குறித்த மதகுகள் அமைக்கப்பட்ட வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் குறித்த வீதியூடாக போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

# சண்முகானந்தா வித்தியாலயத்தில் சிறப்புற நடைபெற்ற கால்கோள்விழா



(கல்வயல்)

சாவகச்சேரி - கல்வயலில் அமைந்துள்ள ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் தரம் 1 இற்கான மாணவர்களை இணைத்துக் கொள்ளும் கால்கோள் விழா அண்மையில் அதிபர் இ.ரவீந்திரன் தலைமையில் சிறப்புற நடந்தேறியது.

தரம் 2 பாடசாலை ஆசிரியர் திருமதி இ.சுந்தரலிங்கத்தின் வழிநடத்தலில் புதிய மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

தரம் 2 மாணவர்கள் பல நடனநிகழ்வுகளையும் வழங்கியிருந்தனர். இந்நிகழ்வு மிகவும் சிறப்புற நடந்தேறுவதற்கு பாடசாலை சமூகமும், மாணவர்களின் பெற்றோர்களும் மிகவும் உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (43)

# பேருந்து சேவைகளை அதிகரிக்குமாறு போக்குவரத்து சபையிடம் வேண்டுகோள்

## - பயணிகள் பெரும் சிரமம்

(கல்வயல்)

சாவகச்சேரி - நுணாவில் வீதியூடாக கொடிகாமம் மற்றும் பருத்தித்துறை ஆகிய இடங்களிற்கான போக்குவரத்து சேவைகள் சீரற்றதாகக் காணப்படுகிறது.

நுணாவில் வீதியூடாக பயணிக்கும் பல மக்கள் யாழ். மற்றும் சாவகச்சேரிக்கு பேருந்து மூலம் பிரயாணிப்பதற்கு மிகுந்த சிரமமடைகின்றனர்.

கொடிகாமத்திலிருந்து நுணாவிலூடாக யாழ்ப்பாணம் செல்லும் பேருந்து காலை 7 மணிக்கும், பின்னர் 11 மணிக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோல பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரிக்கு செல்லும் பேருந்து காலை 7.30 மணிக்கும் பின்னர் 11.30 மணிக்கும் மாலை 3.30 மணிக்கும் என மட்டும் பயணிக்கிறன.

இதனால் இடைப்பட்ட நேரங்களில் பயணிக்கும் மக்கள் மிகுந்த சிரமங்களின் மத்தியில் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிளில் நுணாவில் சந்திக்கு வந்து பின்னரே ஏ9 பிரதான வீதியில் கொழும்பு, திருகோணமலை உட்பட தூர இடங்களுக்கும், ஏனைய மாவட்டங்களுக்கான பயணங்களையும் மேற்கொள்கின்றனர்.

எனவே இந்த மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பேருந்து சேவைகளை அதிகரிக்க வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (43)



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அண்மையில் சமய தீட்சை பெற்றுக்கொண்ட மாணவர்களின் ஒருபகுதியினரை காணலாம்.

# வல்வெட்டித்துறை நகர எல்லைக்குட்பட்ட உள்ளக வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகர எல்லைக்குட்பட்ட உள்ளக வீதிகள் மற்றும் ஒழுங்கைகளுக்கு முதல் தடவையாக பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டு வருகினறது.

மக்கள் செறிந்து வாழும் இடங்களில் உள்ள வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் வல்வெட்டித்துறை நகரசபையால் இனம்காணப்பட்டு தனியாரினால் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகளே நாட்டப்பட்டு வருகின்றது.

இதன்மூலமாக வல்வெட்டித்துறை நகரத்தில் வாழ்பவர்களைப் புதிதாக நகரத்திற்கு வருபவர்கள் எளிதில் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்குமென வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

நகரத்தில் மக்கள் வாழும் இட ஒழுங்கைகள் மற்றும் வீதிகளான சுந்தரப்பெருமாள் கோவிலடி ஒழுங்கை, சிவபுர வீதி, புட்டணிப்பிள்ளையார் வீதி, உலகுடைப் பிள்ளையார் வீதி, கப்பலுடையார் வீதி, ஆதி வைரவர் கோவில் வீதி, செல்வசந்நிதி ஆற்றங்கரை வீதி, வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, முருகையன் கோவில் வீதி, நடுத்தெரு ஒழுங்கை வீதி, ஊறணி குடியேற்றத் திட்ட வீதி, வேம்படி ஒழுங்கை வீதி, காட்டுவளவு ஒழுங்கை வீதி, கொத்தியாலடி ஒழுங்கை வீதி, சேகணடி வீதி, வேவில் ஒழுங்கை, அ.மி.த.க. பாடசாலை ஒழுங்கை, நெற்கொழு வைரவர் ஒழுங்கை, வேலைக்காடு பொக்கணை இணைப்பு வீதி, சுங்க வீதி, நடராஜ வீதி, தீருவில் ஒழுஙகை வித்தனை ஒழுங்கை, உடையாமணல் ஒழுங்கை, மீன் சந்தை ஒழுங்கை, மீனாட்சி அம்மன் வ்தி, சிவகுரு வித்தியாலய வீதி, சமத்தனை வீதி, வாலினி ஒழுங்கை போன்ற 30 ஒழுங்கை மற்றும் வீதிகளுக்கே பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை நகர சபையின் எல்லைக்குட்பட்டு பதிவு செய்யப்பட்ட 150 வீதி ஒழுங்கைகளில் 30 உள்ளக வீதி ஒழுங்கைகளுக்கே முதல் தடவையாக பெயர்ப் பலகை நாட்டப்பட்டுள்ளது. மற்றும் பிரதான வீதிகளுக்கு கிலோ மீற்றர், வீதிப் பெயர், பல்வேறு நல்லவாசகங்கள் அடங்கிய பெரிய பெயர்ப் பலகைகள் சிங்களம் உட்பட தமிழிலும், ஆங்கிலத்திலும் நாட்டப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.(116)

# வல்வை சிதம்பரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயற்குழு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் தலைவர் சூ.சே.குலநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சுமார் ஐந்து மணித்தியாலங்களாக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 75 அங்கத்தவர்களுக்கு மேல் கலந்து கொண்டிருந்தனர். மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தவர்களில் இருந்து பெரும்பான்மை அங்கத்தவர்களால் பின்வரும் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவராக இராஜதுரை (அதிபர்), உப தலைவர்களாக சிவா கிருஸ்ணமூர்த்தி, ந.ராஜேஸ்வரன், செயலாளராக கோ.சற்குணபாலன், உபசெயலாளராக மு.ரவீந்திரன், பொருளாளராக நா.யோகேஸ்வரராஜா, செயற்குழு உறுப்பினர்களாக க.சாந்தகுமார, எஸ்.மதுசூதனன், அருள்செல்வன், ந.ஜெயவீரசிகாமணி, சு.சிறிஸ்காந்தராஜா, தி.ஞானவேல், எஸ்.ஜெகப்பிரதாபன், தர்சன், எஸ்.குருபரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அதிபர்களே பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்களாக இருக்க வேண்டும் என்ற கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக மேற்படி கூட்டத்தில் பெரும்பான்மையோரின் ஆதரவுடன் அதிபர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சாதனை மாணவிகளின் அனுபவப் பகிர்வு



## பாலசுப்பிரமணியம் அபிராமி

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
கலைப்பிரிவு
தமிழ் B
புவியியல் B
வணிகப்புள்ளிவிபரவியல் B
மாவட்டநிலை - 06

இப்பெறுபேறு பெறுவதற்கு அருள் புரிந்த இறைவனுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். கற்றல் செயற்பாட்டிற்கு ஊக்குவிப்பு வழங்கிய குடும்பத்தினருக்கும், நண்பிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

விடா முயற்சி வெற்றிக்கு வழிகோலும் என்பதை நம்பியதால் இப்பேறுபேறு எனக்கு சாத்தியமானது. பாடங்களுக்கான சுருக்கக்குறிப்பு எடுப்பதன் மூலமும், எழுதிப்படிப்பதன் மூலமும் நல்ல பெறுபேறுகளை ஈட்டலாம். குறித்த இலக்கை அடையவேண்டுமாயின் பொழுது· போக்கு விடயங்களில் குறைந்த ஈடுபாட்டுடன் இருத்தல் அவசியம். எனது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் சேவையாற்றுவதே எனது இலட்சியமாகும்.



## கணேசு கீதாஞ்சலி

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
கலைப்பிரிவு
தமிழ் A
புவியியல் A
பொருளியல் A
மாவட்டநிலை - 23

நான் சித்தி பெற்றமைக்கு அருள் புரிந்த இறைவனுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது வெற்றிக்கு எனது விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் பெற்றோர்களின் ஊக்குவிப்பும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவரது கவனிப்பும் உறுதுணையாக இருந்தது.

அன்றாடம் கற்பித்த பாடங்களை நான் அன்றைய தினமும் படித்துக்கொண்டதுடன் தேவையான பயிற்சிப் புத்தகங்களையும் பாடசாலை நூலகத்திலும் பெற்று கற்றுக்கொண்டேன். எனவே எனது வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் எதிர்காலத்தில் சமூகத்திற்கு சேவையாற்ற விரும்புகிறேன்.



## இந்திரதாஸ் திவ்விகா

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
கலைப்பிரிவு
இந்து நாகரிகம் A
புவியியல் B
தமிழ் B
மாவட்டநிலை - 19

நான் சித்தி பெற்றமைக்கு அருள் புரிந்த இறைவனுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது கற்றலுக்கு உறுதுணையாக இருந்து என்னை இந்நிலைக்கு ஆளாக்கிய பெற்றோருக்கும், அதிபர், ஆசிரியர்களுக்கும், என்சக மாணவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்று கற்பிக்கும் பாடங்களை அன்று படித்தமையே எனது வெற்றிக்கு காரணம். மற்றும் என்னிடம் காணப்பட்ட தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், என்னைச் சார்ந்தோரது ஊக்குவிப்பும் எனது வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது. பாட ஆசிரியர்களின் ஆலோசனைக்கு இணங்க கடினமான பாடங்களை மிக ஆர்வத்துடன் படிப்பேன். நான் கற்றலுக்கு தேவையான நூல்களை பாடசாலை நூலகத்திலிருந்து பெற்றுக்கொண்டேன் எதிர் காலத்தில் சிறந்ததொரு ஆசானாக வர விரும்புகிறேன்.

தொகுப்பு : கே.கே.விசிந்தன்

நேரத்தைத் தள்ளிப் போடாதே தாமதத்தால் அபாயமான முடிவே ஏற்படும்.

- ஷேக்ஸ்பியர்


தினப்பதிப்பு

**தினமுரசு**

THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.thinamurasu.net**


## இன்னுமின்னும் ஒளி பெறவேண்டும்!

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்துள்ளார். இரண்டு நாட்கள் இங்கு தங்கியிருந்து பல நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார். இன்று காலை சுன்னாகத்தில் 'யாழ் ஒளி' புதிய மின்னூட்டல் நிலையத்தை ஆரம்பித்து வைக்கிறார். பின்னர் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு யாழ் மக்கள் சபையையும் சந்தித்துக் கலந்துரையாடுகிறார்.

நயினாதீவு புதிய இறங்குதுறையைத் திறந்துவைப்பதோடு, நாளை யாழ் போதனா வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஐந்து மாடி நவீன கட்டடத்தைத் திறந்து வைக்கிறார். ஜனாதிபதியின் இந்த விஜயத்தோடு குடாநாட்டில் மின்சாரத்துறையிலும் மருத்துவத்துறையிலும் அபிவிருத்தி மாற்றங்கள் நிகழ இருப்பது மகிழ்வுக்குரிய செய்தி.

ஏ9 பாதை அபிவிருத்தி வேலைகள் ஏறத்தாழ முடிவுக்கு வந்துவிட்டதாலும், புதிய மின்னூட்டல் நிலையம் தொழிற்பட இருப்பதாலும் குடாநாட்டில் இனி மின்சார வெட்டு இருக்காதென்றே அதிகாரிகள் கூறுகின்றனர். இது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் இணக்க அனுகுமுறையாலும் தொடர்ந்த விடாமுயற்சியாலும் குடாநாட்டுக்கு கிடைத்த ஒளி என்பதில் சந்தேகமில்லை. அதற்காக மக்களின் சார்பாக எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் சொல்லிக்கொள்கிறோம்.

யாழ் போதனா வைத்தியசாலை நவீன வசதிகளுடன் விரிவாக்கம் பெற்றுவருவதும் எமது மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமே. கொழும்பைப் போன்று, முக்கியமான சில உடற் பரிசோதனைகளையும், தங்கி நோய்தீர்க்கும் வைத்தியத்தையும் மேற்கொள்ளக்கூடிய வகையில் நமது வைத்தியசாலை மேம்பாடு பெறுவது கொழும்புப் பயணச் செலவையும் பல்வேறு சிரமங்களையும் குறைக்கும்.

குடாநாட்டினருக்கு மட்டும் என்றில்லை பொதுவாக நாடு முழுவதுமே சிறப்பான வைத்தியத் தேவைகளுக்கு கொழும்பை நாடியே செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக மருத்துவ வசதியும் கல்வியும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியும் ஒரே தரத்திலும் கிடைக்கச் செய்வதுதான் எந்த நாட்டின் அரசுக்கும் இலட்சியமாக இருக்க வேண்டும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில், கல்வியும் வைத்தியமும் போக்குவரத்தும் அனைத்து ஊர்களிலும் ஒன்றுபோல சமமான முறையில் இருப்பது சிறப்பாகக் கவனிக்கப்படுகிறது. நகரத்து மாணவன் பெறக்கூடிய கல்வியை கிராமத்து மாணவனும் பெறக்கூடியதாக இருக்க வேண்டும். வைத்திய வசதியும் அப்படித்தான். சுகாதாரத்திட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாகவும், நாட்டின் சகல பகுதிகளிலும் ஒரே மாதிரியான நிபந்தனைகள் வசதிகள் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, அபிவிருத்தியும் இவ்வாறுதான் பரவலாக்கப்பட வேண்டும். மக்களுக்குத் தேவையான அடிப்படைச் சுகாதாரத் தேவைகளை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை. எல்லா மக்களும் எந்தவிதமான தடையும் இல்லாமல் மருத்துவமனைகளையும், மருத்துவர்களையும் விரைவாக அனுகும் வகையில் நாட்டின் பல பாகங்களிலும் வைத்தியசாலைகளின் தரம் ஒரேபோல மேம்படுத்தப்பட வேண்டும்.

அனைவருக்கும் ஒரே மாதிரியான சிகிச்சை பெறும் வாய்ப்பு, மருத்துவத்திற்காக இடம்விட்டு இடம் போகவேண்டியதை இல்லாதொழித்தல், எல்லா இடங்களிலும் மருந்து, மாத்திரைகள் நியாயமான விலைகளில் கிடைப்பதை உறுதி செய்தல், ஒருவரின் பணம் செலுத்தும் திறனின் அடிப்படையில் அல்லாமல் தேவையின் அடிப்படையில் அவருக்குச் சுகாதாரச் சேவைகள் கிடைக்க வகைசெய்தல் என்பதெல்லாம் உறுதி செய்யப்பட வேண்டும்.

அதற்கான எத்தனங்களும் செயற்பாடுகளும் நடைபெறுகையில் அதைப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டியது பயன்பெறும் மக்களாகிய நமது கடமை.

- ஆசிரியர்

# தேர்தலுக்கு பதில் சர்வஜன வாக்கெடுப்பு

# ஏற்றுக்கொள்ளமறுக்கும் ஜே.வி.பி.

(கொழும்பு)

தேர்தல்களுக்கு பதிலாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜே.வி.பி தெரிவித்துள்ளது. தேர்தல்களை நடாத்தாது அரசாங்கத்தின் மீது மக்களுக்கு காணப்படும் விசுவாசத்தை நிரூபிக்க சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த முடியும் என அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன அண்மையில் தெரிவித்திருந்தார். எனினும், இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாக்குரிமையை கொள்ளையிடும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பொதுத் தேர்தலுக்குப் பதிலாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தற்போது காணப்படுகின்ற போதிலும், அது மக்களினால் அளிக்கப்பட்ட ஆணையாக கருதப்பட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கியே இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கம் சகல துறைகளிலும் வீழ்ச்சி கண்டு வருவதாகவும், குறிப்பாக பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் எதிர்வரும் தேர்தலில் இந்த அரசாங்கம் வெற்றியீட்டாது எனவும், அதன் காரணமாகவே சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தி ஆட்சியை நீடித்துக் கொள்ளும் முனைப்புக்களில் தீவிரம் காட்டி வருவதாகவும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# ஏற்றுக்கொள்ள முடியாத இனவாத சக்திகளின் பிரசாரம்

## அமைச்சர் பௌசி விசனம்

(கொழும்பு)

சில இனவாத சக்திகளின் பிரசாரம் ஆரோக்கியமானதல்ல என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார். சில கடும்போக்குவாதிகள் முஸ்லிம் இனத்திற்கும் இஸ்லாமிய மதத்திற்கும் எதிராக பிரசாரம் செய்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். சிங்கள - பௌத்த மக்களுடன் முஸ்லிம்கள் ஆரோக்கியமான உறவுகளைப் பேணி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அனைத்து மதங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் சர்வதேச அரங்கில் அபகீர்த்தியை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முஸ்லிம் சமூகத்தில் கடும்போக்குவாதிகள் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு இடையில் இணக்கப்பாடு கிடையாது. சிலர் ஏனைய முஸ்லிம் தலைவர்களை பலவீனப்படுத்தி தங்கள் பெயரை நிறுத்திக் கொள்ள முயற்சிக்கும் நிலைமை காணப்படுகின்றது.

தேவையற்ற பிரசாரங்கள் நீடித்தால் நாட்டில் மீளவும் இன முரண்பாடுகள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப் படுவதாக அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

# மீட்கப்படாத வாகனங்களை ஏலத்தில் விடுவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைவிடப்பட்ட வாகனங்களை தரம் பிரிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மீட்கப்பட்ட வாகனங்களில் பொதுமக்களினால் உரிமை கோரப்படாதுள்ள வாகனங்களை ஏலம் விடும் நோக்கிலேயே தரம் பிரிக்கும் நடவடிக்கை கிளிநொச்சியில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள இவ்வாகனங்களைத் தரம் பிரிக்கும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. கொழும்பிலிருந்து வருகை தந்த மோட்டார் போக்குவரத்துப் பிரிவினர் இவ்வாகனங்களை தரம் பிரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

1,100 வாகனங்கள் பயன்படுத்த முடியாதவையாகவும் 2,200 மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தக்கூடியதாகவும் இதுவரையில் தரம்பிரிக்கப்பட்டுள்ளன. பயன்படுத்த முடியாதவையாகக் கருதப்படும் 1,100 வாகனங்களையும் ஏலம் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளவற்றில் எஞ்சியுள்ள வாகனங்களை மற்றுமொரு குழுவினரும் வருகை தந்து தரம் பிரிக்க வேண்டியுள்ளது.

அனைத்து வாகனங்களும் முழுமையாக தரம்பிரிக்கப்பட்டு போக்குவரத்து அமைச்சின் அனுமதி பெற்ற பின்னரே வாகனங்களை ஏலம் விடுவதற்கு தீர்மானிக்கப்படுமென கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கான தூதுவரை திருப்பி அழைத்தது சவுதி

(கொழும்பு)

இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ் இன்று அதிகாலை நாடு திரும்பவுள்ளார் என கொழும்பிலுள்ள சவுதி அரேபிய தூதுவராலய வட்டாரங்கள் தெரிவித்தன.

24 மணித்தியாலங்களிற்குள் நாடு திரும்புமாறு கொழும்பிலுள்ள தூதுவருக்கு சவுதி அரேபிய அரசாங்கம் நேற்று முன்தினம் அவசரமாக அறிவித்திருந்தது. இதனையடுத்தே இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ் உடனடியாக நாடு திரும்பவுள்ளார். சவுதி அரேபியாவில் பணிப்பெண்ணாக கடமையாற்றிய மூதூரை சேர்ந்த ரிசான நபீகிற்கு கடந்த ஜனவரி 9 ஆம் திகதி மரண தண்டனை நிறைவேற்றியது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சவுதி அரேபியாவிற்கான இலங்கை தூதுவர் அஹமட் ஜவாத் கடந்த ஜனவரி 9ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தினால் மீள அழைக்கப்பட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ் திருப்பி அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு பாடசாலைகளில் மும்மொழி பயிற்சித் திட்டம்

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மும்மொழி அமுலாக்கல் திட்டத்திற்கமைவாக வடக்கிலுள்ள பாடசாலைகளில் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பன்னிரண்டு கல்வி வலயங்களிலுள்ள குறித்த பாடசாலைகளில் இப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகளை வழங்குவதற்கான தகுதியுடைய வளவாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணிகளை வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு ஆரம்பித்துள்ளது. (54)

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 22

**வே. அர்ச்சுனன்**

புலிகளின் குரல் தலைமைப் பணிமனைக்கு திரும்பிய ஜவானும், இறைவனும் தங்களிற்கு தலைவர் கொடுத்த மரியாதையையும், தலைவர் தங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் ஊறுவிளைவிக்காமல் நடந்து கொள்ள வேண்டுமென்று உறுதி எடுத்துக் கொள்கின்றனர். இதனைத் தொடர்ந்து புலிகளின் படையணிக்கு ஆட்சேர்ப்பது தொடர்பில் பெரியளவிலான பரப்புரைகளை புலிகளின் குரல் நிறுவனம் மேற்கொள்ளத் தொடங்கியது. அதாவது கடற்புலிகள், தரைப்படை, அரசியல் துறை, விமானப்படை, புலனாய்வுத்துறை, நிதித்துறை உட்பட புலிகளின் பல்வேறு கட்டுமானங்களிலும் உள்ள துறைசார்ந்த படையணிகளுக்கான ஆட்சேர்ப்பிற்குரிய பெரியளவிலான பரப்புரைகளை புலிகளின் குரல் நிறுவனம் பகிரங்கமாக முன்னெடுக்கத் தொடங்கியது.

இந்தக் காலகட்டத்தில் சண்டையும் உக்கிரமடைந்து காணப்பட்டது. கிளிநொச்சி நகரை கைப்பற்றுவதற்காக படையினர் முன்நகர்வுகளை மேற்கொண்டிருந்த சூழ்நிலையில், புலிகளின் குரல் நிறுவனம் தனது பரப்புரைகளை வேகமாக முன்னெடுத்தது. இருந்தபோதிலும் முன்னர், தாமாக இணைவது போன்று போராளிகள் புதிதாக இணைகின்ற தொகை பெரியளவில் இருக்காத சூழ்நிலையில், கட்டாய ஆட்சேர்ப்பை மேற்கொள்வதே பொருத்தமானது என புலிகளின் தளபதிகள் சிலர் பிரபாகரனிடம் தொடர்ச்சியாக வற்புறுத்தத் தொடங்கினர். இந்த நிலையில் கட்டாய ஆட்சேர்ப்பு என்பது பலமானதாக இருக்காது எனவும், ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் இந்திய இராணுவத்துடன் இணைந்து கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு தோற்றுப்போன வரலாறு இருக்கிறது.

எனவே கட்டாய ஆட்சேர்ப்பு என்பது மக்களிடையே எதிர்ப்பலைகளைத் தோற்றுவிக்க வல்லது என பிரபாகரன் மற்றும் பாலகுமாரன், தமிழ்ச் செல்வன் போன்றோர் தளபதிகளிடம் கூறிய போதிலும், களமுனைத் தளபதிகள் கட்டாய ஆட்சேர்ப்பு பல நாடுகளில் இடம் பெற்று வருகிறது. எனவே நாங்களும் கட்டாய ஆட்சேர்ப்பை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினர். வட்டக்கச்சிப் பகுதியில் பிரபாகரனுக்கும், தளபதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இந்த காரசாரமான விவாதங்களின் பின் பிரபாகரனும், தளபதிகளின் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்ததுடன், கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபடுகின்ற பொழுது வருகின்ற எதிர்ப்பலைகளை கவனமாக கையாண்டு எதிர்ப்புகள் பெரியளவில் உருவாகாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமெனச் சொல்லி கட்டாய ஆட்சேர்ப்பிற்கு பிரபாகரன் பச்சைக்கொடி காட்டிவிட்டார்.

இதனைத் தொடர்ந்து கட்டாய ஆட்சேர்ப்பு மையங்கள் வன்னியில் பல பகுதிகளிலும் உருவாக்கப்பட்டது. முதற் கட்டமாக "வீட்டுக்கு ஒருவர் நாட்டைக் காக்க வாருங்கள்" என்ற கோசத்துடன் வீட்டுக்கு ஒருவரை ஆட்சேர்க்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கணிசமான அளவு மக்கள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் எதிர்க்கத் தொடங்கினர். இருந்தபோதும் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்ட புலனாய்வுத் துறையினர் மற்றும் அரசியல் துறையினர் பிழையான வழிமுறைகள் பலவற்றைக் கையாண்டு இந்தக் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்த கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையை நியாயப்படுத்தி புலிகளின் குரல் வானொலி பெரியளவிலான பிரசாரப் பணிகளை வன்னியில் முன்னெடுத்து வந்தது.


ஜவானும், இறைவனும் இறுதிவரைக்கும் உறுதியாக இருந்து தங்களது உயிரை மாய்த்துக் கொண்ட போதிலும், இயக்கத்தில் இருந்த ஏனைய துறைசார்ந்த தளபதிகள் ஏனோதானோ என்றே நடக்க முற்பட்டனர். முகமாலையில் படையினர் தங்களது காவலரண்களை கொங்கிரீற் தூண்களால் நிர்மாணித்துக்கொண்டிருந்த சமாதான காலப்பகுதியில் புலிகளின் தளபதிகள் சிலர் தங்களது வீடுகளை மாபிள்களால் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். சாதாரண போராளிகளும் இறைவன், ஜவான் போன்ற விசுவாசமுடன் செயற்பட்ட போராளிகளும் முழுமையான பணிகளில் ஈடுபட்ட பொழுதிலும், பல தளபதிகள் மற்றும் துறைசார்ந்த பொறுப்பாளர்கள் தங்களது குடும்பத்துடன் சுற்றுலா சென்று வருவதிலும் ஆடம்பரமாக வாழ்வதிலுமே நாட்டம் செலுத்தினர். சாதாரண மக்கள் கால்போத்தல் தேங்காய் எண்ணெய் வாங்குவதற்கே கஷ்டப்பட்டிருந்த சூழ்நிலையில், பல பொறுப்பாளர்களும், அவர்களது மனைவிமார்களும் பசுநெய் வாங்குவதிலும், எள்ளு வாங்குவதிலும் ஈடுபட்டனர். இவ்வாறு மக்களின் கஷ்டங்களை உணராமல் வன்னியில் செயற்பட்ட பல துறைசார்ந்த பொறுப்பாளர்களையும் தளபதிகளையும் தலைமை அடையாளம் காணத் தவறியதுடன், அனைவரும் விசுவாசமாகவே நடக்கிறார்கள் எனவும் எண்ணிக்கொண்டது. இதன் விளைவுகள் முள்ளிவாய்க்காலிலேயே பிரபாகரனுக்கு முழுமையாகத் தெரியவந்தது.

ஊடகங்களின் பரப்புரைகள் மூலம் உலக நாடுகளை தம்பக்கம் திருப்பலாம் என்ற பிரபாகரனின் நம்பிக்கையும் முள்ளிவாய்க்கால் முடிவுகள் வரை கைகூடாமலே போய்விட்டது. ஆனால் கிளிநொச்சியில் புலிகளின் குரல் இருந்து செயற்பட்ட காலம் முதல் முள்ளிவாய்க்கால் முடிவுகள் வரை பிரபாகரனின் ஆணையை மீறாமலே ஜவானும், இறைவனும்' செயற்பட்டு வந்தனர். தங்களது பரப்புரைகள் ஊடாக பெருமளவானோரை இயக்கத்தில் இணைப்பதில் இறைவன் பெரும் பங்கு ஆற்றினார். ஆனால் யதார்த்தத்தை உணராமல் மக்களை இறுதிக் களமுனைவரை இழுத்துச் சென்ற பழி கணிசமான அளவில் இவர்களையும் சாரும்.

கிளிநொச்சியை புலிகள் கைவிட்டு பின்வாங்கத் தொடங்கிய சந்தர்ப்பத்தில் புலிகளின் குரல் நிறுவனத்தை விசுவமடுவில் வைத்து இயக்கவேண்டிய தேவை இயக்கத்திற்கு ஏற்படுகிறது. இந்த சூழ்நிலையில் மற்றொரு நெருக்கடி புலிகளின் குரலிற்கு ஏற்படுகிறது. அதாவது கிளிநொச்சியில் புலிகளின் குரல் இயங்கிய பொழுது பல விளம்பரங்கள் புலிகளின் குரலிற்கு கிடைத்து வந்தது. இதனால் நிதிவளப் பிரச்சினை இருக்கவில்லை. ஆனால் விசுவமடுவிற்கு வந்த பின்னர் மக்கள் வர்த்தக விளம்பரங்களை தவிர்த்து வந்தனர். இதனால் பெரியளவிலான நிதி நெருக்கடியை புலிகளின் குரல் சந்திக்கவேண்டி ஏற்பட்டது. இந்த நிலையில், அப்போது லண்டனில் தங்கியிருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் லண்டனில் புலிகளின் குரலிற்கு ஆதரவாக செயற்பட்டு வந்த கோணேஸ் என்பவர் 12ஆயிரம் பவுண்ஸ்களை சேகரித்து அந்த நிதியை புலிகளின் குரலிற்கு வழங்குமாறு தெரிவித்திருந்தார். இதற்கு உடனடியாகவே இறைவன் எதிர்ப்புத் தெரிவித்தார். சுரேசிடம் கொடுத்தால் அந்த நிதி தங்களிற்கு கிடைக்காது என இறைவன் தனது அதிருப்தியையும் ஆட்சேபனையையும் கோணேஸிடம் தெரியப்படுத்தினார். சுரேசை நாங்கள் ஒருபோதுமே நம்புவதில்லை நீங்கள் ஏன் சுரேசிடம் நிதி கொடுத்தீர்கள்? அவர்களை நாங்கள் காலத்தின் தேவை கருதி விரும்பியோ விரும்பாமலோ கூட்டமைப்பில் இணைத்துள்ளமை தவிர, அவர்களை நம்பிக்கைக்குரியவர்களாக நாங்கள் ஒருபோதுமே கருதுவதில்லை. மக்களிடம் சுரண்டுகின்ற மக்களிடம் கப்பம் பெறுகின்ற பல நடவடிக்கைகளை அவர்கள் கூட்டமைப்பில் இருந்தவாறு செய்வதாக யாழ்ப்பாணத்திலிருந்து எங்களிற்கு தகவல்கள் வந்தவண்ணமே உள்ளது. படையினருடன் இணைந்து பாஸ் வழங்குவது, விமானப் பயணச்சீட்டு வழங்குவது, இதற்கு கப்பம் பெறுவது போன்ற பல செயற்பாடுகளில் சுரேஸ் அணியினர் ஈடுபட்டு வருகின்றனர். எனவே நீங்கள் கொடுத்த பணம் எங்களது கைக்கு ஒருபோதுமே கிடைக்காது என்று இறைவன் விசனத்தை வெளியிட்டார். இறைவன் எதிர்பார்த்ததைப் போலவே, 'ஆம் உடனடியாக இந்த நிதியை நான் அவர்களிடம் சேர்ப்பிப்பேன்' என வாக்குறுதி அளித்து நிதியை வாங்கிய சுரேஷ் பிரேமச்சந்திரன் முள்ளிவாய்க்கால் முடிவுகள் ஏற்படும் வரை புலிகளிற்கு அந்த நிதியை வழங்கவில்லை. அந்த நிதியைப் பயன்படுத்தி தனது கட்டைப்பிராயிலுள்ள இல்லத்தை வளம்படுத்தும் வேலையில் சுரேஸ் ஈடுபட்டதையும் மிகுதி நிதியை தனது வங்கிக் கணக்கில் வைப்பில் இட்டதையும் புலிகள் கடைசிநேரத்தில் அறிந்திருந்தனர்.

அடுத்து புலிகள் எந்த வழியில், புலிகளின் குரல் நிறுவனத்திற்கு நிதியைப் பெற்றனர்? அந்த நிதியைப் பெற்று தங்களை வளர்த்தனரா? அல்லது அழித்தனரா? நடந்தது என்ன என தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)





**கட்டாய ஆட்சேர்ப்பிற்கு பிரபாகரன் பச்சைக்கொடி காட்டிவிட்டார். கட்டாய ஆட்சேர்ப்பு மையங்கள் வன்னியில் பல பகுதிகளிலும் உருவாக்கப்பட்டது. முதற் கட்டமாக "வீட்டுக்கு ஒருவர் நாட்டைக் காக்க வாருங்கள்" என்ற கோசத்துடன் வீட்டுக்கு ஒருவரை ஆட்சேர்க்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கணிசமான அளவு மக்கள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் எதிர்க்கத் தொடங்கினர். இருந்தபோதும், புலிகளின் புலனாய்வுத் துறையினர் மற்றும் அரசியல் துறையினர் பிழையான வழிமுறைகள் பலவற்றைக் கையாண்டு இந்தக் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டனர். அதை நியாயப்படுத்தி புலிகளின் குரல் வானொலி பெரியளவிலான பிரசாரப் பணிகளை வன்னியில் முன்னெடுத்தது.**

## ஜனாதிபதியை சந்தித்தார் "றோ" அமைப்பின் தலைவர்

(கொழும்பு)

இந்தியாவிற்கு வழிபாட்டிற்காகச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அந்நாட்டின் உளவு அமைப்பான "றோ" வின் தலைவர் ஆலோக் ஜோசி சந்தித்து பேச்சு நடத்தியுள்ளதாக இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்திய விருந்தினர் மாளிகையில் வைத்து இடம்பெற்ற இந்தச் சந்திப்பு, சுமார் 30 நிமிடங்கள் வரையில் நீடித்ததாக தெரிவிக்கப் படுகிறது.

எனினும் இதன்போது பேசிக்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் தகவல் எவையும் வெளியாகவில்லை.

இரண்டு நாட்கள் இந்தியாவில் தங்கி இருந்த ஜனாதிபதி, இந்தியாவின் எந்த அரசியல் தலைவர்களையும் சந்தித்திருக்காத நிலையிலேயே, "றோ" உளவு அமைப்பின் தலைவர் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார்

## வெளிநாட்டவருக்கு காணி விற்பனை; வருகிறது சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்பனை செய்ய முடியாத வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தம்புள்ள பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது.

வறிய மக்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

காணிச் சட்டத்தை திருத்தி அமைப்பதன் மூலம் வெளிநாட்டவர்கள் இலங்கையில் காணிகளை கொள்வனவு செய்ய முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.



## 58 சிறுவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்று

(கொழும்பு)

கடந்த வருடத்தின் இறுதிக் காலப்பகுதியில் நாட்டில் எச்.ஐ.வி.தொற்றுக்குள்ளான 50 பேர் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் நாட்டில் ஆயிரத்து 649 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதற்கு பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள் மிக முக்கிய காரணமாக அமைகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் எச்.ஐ.வி.தொற்றுக்குள்ளான 58 சிறுவர்களும் பதிவாகியதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## வெளிநாட்டு எலிகள் கொழும்பில் படையெடுப்பு

கொழும்பில் வெளிநாட்டு எலிகளின் படையெடுப்பு அதிகரித்துள்ளதாகவும் இதன் காரணமாகவும் தொற்று நோய்கள் பரவும் ஆபத்திருப்பதால் மக்கள விழிப்புடன் இருக்க வேண்டுமென்றும் கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மாநகரில் எலிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்படும் உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களின் மூலமே வெளிநாட்டு எலிகள் இங்கு



படையெடுத்துள்ளன.

கொழும்புத் துறைமுகம், அதன் களஞ்சிய சாலைகள் அதனை அண்டிய பிரதேசங்கள் புறக்கோட்டை, கோட்டை, பொரளை சந்தைத் தொகுதி பிரதேசங்களில் எலிகள் அதிகமாக காணப்படுவது கண்டுப் பிடிக்கப்பட்டுள்ளது.

இவ் எலிகளின் சிறுநீர் மற்றும் எச்சங்கள் மூலம் தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதனால் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றார்.

## கைதிகளிடம் சோதனை சிக்கியது போதைப்பொருள்

(கொழும்பு)

கொழும்பு கலாபவனத்தில் பணிபுரிந்து வந்த கைதிகளிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது போதைப் பொருட்கள் உட்பட பல்வேறு உபகரணங்கள் சிறைச்சாலை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைப் பொலிஸாரின உளவுப் பிரிவுக்கு கிடைத்த விசேட பணிப்பின் பேரில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பீ.டபிள்யூ கொடிப்பிலி தெரிவித்தார்.

இவர்களிடம் இருந்து கே.ஜீ.வர்க்க கஞ்சா பைக்கற்றுக்கள் பல, கையடக்க தொலைபேசியுடன் சிம் அட்டைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் உள்ளிட்டவை மீட்கப்ப்ட்டுள்ளன.

இதனிடையே, நேற்றுமுன் தினம் வெலிக்கடை சிறைச்சாலையில் கடுழிய தண்டனை பெற்ற குற்றவாளிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பகுதியில் திடீர் சோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்போது 12 கையடக்கத் தொலை பேசிகள் கைப்பற்றப்பட்டதுடன், இவற்றுள் இரண்டு தொலை பேசிகள் 3ஜீ ரக தொலைபேசிகள், பல சிம் அட்டைகள், தொலைபேசி சார்ஜர்கள், டேடா கேபிள் மற்றும் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த விசேட நடவடிக்கையில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சுமார் 60 அதிகாரிகள் பங்குகொண்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பீ. டபிள்யூ கொடிப்பிலி குறிப்பிட்டார்.

## அதிகரித்துள்ள இணைய வீசா

இணையத்தின் ஊடாக வீசா பெற்றுக்கொள்வோரினீ எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளுக்கு நாள் இணையத்தின் ஊடாக வீசா பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக தகவல்த் தொடர்பாடல் முகவர் நிறுவகம் அறிவித்துள்ளது.

மாதாந்தம் சுமார் ஒரு இலட்சம் பேர் வீசா பெற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இணையத்தின் ஊடாக வீசா வழங்குவதன் மூலம் உரிய முறையில் துரித கதியில் சேவைகளை வழங்க முடிவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு இணையத்தின் ஊடாக வீசா வழங்குவதன் மூலம் ஒரு பில்லியன் ரூபா வருமானம் கிட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## கொரியாவில் பட்டப்பிடிப்பு; நால்வருக்கு வாய்ப்பு

முதுமாணி மற்றும் கலாநிதி பட்டப்படிப்பை கொரியாவில் மேற்கொள்ள விரும்பும் இலங்கையர்கள் நால்வருக்கு, முழு அளவிலான புலமைப்பரிசினை வழங்க கொரிய குடியரசு முன் வந்துள்ளது.

கல்வி மற்றும் இரு தரப்பு உறவுகளை வெளிநாடுகளுடன் மேம்படுத்தும் நோக்கில் இந்த உயர் கல்வி புலமைப்பரிசில் திட்டத்தினை கொரிய அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

2013 ஆம் ஆண்டிற்காக 149 நாடுகளைச் சேர்ந்த 176 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர் என கொழும்பில் உள்ள கொரிய தூதுவராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் முன்னர் இலங்கையர் ஒருவருக்கு மட்டுமே இந்த புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.

இந்த வருடம் அந்த எண்ணிக்கையினை நான்காக அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க தகுதியான இலங்கையர்கள், சம்பந்தப்பட்ட ஆவணங்களினை கொழும்பு 7 இல் உள்ள இலக்கம் 41, கில்ட் பட் கிறசன்ற் இல் அமைந்துள்ள கொரிய குடியரசு தூதுவராலயத்தில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

## "பேட்ஸ்" கிருமிநாசினி விசிறல்; உடன் நிறுத்த நடவடிக்கை

(கொழும்பு)

பேட்ஸ் (Bates) உள்ளிட்ட கிருமிநாசினிகள் நுளம்பு ஒழிப்புக்கெனப் பயன்படுத்தப்படுவதை உடனடியாகத் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பி.ரி.ஐ. பக்ரீரியா நுண்ணுயிரைப் பாவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.


பயிர்ச் செய்கைகளுக்குத் துணைபுரியும் தேனீக்கள், குளவிகள், வண்ணத்திப்பூச்சிகள், சிலந்திகள் போன்றவற்றுக்கு பேட்ஸ் போன்ற கிருமிநாசினிகள் பாதிப்பு ஏற்படுத்துகின்ற போதிலும் பி.ரி.ஐ. பக்ரீரியாக்கள் அவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கொழும்பு மாநகர சபை, தெகிவளை, கல்கிசை மாநகர சபை, கொலன்னாவ நகர சபை உள்ளிட்ட பிரதேசங்களில் மாத்திரம் நுளம்பு ஒழிப்புக்காக பி.ரி.ஐ. பக்ரீரியாவை ஒரு தடவை விமானம் மூலம் விசிறுவதற்கு 225 மில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினையும் அமைச்சரவையையும் தாம் அறிவூட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் பி.ரி.ஐ. பக்ரீரியா சுமார் இருவாரங்கள் அளவில் தான் உயிருடன் காணப்படும் என்றும் அதனால் அதனை மீண்டும் மீண்டும் விமானம் மூலம் விசிற அதிக செலவு ஏற்படும் என்றும் மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டி இருப்பதையும் அமைச்சரவையின் கவனத்திற்கு எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை நுளம்பு ஒழிப்புக்காக பி.ரி.ஐ. பக்ரீரியாவை விரிவான அடிப்படையில் மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்காக விஷேட நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்குமாறும் அமைச்சர் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.



இந்தியாவின் சிறி ரேணுகா சீனி நிறுவனம் அம்பாந்தோட்டையில் 220 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் முதலீடு செய்யவுள்ளது. இதற்கான ஒப்பந்த நகலை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன குறித்த சீனி நிறுவன முதலீட்டாளரிடம் கையளிப்பதைக் காணலாம்.

# கல்விப் பருவமாற்றத்திற்கேற்ப மாணவர்களை வளர்க்கும் திட்டம்

## — கோட்டக்கல்விப்பணிப்பாளர் நற்குணலிங்கம் —

(வடமராட்சி)

மாணவர்கள் கல்விப்பருவத்தில் எதிர்கொள்ளும் மாற்றங்களை இனம்கண்டு அரசாங்கத்தினால் பல்வேறு திட்டங்களை அவர்களின் எதிர்கால நலன்சார்ந்து நிறைவேற்றப்பட்டு வருவதாக கரவெட்டி கோட்டக்கல்விப்பணிப்பாளர் ச.நற்குணலிங்கம் எடுத்தியம்பியுள்ளார்.


கரவெட்டி - கட்டைவேலியாக்காடு விநாயகர் வித்தியாலய தரம் 3 மாணவர்களுக்கான விழா அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டாம் முதன்மை நிலைக்குள் பிரவேசிக்கும் பிள்ளைகளுக்கான மகழ்ச்சிகரமான ஆரம்ப நன்நாள் இன்றாகும். ஏறத்தாழ இரண்டாம் வருட காலத்தை முதலாம் முதன்மை நிலை ஆசிரியருடன் கழித்த மாணவர்கள் மூன்றாம் தரத்தில் பிரவேசிக்கும் போது ஒரு புதிய வகுப்பறைச் சூழலை மட்டுமல்லாது, ஒரு புதிய ஆசிரியருடனான சந்திப்பும் ஏற்படும் நாள் இன்றாகும்.

இரண்டாம் தர ஆசிரியரால் மூன்றாம் தர ஆசிரியரிடம் கையளிக்கப்படும் மாணவர்கள்,

எதிர்கொள்ளும் மாற்றங்களை இனம்கண்டு அவற்றை எதிர் கொள்ளும் வகையிலான திட்டத்தை மூன்றாம் தர ஆசிரியர் வகுத்துக் கொள்ளவேண்டும். இவ் வேலைத்திட்டமானது தரம் மூன்று மாணவர்களது இயலுமை, இயலாமைகளை இனம்கண்டு அதற்கேற்ப வகுத்துக் கொள்ளல் மிக முக்கியமான விடயமாகும் என்றார். (116)

# முழங்காவில் கிருஸ்ணாநகரில் வறிய மாணவர்களுக்கு உதவிகள்




(முழங்காவில்)

முழங்காவில் கிருஸ்ணாநகர் வரதராயப் பெருமாள் ஆலய அறநெறி செயற்பாட்டாளர்களால் வறியமாணவர்களுக்கு 10 துவிச்சக்கரவண்டிகளும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களில் மிகவும் தேவையுடைய 10 மாணவிகளுக்கு ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் 10 துவிச்சக்கர வண்டியும் 200 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. ஆலய பரிபாலன சபையின் தலைவர் இ.குபேந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் விசேட அன்னதான பூசையும் நடைபெற்றது. இந் நிகழ்வில் ரிஷி தொண்டுநாத சுவாமிகளும், யாழ்.மாவட்ட இந்து மாமன்ற இணைப்பாளரும், முழங்காவில் கிராம அலுவலரும் மற்றும் ஆலய அர்ச்சகர் ஆகியோர் கலந்து கொண்டு இந்த உதவிகளை வழங்கி வைத்தனர்.

# கவனிக்கப்பட வேண்டிய ஏ-9 வீதி கைதடிப்பாலம்



(கல்வயல்)

யாழ்ப்பாணம் ஏ-9 பிரதான வீதியில் அமைந்துள்ள கைதடிப்பகுதி தகரங்களினாலான "பாலம்" ஒன்றைக் கொண்டுள்ளது. இப் பாலமானது கடந்த ஒரு சில தினங்களாக சிறு சிறு சேதங்களைக் கொண்டுள்ளது.

தகரத்தினாலான பாலத்தில் பலதரப்பட்ட கனரக வாகனங்கள் பயணிக்கின்றன. இதனால் இப் பாலப்பகுதி சற்று சேதமடைந்து காணப்படுகிறது. மேலும் இப் பாலப்பகுதிகளது தகரங்கள் அதன் மட்டத்திலிருந்து சற்றுக் கீழ் இறங்கியும், வெடித்தும் காணப்படுகிறது. இப்பாதையூடு கனரக வாகனங்கள் பயணிப்பு அதிகமாகவுள்ளது.

இவ்வாறு சேதமடைந்த பகுதியில் மீண்டும் மீண்டும் கூடிய அளவு பாரமான பொருட்களுடன் வாகனங்கள் செல்லும் போது அப் பாதிப்பு அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

அத்துடன் வாகனசக்கர ரயர்கள் சேதமாக்கப்படும் சந்தர்ப்பங்களும் அதிகமாக உள்ளது.

இவ்வாறு ஏனைய சிறிய ரக வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்றனவும் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின்றன.

எனவே இப் பாலம் அமைந்துள்ள பகுதியின் சேதங்களை விரைவில் செப்பனிட்டு தருமாறும், இவை விரைவில் சேதமடையாது இருப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறும் சாரதிகளும், மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ,43)

# தற்காலிக வியாபாரிகள் மோசடி; நிரந்தர வர்த்தகர்கள் அவலம்

(நெல்லியடி)

நெல்லியடி நகரப்பகுதியில் பல்வேறு இடங்களில் இருந்து வரும் வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் தமது அன்றாட ஜீவனோபாயத்துக்காக அண்மைக்காலமாக தொழில் புரிந்து வருகின்றனர். இவர்கள் ஒரு சிலருடன் நல்லுறவுகளைப் பேணி நிதிமோசடிகளில் ஈடுபட்டுவருவதனால் நெல்லியடி நகர நிரந்தரமாக வர்த்தகசங்கத்தில் அங்கத்துவம் பெற்ற வர்த்தகர்கள் தொழில் முயற்சிக்காக முதலீடுகளை மேற்கொள்வதற்கு பல்வேறுபட்ட அசௌகரியங்களை சந்தித்துவருவதாக நெல்லியடி வர்த்தகத் தலைவர் எஸ்.அகிலதாஸ் கவலை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெல்லியடி வர்த்தகத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள வர்த்தகர்கள் தற்போதும் எதிர்காலத்திலும் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் மற்றும் பாதிப்புக்களில் இருந்து தங்களை விடுவிப்பதற்கான சில ஆலோசனைகள் ஏற்கனவே யாழ்.மாவட்ட வர்த்தகசங்கத்தின் சம்மேளனத்தினால் முன்வைக்கப்பட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில், வர்த்தகர்கள் தங்களின் வருமானத்துக்கேற்ப திட்டங்களை தொடங்க வேண்டும், வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளிலும் முதலீட்டு நடவடிக்கைகளிலும் மற்றும் கடன் பட்டுத் தொடங்கும் நடவடிக்கைகளிலும் திட்டமிடல் இல்லாமல் எக்காரணம் கொண்டும் செயற்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். எப்போதும் வர்த்தகர்கள் நலன் சார்ந்த முதலீடுகள் மேற்கொள்ளப்படும்போது ஆலோசனைப் பெற்றுச் செய்யுங்கள்,

வர்த்தகர்கள் அளவுக்கதிக மான பொருட்களை கொள்வனவு செய்தலை தவிர்த்து தங்கள் ஸ்தாபனம் அமைந்துள்ள சூழலில் மக்களின் தேவைக்கேற்ப பொருட்களை கொள்வனவு செய்தல் சிறந்தது.

தற்போது வட்டிவீதம் நாட்டில் கூடியிருப்பதனால் அளவுக்கதிகமாக கடன்பட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொண்டு வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஏதும் பெற்ற கடன் செலுத்துவதற்காக மீளவும் அதிக வட்டிக்கு கடன் முறையை தவிர்த்துக்கொள்ள வேண்டும், வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சட்டரீதியாக அதனைச் செயற்படுத்தல், விலைக் கட்டுப்பாடு விலைப் பட்டியல் இடுதல் மற்றும் காலாவதியான பொருள்களை விற்பனை செய்தலைத் தவிர்த்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பொருட்களை தவிர்த்து ஏனைய பொருட்களை விற்பனை செய்வதை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (116)

# முரசின் இன்றைய பலன்

**(12.02.2013 - செவ்வாய்க்கிழமை)**

**நந்தன வருஷம் தை மாதம் 30 ஆம் திகதி. நட்சத்திரம் பூரட்டாதி. மரணம் பின்னிரவு 05.19 வரை. திதி துதியை முற்பகல் 11.43 வரை. இராகுகாலம் 03.34 - 05.04 வரை. சுபநேரம் 11.04 - 12.34 வரை.**

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **மேடம்** | தடைகளைத் தகர்ப்பீர்கள். உற்சாகமான நாள். பணவரவால் வீட்டில் மகிழ்ச்சி. சொத்து வாங்க யோகம். விருந்தும் கொண்டாட்டமும் இருக்கும். தாய் வழி உறவினரின் உதவி. வெற்றி. |
| **ரிஷபம்** | நற்செயல்களால் பெருமை பெறுவீர்கள். பேச்சில் சாந்தமும், இனிமையும். சம்பளம், பதவி உயர வாய்ப்பு. உறவினர் நண்பர் மத்தியில் செல்வாக்கு. குடும்ப ஒற்றுமை, மகிழ்ச்சி. |
| **மிதுனம்** | உழைப்பினால் உயர்வு. புதிய திட்டங்கள் பலனளிக்கும். தொல்லை விலகும். ஆதாயம். நிலம் தொடர்பில் அனுகூல பலன். சுபநிகழ்வு நடத்த திட்டம். மாணவர்க்கு வெற்றி. |
| **கடகம்** | சமூகத்தில் நன்மதிப்பு. விவேகத்தால் அனுகூலம். தொழில்வளம் சிறந்து, சாதனை. சேமிப்பீர்கள். வெளியூரிலிருந்து சுபசெய்தி. உபாதைகள் இருக்கும். குடும்பத்தினர் பாசம். |
| **சிம்மம்** | கணவன்-மனைவி அன்யோன்யம். கடன் தீரும். சமூகத்தில் மதிப்பு. நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். பிரயாணம். ஆலோசனைகள் உங்களை மாற்றும். திடீர் திருப்பங்கள். நன்மை. |
| **கன்னி** | தர்மசங்கடமான சூழல் ஏற்படலாம். மனச்சாட்சியுடன் செயல்படுவீர்கள். அதிக உழைப்பு. கொஞ்சம் பணக் கடன். போக்குவரத்தில் கவனம். தாயிடமிருந்து நம்பிக்கை. ஓய்வு தேவை. |
| **துலாம்** | பேசி காரியங்கள் முடிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ். உங்களால் மற்றவர்கள் லாபம். வேலையில் புது பொறுப்புகள். கடின உழைப்பு வெற்றிக்கு வித்திடும். விருந்து விசேஷம். |
| **விருச்சிகம்** | முயற்சித்த காரியம் இனிதே நிறைவேறும். உறவினர், நண்பர் பாராட்டுவர். தொழில் வளர்ச்சியில் அனுகூலம். தாராள பணவரவு. உடல்நலம் சிறக்கும். குடும்ப மகிழ்வு. |
| **தனுசு** | எல்லோரிடமும் அன்பாக இருப்பீர்கள். முக்கிய செயல் ஒன்று நிறைவேறும். பணியில் நேர்த்தி. தொழில் மனநிறைவு தரும். ஆதாய பணவரவு. எதிர்ப்புகள் விலகும். குடும்ப பாசம். |
| **மகரம்** | மனம் மகிழும் நிகழ்வுகள். பணியில் சுறுசுறுப்பு. உழைப்பு துணை நிற்கும். நல்லவர் உதவி. அறப்பணி ஈடுபாடு. உறவினர் வருகை. பணவரவும், நன்மையும். சுப நிகழ்ச்சி. |
| **கும்பம்** | செயல்களில் திறமை. எதிர்கால வளத்திற்கு அனுகூலம் உருவாகும். தொழில் வளர்ச்சி. அதிக வரவு. வீட்டுப்பொருட்கள் வாங்குவீர்கள். அரசு உதவி. உறவுகள் வருகை. |
| **மீனம்** | உற்சாக மனது. வெகுநாள் விருப்பம் நிறைவேறும். கூடுதல் மூலதனம் செய்து, தாராள பணவரவு. உறவினர்களின் வருகை, வீட்டில் மகிழ்ச்சி. உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு. |

# கோட்டைவிட்டார் நடால்



(வினாடெல்மர்)

சிலி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் நட்சத்திர வீரர் நடால் தோல்வியடைந்தார்.

சிலி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி நேற்று சிலியின் வினா மெல்மார் நகரில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் ஸ்பெயின் ரபெல் நடால் மற்றும் ஆர்ஜென்ரீனாவின் ஹோராசியாவை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நடால் 6-7 (2-7), 7-6 (8-6), 6-4 என்ற கணக்கில் தோல்வியடைந்தார்.

# மூன்றாவது தடவையும் கிண்ணம்



(ஜோகனஸ்பேர்க்)

ஆபிரிக்க நாடுகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்துப் போட்டியில் நைஜீரிய அணி மூன்றாவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

ஆபிரிக்க நாடுகள் கலந்துகொண்ட கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டம், தென்னாபிரிக்க தலைநகர் ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்றது. இதில் இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்ற நைஜீரிய அணி, பர்கினா பாசோ நாட்டை சந்தித்தது.

மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆட்டத்தில் நைஜீரியா 1-0 என்ற கோல் கணக்கில் பர்கினா பாசோவை வென்றது. இந்த வெற்றியின் மூலம் நைஜீரியா மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ரொனால்டோ ஹட்ரிக் வென்றது ரியல் மட்ரிட்



(மட்ரிட்)

செவில்லா அணிக்கு எதிரான லா லிகா கால்பந்துப் போட்டியில், கிறிஸ்டியானோ ரொனால்டோ ஹட்ரிக் கோல் அடித்து கைகொடுக்க, ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் உள்ள மட்ரிட் நகரில், லா லிகா கால்பந்து தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் ரியல் மட்ரிட், செவில்லா அணிகள் மோதின. ஆட்டத்தின் தொடக்கத்தில் இருந்து ரியல் மட்ரிட் அணியின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. இந்த அணியின் கரிம் பென்ஜிமா (18ஆவது நிமிடம்), கிறிஸ்டியானோ ரொனால்டோ (26ஆவது) தலா ஒரு கோல் அடித்தனர். இதற்கு செவில்லா அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் ரியல் மட்ரிட் அணி 2-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில், அபார ஆட்டத்தை தொடர்ந்த ரொனால்டோ, 46, 59ஆவது நிமிடங்களில் கோல் அடித்து, ஹட்ரிக் சாதனை படைத்தார். ஆட்டத்தின் 87ஆவது நிமிடத்தில் செவில்லா அணியின் மானு டெல் மோரல் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார். ஆட்டநேர முடிவில், ரியல் மட்ரிட் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதுவரை விளையாடிய 22 லீக் போட்டியில் 13 வெற்றி, 4 சமநிலை, 5 தோல்வி உட்பட 43 புள்ளிகளுடன் ரியல் மட்ரிட் அணி 3ஆவது இடத்தில் உள்ளது. முதலிரண்டு இடங்களில் பார்சிலோனா (59 புள்ளி), அட்லெடிக்கோ டி மட்ரிட் (50 புள்ளி) அணிகள் உள்ளன.

# முதல் அணி



(மெல்பேர்ன்)

ஒருநாள் போட்டி வரலாற்றில் 500 வெற்றியை பதிவு செய்த முதல் அணி என்ற சாதனையை அவுஸ்ரேலிய அணி படைத்துள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிராக நேற்று முன்தினம் மெல்பேர்னில் நடைபெற்ற ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலமே அவுஸ்ரேலிய அணி இச்சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இதுவரை 811 போட்டிகளில் பங்கேற்றுள்ள அவுஸ்ரேலிய அணி 500 வெற்றி, 275 தோல்வி, 9 சமநிலையைச் சந்தித்துள்ளது. 27 போட்டிகளுக்கு முடிவு இல்லை. இப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் பாகிஸ்தான் (780 போட்டி, 419 வெற்றி), மூன்றாவது இடத்தில் இந்தியா (817 போட்டி, 405 வெற்றி) உள்ளன.

சாதனை குறித்து அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். ஒரு நாள் போட்டிகளில் அணியின் ஆட்டத்தின் திறன் மேம்பட்டிருப்பதாகவும், வீரர்களின் வரவு அணிக்கு ஆரோக்கியம் மிக்கதொன்னதாக அமைந்துள்ளது எனவும் கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்துள்ளது.

# இலங்கை கிரிக்கெட் அணி முகாமையாளர் நீக்கம்

(கொழும்பு)



இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் சரித்சேனநாயக்க நீக்கப்பட்டுள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழு இதற்கான முடிவை எடுத்துள்ளது. இதுகுறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் உபாலி தர்மதாச, இலங்கை அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டமையை உறுதிசெய்தார். ஆனால் அவரது பதவி நீக்கம் குறித்த மேலதிக தகவல்களை வெளியிட அவர் மறுத்து விட்டார். சரித் சேனநாயக்கவின் இடத்திற்கு இலங்கையின் மற்றொரு முன்னாள் வீரரான மைக்கல் டி சொய்ஸா நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த உபாலி தர்மதாச, எனினும் அந்தப் பதவியை ஏற்பது குறித்து அவர் இன்னமும் உறுதிப்படுத்தவில்லை எனவும் தெரிவித்தார். அண்மையில் இலங்கை கிரிக்கெட் சபைக்கெதிராக மஹேல ஜெயவர்தன ஊடகமொன்றிற்குப் பகிரங்கமாக எழுதிய கடிதத்தை வெளியிட மஹேலவிற்கு உதவிய காரணத்திற்காக மஹேலவோடு சேர்த்து விளக்கம் கோரப்பட்ட சரித் சேனநாயக்க, அந்தக் காரணத் திற்காகவும், சில தனிப்பட்ட காரணங்களுக்காகவும் தான் பதவியிலிருந்து நீக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். எனினும் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரியொருவர், சரித் சேனநாயக்க மீது குற்றச்சாட்டுக்கள் பலவும் காணப்படுவதாகவும், அவர் தனது பதவியை ஒழுங்காகச் செய்திருக்கவில்லை எனவும், வீரர்கள் அவர் குறித்து முறையிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



**கடந்த ஆண்டுக்கான தென்னாபிரிக்காவின் சிறந்த வீரருக்கான விருதை றக்பி வீரர் பொப் ஸ்கின்ஸ்ராட் பெற்றுக்கொண்டார். கடந்த 7ஆம் திகதி ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிரிக்கெட் வீரர்களான அம்லா, டிவில்லியர்ஸ், டுபிளிசர் ஆகியோர் நிற்பதைக் காணலாம்.**

# மகிழ்ச்சி, நிம்மதி

(மும்பை)

இந்திய அணிக்கு மீண்டும் தேர்வாகி இருப்பதன் மூலம் மிகவும் மகிழ்ச்சியும், நிம்மதியும் அடைந்துள்ளேன் என சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் தெரிவித்துள்ளார்.

இரானி கோப்பை கிரிக்கெட் போட்டி எனக்கு முக்கியமானதாக அமைந்தது. இந்தப் போட்டியில் சிறப்பாக பந்து வீசியதால், எனக்கு பிடித்தமான (அவுஸ்ரேலியா) அணிக்கு எதிராக விளையாடும் வாய்ப்பை பெற்றிருக்கிறேன். அவுஸ்ரேலிய தொடரில் பந்து வீச மிகுந்த ஆவலுடன் இருக்கிறேன். மீள் வருகை சாவாலானது. இருப்பினும் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் எமது செயற்பாடு அமையும். அன்னவரும் தொடரை வெல்லும் முனைப்புடன் செயற்படுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வேண்டாம் பரிதாபம்



(புதுடில்லி)

அணியில் நான் இருந்தாலும், இல்லாவிட்டாலும், இந்திய அணி எல்லாப் போட்டிகளிலும் வெல்ல வேண்டும் என்பது எனது விருப்பம் என கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலிரு டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணியிலிருந்து, கம்பீர் நீக்கப்பட்டார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தயவு செய்து என் மீது யாரும் பரிதாபப்பட வேண்டாம். இந்திய 'ஏ' அணியின் பயிற்சி ஆட்டத்தில் விளையாடுவதை இப்போது எதிர்நோக்கி உள்ளேன். அணிக்கு வந்துள்ள இளம் வீரர்களை உற்சாகப்படுத்துங்கள். அவர்களை ஆதரிக்க வேண்டிய நேரம் இது. கடந்த காலங்களிலும் இதே போல் அணியில் இருந்து நான் நீக்கப்பட்டுள்ளேன். எனவே எனக்கு இது ஒன்றும் புதிதல்ல. அணியில் மீண்டும் இடம்பிடிக்க தொடர்ந்து போராடுவேன். தொடக்க ஆட்டக்காரர்கள் விஜயும், தவானும் சேர்க்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. நான் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்திய அணி எல்லா ஆட்டங்களிலும் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது ஆசையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுழலுக்கு அஞ்சமாட்டோம்



சுழற்பந்து வீச்சாளர்களைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை. இந்திய அணிக்கு நெருக்கடியைக் கொடுத்து டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவது எமது நோக்கம் என அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் எட்கோவன் தெரிவித்துள்ளார். இந்திய சுழற்பந்து வீச்சைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை. சுழற்பந்தை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து நாங்கள் நன்றாக தெரிந்து வைத்திருக்கிறோம். அவுஸ்ரேலியாவிலும், இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் அஸ்வின் பந்துவீச்சைப் பார்த்திருக்கிறோம். இதனால் நாங்கள் சுழற்பந்து வீரர்களின் திறமையை எப்படி முறியடிப்பது என்பதை திட்டமிட்டுள்ளோம். இந்திய ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருக்கும். இதனால் இங்குள்ள சுழற்பந்து வீரர்கள் தொடரை கைப்பற்ற முக்கிய பங்கு வகிக்கிறார்கள். ஆனால் இந்திய சுழற்பந்து வீச்சை எங்களால் அடித்து ஆட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. பாதுகாப்பு ஆட்டத்தை கடைபிடிப்பதை விட அடித்து ஆடும் ஆட்டமே நல்லதாக அமையும். இந்திய அணிக்கு எப்படி நெருக்கடி கொடுப்பது என்பதில்தான் எங்களது முழுக்கவனமும் இருக்கும். 2001ஆம் ஆண்டு டெஸ்ட் தொடரில் மத்யூ ஹைடன் சிறப்பாக ஆடினார். அவரைப் போன்று நன்றாக ஆட வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இயக்கச்சி அ.த.க. மெய்வல்லுநர் முல்லை இல்லம் முதலிடம்



(இயக்கச்சி)

இயக்கச்சி அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முல்லை இல்லம் 410 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துக்கொண்டது.

இயக்கச்சி அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த எட்டாம் திகதி பாடசாலை அதிபர் ஞா. ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் முல்லை, மருதம், நெய்தல் என மூன்று பிரிவுகளில் வீர, வீராங்கனைகள் பிரிக்கப்பட்டு போட்டியிட்டனர். இதில் முல்லை இல்லம் 410 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், மருதம் இல்லம் 297 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், நெய்தல் இல்லம் 269 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக்கொண்டன.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கில பீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற பளைக்கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. இராமலிங்கம், கௌரவ விருந்தினர்களாக கிளி. வலய ஆசிரிய ஆலோசகர்களான க. கிருஸ்ணமூர்த்தி, சு. சிவபாலன், பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமான பொன். தில்லைநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (112)

# வீரர்களின் திறமைகளை இனங்கண்டு சர்வதேச ரீதியில் வெளிக்கொணர்வதே இலக்கு

## கிளிநொச்சியில் விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் பல திறமையான இளம் சமுதாயத்தினைக் கொண்டுள்ளது. இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு பல துறைகளிலும் நல்ல திறமைகள் உண்டு. அத்திறமைகளை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் வெளிக்கொணர வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அவர் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுச்சங்கத்தினை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால யுத்தம் இவர்களின் திறமைகளை வெளியில் கொண்டு வரத் தடையாக அமைந்துவிட்டது. ஆனால் தற்போது யுத்தம் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகளை நெருங்கிக்கொண்டிருக்கிறது. யுத்தத்திற்கு பின்னரான இந்தக் காலப்பகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பல அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளிநொச்சியினை பார்க்கின்றபோது சிங்கப்பூரை பார்ப்பது போன்றுள்ளது. எனவே இந்த வாய்ப்புக்களை பயன்படுத்தி இங்குள்ள இளைஞர் யுவதிகள் தங்களுடைய திறமைகளை விளையாட்டுத்துறையில் வெளிப்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் சாதனைகள் படைக்க வேண்டும். அதற்காக விளையாட்டுத்துறை அமைச்சு



எல்லா ஏற்பாடுகளையும் செய்து தர தயாராக உள்ளது. சார்க் விளையாட்டுப்போட்டியில் துப்பாக்கி சுடும் போட்டிக்குச் செல்ல இருக்கும் இரண்டு வீரர்கள் முன்னாள் விடுதலைப்புலிகளின் போராளிகள். அவர்கள் இம்முறை நிச்சயம் பதக்கம் வெல்வார்கள் என்ற நம்பிக்கையுள்ளது எனத் தெரிவித்தார்.

மேலும் கிளிநொச்சியில் இருபது கோடி ரூபா மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் சர்வதேச தரத்திலானவிளையாட்டு மைதானத்தினையும் பார்வையிட்டார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், அவரின் மக்கள் தொடர்பு அதிகாரி தவநாதன், விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சினிஜெயக்கொடி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் சீனிவாசன், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். (29)



# கிண்ணம் வென்றது கொக்குவில் கே.சி.சி.சி.

(கொக்குவில்)

சத்தியன், ராகுலன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் கே.சி.சி.சி. கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கொக்குவில் கே.சி.சி.சி அணி கைப்பற்றிக் கொண்டது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.



யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி அணிகள் பல பங்குகொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு ஜொலிஸ்ரார் அணியும், கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் தகுதிபெற்றன.

இறுதிப் போட்டி 40 ஓவர்களைக் கொண்டதாக நடத்தப்பட்டது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி, சத்தியன், பங்குஜன், உமாநாத் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 40 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சத்தியன் 83, பங்குஜன் 41, உமாநாத் 56, ராகுலன் 35, வல்லவக்குமரன் 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சஞ்ஜித் மூன்று, மதுஷன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.


பதிலுக்கு 304 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி, ராகுலனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. இருப்பினும் ஒரு முனையில் நிதானமாகவும், அதிரடியாகவும் ஆடிய மதுஷன் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கப் போராடினார். இறுதியில் ஜொலிஸ்ரார் அணி 38.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்று 81 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் மிகவும் சிறப்பான முறையில் ஆடிய மதுஷன் 71 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் தீபன் 36, ராஜாதித்தன் 27, பிரசன்னா ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராகுலன் எட்டு ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்தார். மற்றும் பங்குஜன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகவும் கே.சி.சி.சி அணியைச் சேர்ந்த ராகுலன், தொடரின் சிறந்த சிறந்த துடுப்பாட்ட வீரராக கே.சி.சி.சி. அணியைச் சேர்ந்த சத்தியன், சிறந்த களத்தடுப்பாளராக ஜொலிஸ்ரார் அணியைச் சேர்ந்த உமாதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் கடந்த 1991ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் இத்தொடரில் கே.சி.சி.சி. அணியால் இரண்டாவது தடவையாக கிண்ணம் கைப்பற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் கடந்த 2008ஆம் ஆண்டு கே.சி.சி.சி. அணி கிண்ணம் வென்றது.

இதேபோன்று, இத்தொடர் கடந்த 2012ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் தொடர் ஆகும். வடக்கு மாகாணத்தில் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கும் கொக்குவில் கே.சி.சி.சி. அணி கடந்த ஆண்டு ஜே.பி.எல்., என்.பி.எல்., டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ணம், ஜே.டீ.சி.ஏ. வெற்றிக் கிண்ணம் உட்பட பல வெற்றிக் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஞானகாந்தன், சிறப்பு விருந்தினராக ஸ்ரான்லி கல்லூரி அதிபர் இளங்கோ ஆகியோர் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணங்களை வழங்கிவைத்தனர். (54)(எஸ்.பி.)

## விளையாட்டுச் செய்திகள்



# விடை தெரியாத கேள்விகள் அழகானவை, உரையாடலுக்கு வழிவகுப்பவை

- அ. மார்க்ஸ் கட்டுரையிலிருந்து.

கமலஹாசன் ஒரு படம் எடுத்தார். தொடர்ச்சியாக இதுபோன்ற படங்களால் துயர்தரும் வாழ்வனுபவங்களைச் சந்தித்துக்கொண்டிருக்கும் ஒரு சிறுபான்மைச் சமூகம் இப்படமும் தங்களுக்கு எதிரானதாக இருப்பதைக் கண்டு அச்சம் தெரிவித்தனர். அரசு தலையிட்டது. பேச்சு வார்த்தைகள் நடந்தன. எல்லோருக்கும் தெரியும் படம் எப்படியும் வெளிவரும் என. அரசுக்கும் தெரியும் கமல்ஹாசனுக்கும் தெரியும் ஏன் முஸ்லிம்களுக்கும் கூடத் தெரியும்.

இடையே மிக விரிவான விவாதங்கள் நடைபெற்றன. இந்த விவாதம் நிச்சயமாகச் சமூகத்தின் இது குறித்த கருத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியுள்ளது. இருதரப்பு விட்டுக் கொடுத்தல்களுக்கும் பின் படம் இப்போது திரையிடப்பட்டுள்ளது. இதுதான் ஜனநாயகம். எதுவுமே இல்லாமல் இப்படியான படங்கள் தொடர்ந்து எடுக்கப்பட்டு, எவ்விதப் பிரச்சினைகளுமின்றி திரையிடப்படுமானால் அது எப்படிச் சரியாக இருக்கும்?

ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் இன்னொருவரை அடையாளம் காண உதவியது இந்த விவாதத்தின் இன்னொரு பலன். கமலஹாசன் ஆதரவாளர்கள் எல்லோரும் சொன்ன ஒரு கருத்து, “இந்த எதிர்ப்பின் மூலம் முஸ்லிம்கள் குறித்த முரட்டுத்தனமானவர்கள் என்கிற பிம்பம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது” என்பது. அப்படியான கருத்தைச் சொல்கிறவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினை தொடங்குவதற்கு முதல் நாள் வரை இப்படி இன்று சொல்பவர்கள் எல்லோரும் ஏதோ முஸ்லிம்கள் என்றால் அமைதியானவர்கள் எனக் கருதிக்கொண்டிருந்தது போலவும், இந்த எதிர்ப்பிற்குப் பின்பே முஸ்லிம்கள் பற்றி இப்படி ஒரு கருத்தை உருவாக்கிக் கொண்டதாகவும் சொல்வது எத்தனை அபத்தம்.



முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்த எந்தப் பிரக்ஞையும் அற்று அவர்கள் குறித்த எதிர்மறைக் கருத்தை மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் சுமந்திருந்தவர்கள் தங்கள் வெறுப்பைக் காட்டிக்கொள்ள இந்த வாய்ப்பை இன்னும் ஒரு முறை பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதே உண்மை.

இன்னொருபக்கம் அறிவுஜீவிகள் முழுமையான கருத்துச் சுதந்திரம், அதிலும் கலைப் படைப்புகளுக்குத் தடையற்ற கருத்துச் சுதந்திரம் கோருகின்றனர்.

கலைஞர்களுக்கு மட்டுமல்ல, சாதாரணக் குடிமக்களுக்கும் கூடத் தடையற்ற கருத்துச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதை ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள யார்தான் மறுக்க முடியும்? அதே நேரத்தில் ஒருவருடைய கருத்துச் சுதந்திரம் தனது வாழ்வுரிமையைப் பறிக்கிறது என இன்னொருவர் குரல் எழுப்பும்போதுதான் பிரச்சினை எழுகிறது. அரசுகள் இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு உள்ளே நுழைகின்றன.

இப்படியான நிலை வரும்போது தடையற்ற கருத்துச் சுதந்திரத்தின் எல்லை எதுவென்று இதுவரைக்கும் விடை கண்டுபிடிக்க இயலாத கேள்வி மீண்டும் மேலெழுகிறது. பல்வேறு கருத்துக்களும் நம்பிக்கைகளும் அடையாளங்களும் பண்பாடுகளும் சஞ்சரிக்கும் களமாகச் சமூகம் விளங்குகையில் இது போன்ற விடை தெரியாத கேள்விகளும் இருக்கத்தான் செய்யும் என்பதை நாம் முதலில் ஏற்கவேண்டும். இறுதி விடை என “இது” அல்லது “அதை” முன்வைக்காத வரை-தான் அங்கு ஜனநாயகம் நிலவ முடியும். ஏதொன்றையும் இறுதித் தீர்வாக முன்வைக்கும் போது அது ஏதோ ஒருவரின் உரிமையை ஒடுக்குவதாகவே அமையும்.

முஸ்லிம்கள் என்றாலே தீவிர வாதிகள் என பக்கத்தில் உள்ள ஒவ்வொரு முஸ்லிமையும் ஐயத்துடன் நோக்கக்கூடிய நிலை தொண்ணூறுகளுக்குப் பின் இங்கு உருவாகியுள்ளதை யார் மறுக்க இயலும்? பொதுப்புத்தியில் முஸ்லிம்கள் குறித்த எதிர்மறைப் பிம்பம் ஏற்படுத்தப் பட்டிருப்பதில் ஊடகங்களுக்குத்தான் பெரிய பங்குள்ளது. குறிப்பாகத் தொண்ணூறுகளுக்குப் பின் வெளிவந்து கொண்டுள்ள திரைப்படங்களுக்கு மிக முக்கியமான பங்குள்ளது.

அற்புதமான ஆக்கங்கள் உள்ளிட்ட எந்தக் கலைப்படைப்பிற்கும் ஒரு பிரசார மதிப்பும் உண்டு என்பதை நாம் மறந்துவிடலாகாது. மனிதருள் பொதிந்துள்ள மேன்மையான பண்புகளைத் தட்டி எழுப்புபவைதான் உன்னதக் கலைப்படைப்புகள். அற்ப உணர்வுகளை உசுப்பிவிட்டுக் காசு பார்க்கும் வணிகத் திரைப்படங்கள் இன்னும் ஆபத்தானவை என்பதை மறந்து விடக்கூடாது. “ரோஜா” திரைப்படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்தவர்கள் திரையரங்கு வாசலில் பாகிஸ்தான் தேசியக் கொடியை எரித்துச் செய்த வன்முறையும் இன்று விஸ்வரூபம் திரைப்படத்தில் திருக்குர்ரானை ஓதித் தொழுதுவிட்டுச் சென்று பயங்கரவாதச் செயல்களைச் செய்பவர்களைக் கமல்ஹாசன் துவம்சம் செய்யும்போது திரையரங்கினுள் எழும் ஆர்ப்பாட்டங்களும் எதைக் காட்டுகின்றன? இப்படியாகக் கட்டமைக்கப்படும் வெறுப்பு யார்மீது குவியப் போகிறது?

இன்று உருவாகியுள்ளது போன்ற ஒரு முரண் எழும்போது அதில் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு உருவாவதை எப்படி மறுக்க இயலும். அந்தத் தலையீடு என்பது தன்னிச்சையான நிரந்தரத் தடை என்பதாகவன்றி இன்னும் ஒரு விரிந்த சிந்தனையாளர்கள். நடுநிலையாளர்கள், வல்லுநர்கள் அடங்கிய குழுவின் ஆலோசனையைக் கேட்டல் என்பதுபோல சில திருத்தங்களை வேண்டுமானால் முன்மொழியலாம். எப்படியானபோதிலும் அரசுத் தலையீடு என்பதில் அதிகாரத்தின் நலனே முன்நிற்கும் என்பது உண்மைதான். ஜனநாயகம் என்பது என்றைக்குமே மக்களுக்கு முழுமையாகக் கையளிக்கப்பட்டுவிடுகிற ஒன்றல்ல. ஜனநாயகம் என்பது ஜனநாயகத்திற்கான போராட்டம்தானே.

ஏதோ சில பேச்சுவார்த்தைகள், விட்டுக்கொடுத்தல்கள் ஆகியவற்றின் விளைவாக சற்றுக் காலதாமதமா-கியேனும் விஸ்வரூபம் திரைக்கு வரும். ஆனால் இந்த எழுச்சி எதிர்காலத்தில் கமல்ஹாசன்களுக்கும் மணிரத்தினங்களுக்கும் ஒரு பாடமாக அமையும், அமையவேண்டும்.

# தமிழ் மகளான சீனப் பெண்!

ஜாவோ ஜியாங் என்ற தனது சீனப் பெயரை கலைமகள் என்று மாற்றிக் கொண்டிருக்கிறார் இந்த சீனப் பெண். இவர், சீன வானொலி நிலையத்தின் தமிழ்ப் பிரிவின் தலைவர்.

இந்தியாவின் புராணங்களும், கதைகளும், பண்பாடுகளும் தன்னை ஈர்த்ததால், 1995ஆம் ஆண்டு தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள முடிவு செய்தாராம். தொடக்கத்தில் 247 எழுத்துக்களே தனக்கு வியப்பளித்ததாகச் சொல்கிறார். மேலும் அவர் கூறுவது:

சீன மொழியும் தமிழ் மொழியும் உலகில் மிகவும் பண்டைய மொழிகள். உலகில் நீண்டகால வரலாறுடைய பண்பாடுகளை இவ்விரு மொழிகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம். சீன மொழி எழுத்து, சதுர வடிவமாகும். அது சீன மொழியின் தனிச்சிறப்பியல்பு. அதிலிருந்து தமிழ் எழுத்துகள் மேலும் அதிகமான மாற்றங்களைக் கொண்டுள்ளது.



சீனாவில் வெவ்வேறு இடங்களில் வேறுபட்ட உச்சரிப்புள்ள மொழிகளைக் கேட்கலாம். சீனாவில் மொத்தமாக 56 தேசிய இனங்கள் உள்ளன. பெரும்பாலான இனங்கள் சொந்த மொழிகளைப் பேசுகின்றன. எனக்கு ஷங்காய், குவாங்துங், ஷான்சி முதலிய இடங்களின் மொழிகளைப் பேச முடியும்.

1999ஆம் ஆண்டு முதல் இதுவரை சீன வானொலியில் 13 ஆண்டுகளாக வேலை செய்கிறேன். தமிழ் ஒலிபரப்பு மூலம் எண்ணற்ற தமிழ் நேயர்கள் நண்பர்களாக உள்ளார்கள். ஓர் உண்மையான தமிழரைப் போல தமிழை மேலும் புரிந்துகொள்ள விரும்பியதால், எனக்கு தமிழ்ப் பெயர் வைத்துக்கொண்டேன்.

சீன வானொலி தமிழ் ஒலிபரப்பைக் கேட்கும் தமிழ் நேயர்கள் மிக அதிகம். இவ்வாண்டு தமிழ் ஒலிபரப்பு தொடங்கிய பொன் விழா ஆண்டாகும். இப்போது, சீன வானொலியின் தமிழ்ப் பிரிவு ஒலிபரப்பை விட இணையதளம், “தமிழ் ஒலி” என்னும் இதழ் ஆகியவற்றின் மூலம் தமிழர்களுக்கு செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் வழங்குகின்றோம். விரைவில் கைபேசி மூலம், மேலதிக சுவையான தகவல்களை வழங்கவும் தீர்மானித்துள்ளோம். என்கிறார் ஜாவோ ஜியாங் என்கிற கலைமகள்.

# கஞ்சாவை விட்டார் லேடி ககா!



அமெரிக்காவின் பிரபல பொப் பாடகி லேடி ககாவுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ள்னர். இவரது பாடலையும், ஆட்டத்தையும் விட, இவரது வித்தியாசமான, விதம் விதமான, சிகை அலங்காரம் ரசிகர்களிடம் மிகவும் பிரபலம்.

இவருக்கு, ஒரு வினோதமான பழக்கமும் உள்ளது. அதுதான் கஞ்சா புகைப்பது. இதை வெளிப்படையாக அவரே, பலமுறை அறிவித்துள்ளார். சமீபத்தில், நெதர்லாந்தில் நடந்த, தன் கலை நிகழ்ச்சியில் மேடையி-லேயே கஞ்சாவை புகைத்து சர்ச்சையை ஏற்படுத்தினார். “இந்தப் பழக்கத்தை என்னால் விட முடியவில்லை...” என, விளக்கம் வேறு அளித்தார்.

இப்போது, அவரது நடவடிக்கையில், தடாலடி மாற்றம் ஏற்பட்டுள்ளது. லேடி ககா, “ஆர்ட்பொப்” என்ற, புதிய அல்பத்தை தயாரிக்கும் பணியில் இரவு, பகலாக ஈடுபட்டுள்ளார். இந்த பிசியான வேலைகளுக்கு நடுவில், கஞ்சா புகைப்பதையே மறந்து விட்டாராம். “கஞ்சா பழக்கத்தை அடியோடு கைவிடப் போகிறேன்...” என்றும், அறிவித்துள்ளார் ககா.

# ஆள்மாறாட்டம்



இனியும் தள்ளிப்போடவேண்டாமென்று இரங்கி
பார்த்துவர போயிருந்த என்னை
அதீதப் பிரியங்களுடன் வரவேற்ற கடவுள்
ஐந்தாறு நாட்களாவது
விருந்தினனாக தங்கிப்போக வேண்டினார்
ஏழேழு லோகத்தையும் அண்டசராசரங்களையும்
இடையறாது பார்த்து இயக்கும் பொருட்டு
இமைக்கவே இமைக்காது
சிசிடிவி போன்று
ஓயாதொளிரும் அவரது கண்களின்
பொழிந்தணைக்கும் கருணையை தட்டிக்கழிக்க முடியாமல்
தங்கிப்போக சம்மதித்தேன்
மேலோகமா பாதாளமாவென அறிந்துணராப் பாங்கில்
நட்சத்திர விடுதியின் வசதிகளோடிருந்த மாளிகையில்
எனக்கென்று அவர் நிர்மாணித்திருந்த அறை
பூமியைவிட விசாலமானது
ஓம்பாமல் போகக்கூடும் என்பதால்
பாற்கடலைத் தவிர்க்கச் சொன்ன கடவுள்
நீராடுவதற்கென வெதுவெதுப்பான நன்னீர்க்கடலையும்
உடுத்துவதற்கு நீராவியன்ன துகில்களையும்
ஏழுபுரவிகள் பூட்டிய ரதத்தை சவாரிக்காகவும் அருளினார்
தேவைப்பட்டதை
நினைத்த மாத்திரத்தில் வரவழைத்துக்கொள்வதற்காக
அங்கிருக்கும் நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் வகையில்
தனது சக்தியில் ஒரு பகுதியையும் கொடுத்து
என்னையும் தன்னைப்போல்
தற்காலிகமாய் ஆக்கியிருந்தார் கடவுள்
கடவுளைக் கொன்றுவிட்டு
அவரது இடத்தை நிரந்தரமாய் கைப்பற்றும் ஆசையை
இவ்விதமாக தூண்டிவிட்ட கடவுள்
நான் திரும்பவேண்டிய நாளின் இரவில்
காணாதொழிந்தார்
இமைக்கவே முடியாத என் கண்களால்
பூமியைப் பார்க்கிறேன்
நானாகச் சென்றுவிட்ட கடவுள்
உல்லாசமாய் சுற்றித்திரிகிறார் அங்கு.

- ஆதவன் தீட்சண்யா -

# ராசியில்லா ராணி



"சினிமாவில் பெரிய பரிச்சயம் இல்லாத காலங்களில் மோகன்லால் படத்தில் நடிக்க அழைப்பு வந்தது. இயக்குநர் கமல். என் அம்மாவுக்கு மோகன் லாலை ரொம்பவே பிடிக்கும். அதனால் அம்மாவை துணைக்கு அழைத்து கொண்டு ஷூட்டிங்கில் பங்கேற்க சென்றேன். அந்த நேரத்தில் இயக்குநரும், ஹீரோவும் கீழே விழுந்து விட்டனர். ஷூட்டிங் நின்றுவிட்டது. லால் - கமல் இருவரும் இணைந்து ஏற்கெனவே 8 ஹிட் படங்கள் கொடுத்தவர்கள். இந்நிலையில் அவர்கள் கீழே விழுந்ததற்கான பழி என் மீது விழுந்து விட்டது. என்னை ஒப்பந்தம் செய்ததால்தான் இப்படி நடந்து விட்டது என்றார்கள். அடுத்த சில மாதங்களில் நான் ஒப்புக் கொண்டிருந்த ஒரு டசின் படங்களில் இருந்து என்னை நீக்கும் அறிவிப்பு வெளியானது. ஒரு கட்டத்தில், சூனியம் வைத்து விட்டார்களோ? என்று நினைத்தேன். அதன் பின் தமிழ் படம் ஒன்றில் ஒப்பந்தம் ஆனேன். அதுவும் நின்று போனது. அதன்பிறகே வடக்கிற்கு வந்தேன். போராடித்தான் இந்த இடத்தை பிடிக்க முடிந்தது"

**- சொல்லியிருப்பவர், இன்று அகில இந்திய புகழ் நடிகையான வித்யாபாலன்.**


# ஆசியாவில் நோபல் பரிசு!

உலகளவில் அமைதிக்காக பாடுபடுபவர்களுக்கும் மற்றும் விஞ்ஞானத்தில் அரிய கண்டுபிடிப்பவர்களுக்கும் ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. தற்போது தைவான் நாட்டைச் சேர்ந்த தொழில் அதிபரும் கோடீஸ்வரருமான சாமுவேல் யின் என்பவர் நோபல் பரிசுக்கு இணையாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இலக்கியம், மருத்துவம் ஆகிய துறைகளுக்கும் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கும் விருது வழங்க முன்வந்துள்ளார். இதற்கென ஓர் அறக்கட்டளையை அவர் உருவாக்கியுள்ளார். என்ன பெயரில் பரிசு வழங்குவது என்று அறக்கட்டளை பின்னர் அறிவிக்குமாம்.

# தேவனின் கோயில்

**- சுகா -**

"அறுவடை நாள்" திரைப்படத்தின் "தேவனின் கோயில்"




பாடல், வெளிவந்த நாளிலிருந்து தொடர்ந்து என்னைத் துரத்திக் கொண்டேயிருக்கிறது என்று சொன்னால் அது கொஞ்சமும் மிகையில்லை. சிலசமயங்களில் காரணமேயில்லாமல் சில பாடல்கள், நாள் முழுதும் நம் மனதைச் சுற்றி வருவது போல, ஒருநாள் "தேவ-னின் கோயில்" பாடலைத் தொடர்ந்து நாள்முழுக்க முணுமுணுத்துக் கொண்டேயிருந்தேன்.

பொதுவாகவே இளையராஜாவின் பாடல்களின் ஆதார அஸ்திவாரமே, பாஸ் கிற்றார்தான். ஒட்டுமொத்தப் பாடலின் கட்டுமானத்தையும் தாங்கிப் பிடிக்கும் பாஸ் கிற்றாரின் அற்புதமான வாசிப்பை "தேவனின் கோயில்" பாடல் முழுவதும் நாம் கேட்கலாம்.

"ப்ரேமம் ப்ரேமாதி ப்ரேமப்ரியம் ப்ரேமவஸ்யப்ரேமம்" என்று இளையராஜாவின் குரலில் அந்தப் பாடல் துவங்கும் போதே கண்கள் கலங்கத் துவங்கும். தேவனின் கோயில் பாடலோடு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரது பங்களிப்பும் அந்தப் பாடலை எங்கோ உயரத்துக்குக் கொண்டு சென்றிருக்கிறது. சித்ராவின் வள்ர்ச்சியில் மிக முக்கியமான பங்கை "தேவனின் கோயில்" பாடல் ஆற்றியிருக்கிறது. மிக சன்னமான தொனியில் இந்தப் பாடலைப் பாடத் துவங்கும் அவர், இரண்டாவது சரணம் முடியும் இடமான "நானோர் கண்ணீர்க் காதலி" என்னும் போது குரல் உடைந்து, அதே சமயம் ஸ்ருதிவிலகாமல் பாடி, கேட்பவரைக் கலங்க வைக்கிறார். அந்த சமயத்தில் முழுமையாக தமிழைப் புரிந்து கொண்டு பாடக்கூடியவராக சித்ரா இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் "நானொரு சோக சுமைதாங்கி" என்ற வரியிலும், "கேட்டால் தருவேன் என்றவன் நீயே, கேட்டேன் ஒன்று தந்தாயா" என்ற வரியிலும் அவரது குரலிலுள்ள உணர்ச்சியை கவனித்தால், "யார் சொன்னது அவர் மலையாளம் என்று? தமிழச்சிதான்" என்று அடித்துச் சொல்லி விடலாம்.

இதுபோல "வாடி என் கப்பக்கிழங்கே" பாடலாசிரியராகவே அதிகமாக அடையாளம் காட்டப்பட்டுவரும் கங்கை அமரனின் மிக முக்கியமான பாடல்களில் ஒன்று "தேவனின் கோயில்". கன்னியாஸ்திரியாக மாறுவதற்கான பயிற்சியில் உள்ள ஒரு பெண் காதல்வயப்படுகிறாள். காதலனுடன் இணைய முடியவில்லை. இதை பா-டலின் முதல் வரியிலேயே எவ்வளவு எளிமையாகச் சொல்லிவிடுகிறார்! "தேவனின் கோயில் மூடிய நேரம், நான் என்ன கேட்பேன் தெய்வமே!". காதலனுடன் இணைய முடியாத காதலியை, "பிரிந்தே வாழும் நதிக்கரை போல, தனித்தே வாழும் நாயகி" என்கிறார், கங்கை அமரன். துக்கத்தின் விளிம்பில் நின்று அவள் தன்னைப் பற்றி "ஒருவழிப்பாதை என் பயணம்" என்று பாடியபடியே, "இணைவது எல்லாம் பிரிவதற்காக, இதயங்கள் எல்லாம் மறப்பதற்காக, மறந்தால்தானே நிம்மதி" விரக்தியின் உச்சத்தைச் சொல்கிறார்.


"தேவனின் கோயில்" பாடலின் இசையமைப்பை எடுத்துக் கொண்டால் அதன் மெட்டைச் சொல்வதா, வாத்தியங்களின் அமைப்பைச் சொல்வதா, அதன் தாளத்தைச் சொல்வதா, எதைச் சொல்வது என்று புரியவில்லை. மிக எளிமையாகச் சொல்வதாக இருந்தால் இது ஒரு சோகப்பாடல். ஆனால் பா-டலின் துவக்கத்தைக் கேட்டால் "ப்ரேமம் ப்ரேமாதி" என நவீன-மான முறையில் பல்குரல் பதிவாக



இளையராஜாவின் குரல் கேட்கிறது. பிறகு சித்ரா "தேவனின் கோயில்" எனத் துவங்கும் போதே நம் மனம் கனக்கத் துவங்குகிறது. "இங்கு என் ஜீவன் தேயுதே" என்னும் வரியில் தேயு...தே என்கிற ஒரு வார்த்தையில், பின்னால் வர இருக்கும் இசை பூகம்பத்தை நமக்கு சொல்லாமல் உணர்த்திவிடுகிறார். இளையராஜா. பல்லவி முழுதும் தாளம் ஏதுமில்லாமல் அமைக்கப்பட்டிருக்கும் இந்தப் பாடலின் முதல் இடையிசை (First interlude) தேவாலய மணியின் ஓசையுடன் துவங்கும் போதே, படம் பார்க்காமலேயே நம் கண்கள் முன்னால் காட்சி விரிகிறது.

இப்படி ஒரு சோகப்பாடலுக்கு இளையராஜா அமைத்திருக்கும் தாளம், சற்றே துள்ளலானது. வழக்கமாக சோகரசம் தொனிக்கும் பாடலென்றால் ஷெனாய் வந்துவிடும். ஆனால் "தேவனின் கோயில்" பாடலில் ஷெனாய்க்கு வேலையில்லை. இது போன்ற சோக கீதங்களில் கிட்டத்தட்ட ஷெனாயின் வேலையைச் செவ்வனே செய்திடும் புல்லாங்குழலும் நவீனமாகக் கையாளப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்விரு வாத்தியங்களின் வேலை-யையும் இந்தப் பாடலில் கிற்றார் எடுத்துக் கொள்கிறது. முதல் இடையிசையின் முடிவில் "நானொரு சோக சுமைதாங்கி" என்று பாடலின் மிக முக்கியமான பகுதியை சித்ரா துவக்குவதற்கு வசதியாக "இந்தா புடிச்சுக்கோ, மகளே" என்று தளம் அமைத்துக் கொடுக்கிறது கிற்றார். பாடலின் துவக்கத்தில் பலகுரல்களாக ஒலித்த இளையராஜாவின் குரல், இரண்டாவது இடையிசையில் தெம்மாங்காக உச்சஸ்தாயியில் உற்சாகமாக ஒலிக்கிறது. ஆனால் எந்த வகையிலும் அந்த துள்ளலொலி பாடலின் மைய உருவைக் குலைக்கவில்லை. இது போன்ற நம்ப முடியாத இசை ஆச்சரியங்களெல்லாம் இளையராஜாவிடம் மட்டுமே சாத்தியம்.

# அடிப்படை வசதிகளின்றி வாழும் நீலியாமோட்டை கிராமமக்கள்



(வவுனியா)

வவுனியா - செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நீலியாமோட்டை கிராமம் கடந்த பல வருடங்களாக எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி உள்ளதாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

58 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்திற்கு மின்சார வசதிகளோ போக்குவரத்து வசதிகளோ இல்லாததுடன், வீட்டுத்திட்டமும் கிடைக்கப்பெறவில்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடரபாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

“1979ஆம் ஆண்டு இக்கிராமத்தில் மக்கள் குடியேறிய நிலையில் 1990ஆம் ஆண்டில் 300இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தன. இந்நிலையில், யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து மடு பிரதேசத்திலும் சிலர் இந்தியாவிற்கும் சென்றிருந்தனர். 1993ஆம் ஆண்டு இம்மக்கள் மீள்குடியேறிய நிலையில், 1994ஆம் ஆண்டு மீண்டும் இடம்பெயர்ந்தனர். பின்னர் 2008ஆம் ஆண்டு 58 குடும்பங்கள் இக்கிராமத்தில் மீள்குடியேறியுள்ளன.

தற்போது மின்சார வசதிகள் செய்து தரப்படாத நிலையில் அடர்ந்த காடுகள் சூழப்பெற்ற கிராமத்தில் நாங்கள் வாழ்ந்து வருகின்றோம். இரவு நேரங்களில் யானைகளின் தொந்தரவுக்குள்ளாகின்றோம்.

மேலும் இக்கிராமம் வவுனியா - மன்னார் வீதியிலிருந்து சுமார் 2 கிலோமீற்றர் தூரத்திலுள்ளதால் போக்குவரத்து வசதிகளின்றியுள்ளது. இதனால் நாங்கள் நடந்தும் சைக்கிள்களிலும் செல்ல வேண்டிய நிலையுள்ளது. இரவு வேளைகளில் நாங்கள் போக்குவரத்து செய்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றோம்.

இக்கிராமத்தில் 5ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கான பாடசாலைகள் இன்மையால் மேல்வகுப்பு மாணவர்கள் நடந்துசென்றே அருகிலுள்ள கிராமத்தில் தங்களது கல்வியைத் தொடர வேண்டியுள்ளதுடன், இக்கிராமத்தை அண்டிய பகுதியில் வைத்திய வசதிகளும் இல்லை.

வீட்டுத்திட்டம் தொடர்பில் எவரும் கவனம் செலுத்தாததன் காரணமாக நாங்கள் தொடர்ந்தும் குடிசைகளில் வாழும் நிலை காணப்படுகின்றது என்றனர்.

இது தொடர்பாக செட்டிகுளம் பிரசே செயலாளர் கமலதாஸ் தெரிவிக்கையில்;

இக்கிராமம் தொடர்பில் தாம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் தற்போது இக்கிராமத்திற்கு 85 வீடுகள் வீட்டுத் திட்டத்தின் மூலம் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளன.

தண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் பல அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஆய்வுகளை மேற்கொண்டு கிணறுகளை வெட்டி வருகின்றோம். இருப்பினும் இக்கிராமத்தில் நிலம் கற்பாறை யாக காணப்படுவதால் நீரைப் பெறுவதில் சிரமமாகவுள்ளது.

கடந்த வருடம் நீலியாமோட்டையிலுள்ள பிரமனாலங்குளம் கிராம சேவகர் பிரிவில் 4 கிணறுகள் வெட்டுவதற்கு திட்டமிடப்பட்டதுடன், கற்பாறைகள் காணபபட்டமையால் 2 கிணறுகளை வெட்டும் திட்டம் கைவிடப்பட்டன. இக்கிராமம் வறட்சியான கிரமமாக உள்ளமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இக்கிராமத்திற்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது பிரதான வீதி செப்பனிடப்படுவதாகவும் உள்ளக வீதிகள் பிரதேசசபைகளுக்கு உரித்தானதென்பதால் அவற்றைச் செப்பனிடுவதற்கு தம்மிடம் நிதி வசதி போதுமானதாக இல்லையெனவும் பிரதேச சபை தெரிவித்து வருகின்றது. தற்போது சில அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலமாக இக்கிராமத்திற்கு சுயதொழில் மற்றும் கைத்தொழில் முயற்சிக்கான ஏற்பாடுகளை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

# கல்விச் சேவைகள் அமைச்சின் புதிய செயலாளர் பதவியேற்பு



(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த அதிகாரியான காந்தி பெரேரா கல்விச் சேவைகள் அமைச்சின் புதிய செயலாளராக கடந்த 6ஆம் திகதி அமைச்சு அலுவலகத்தில் பதவியைப் பொறுப பேற்றுக் கொண்டார். பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான இவர், இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி அலுவலகத்தில் மேலதிக செயலாளராக கடமை புரிந்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் உதவிச் செயலாளர் மற்றும் பிரதிச் செயலாளர் பதவியையும், விவசாய சேவை திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பதவியையும் நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளராகவும் இதற்கு முன்னர் பதவி வகித்துள்ள இவர், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் மற்றும் கொழும்பு பிரதேச செயலாளராகவும் கடமை புரிந்துள்ளார்.

# தேசிய பாடசாலைகள் கிளைக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

(கொழும்பு)



கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் கிளையின் புதிய கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் வகுப்பைச் சேர்ந்த சிரேஷ்ட அலுவலரான ரஞ்சித் சந்திரசேகர கடந்த 7 ஆம் திகதி கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவர் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு 1988இல் முதன் முறையாக திறந்த போட்டிப் பரீட்சையின் ஊடாக சேர்த்துக் கொள்ளபட்ட குழுவைச் சேர்ந்த அலுவலராக இருப்பதோடு, அவரது 23 ஆண்டு கால அதிபர் சேவைக் காலத்தில் 13 ஆண்டுகள் கண்டி, கிங்ஸ்வூட் கல்லூரியின் அதிபராகக் கடமை புரிந்துள்ளார். அத்துடன் கல்விப் புலத்தில் பல்வேறு அனுபவங்களைப் பெற்ற அலுவலருமாவார்.

# மன்னாரில் பெருமளவு மக்கள் வெள்ளம், வறட்சியால் பாதிப்பு

## — மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு —

(மன்னார்)

கடந்த வருடம் வெள்ளம் மற்றும் வறட்சியால் மாறிமாறி பாதிக்கப்பட்டதொரு மாவட்டமாக மன்னார் மாவட்டம் காணப்படுகின்ற நிலையில், இவற்றால் அதிகளவில் பாதிக்கப்பட்ட மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம மக்களுக்கு வறட்சிக்கான நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு, உதவித் தொகை சிலாபத்துறை ம.வி. பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

“நாங்கள் கடந்த காலங்களில் வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிப்புக்குள்ளாகியிருந்தோம்.

கடந்த வருடமும் எமது மாவட்டம் கடுமையான வறட்சிக்கு உள்ளாகியது.

இதன்போது பொதுவாக விவசாயச் செய்கைக்கு அப்பால் குடிநீருக்கு கஷ்டப்படும் மக்கள் கருத்திற்கொள்ளப்பட்டார்கள். நீர் பற்றாக்குறையால் ஏனைய தொழிலை இழந்தவர்களும் கவனத்திற்கொள்ளப்பட்டார்கள்.

இந்நிலையிலேயே முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம மக்கள் தெரிவு செய்யப்பட்டு வறட்சி நிவாரணம் வழங்கப்படுகின்றது.



ஏற்கனவே உங்களுக்கு தெரிவித்ததுபோல் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 10 ஆயிரம் ரூபா பணத்தை நீங்கள் நினைத்தவாறு செலவு செய்யாது இப்பணத்தை நீங்கள் திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும். இதற்கான ஆலோசனைகளும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனை சுயதொழிலுக்காக செலவு செய்ய வேண்டும்.

இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படும்போது உங்களை நீங்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற வகையில் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

இது மட்டுமின்றி, ஒவ்வொரு கிராமத்திற்கும் 2,000 லீற்றர் நீர் கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை பொது நலத்துடன் பயன்படுத்த வேண்டும் என்றார்.

# வழங்கப்பட்ட இடமாற்றங்கள் சட்டரீதியானதாக இல்லை

## சுகாதாரசேவைகள் சங்கம் விசனம்

(கொழும்பு)

ஆயுர்வேத வைத்தியர்களுக்கான இடமாற்றம் சட்டரீதியான முறையில் வழங்கப்படவில்லை என அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதிகாரிகளின் தேவைக்கேற்ப நீதிக்கு புறம்பான வகையில் குறித்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, ஆயுர்வேத வைத்தியத் துறையில் பல்வேறு பிரச்சினைகள் தற்போது எழுந்துள்ளதெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டுவரும் நோக்கில் வைத்தியர்கள் சங்கம், வைத்தியசாலை சேவைகள் சங்கம், தேசிய வைத்திய சபை உட்பட பல அமைப்புகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

# கஞ்சா கடத்திய வேளை இராணுவவீரர் கைது


(வவுனியா)

ஒருகிலோ இரண்டு கிராம் கஞ்சா கடத்திய இராணுவ வீரர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். வவுனியா வீதிச்சோதனைச் சாவடி நிலையத்தில் வைத்தே குறித்த இராணுவ வீரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலையிலுள்ள இராணுவ பயிற்சிப் பாடசாலையில் பயிற்சியை முடித்துக்கொண்டு வவுனியா முகாமிற்கு மீண்டும் திரும்பிவந்த போதே குறித்த இராணுவ வீரரை கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் கஞ்சா விநியோகப்பவர்களுக்கு வழங்குவதற்காகவே இராணுவ வீரர் கஞ்சாவை கடத்தி வந்திருப்பதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

# செல்வநாயகபுரம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

மக்களின் சுகாதார மேம்பாட்டைக் கருத்தில் கொள்ளாத மக்களை ஏமாற்றும் சுயலாப அரசியல்வாதிகளால் எமது பகுதிகள் ஒருபோதும் அபிவிருத்தியடையப் போவதில்லையென ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளரும், வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

செல்வநாயகபுரம் கிராமத்தில் மின்சாரம் வழங்குவது தொடர்பான கலந்துரையாடலொன்று ஈ.பி.டி.பியின் அச்சுவேலி பிரதேச இணை இணைப்பாளரும், வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினருமான செல்வராசா (லிங்கேஸ்) தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.கிழக்கு மட்டுமல்ல குடாநாடு முழுமையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையின் கீழும் வழிநடத்தலின் கீழும் பாரியளவில் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

இதில் கல்வி, சுகாதாரம், விளையாட்டு போன்ற பல்வேறு செயற்திட்டங்கள் அபிவிருத்தி கண்டு வரும் நிலையில் எதிர்காலத்திலும் அமைச்சர் தலைமையின் கீழ் குடாநாடு தொடர்ந்தும் பாரிய முன்னேற்றம் காணும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்தும் ஈ.பி.டி.பியின் அச்சுவேலி பிரதேச இணை இணைப்பாளர் செல்வராசா உரையாற்றினார்.

இக்கலந்துரையாடலில் வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் க.சந்திரபோஸ், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைகழக புறநிலை படிப்புகள் அலகு சில பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

அனர்த்த முகாமைத்துவத்திற்கான அடிப்படைகள், விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான கல்வி, தொழிலியலுக்கான மென்திறன் விருத்தி, ஆரம்பக்கல்வி, முன்பள்ளிக்கல்வி, தொடர்பாடலுக்கான ஆங்கிலம், அலுவலர்களுக்கான ஆங்கிலம், மனித உரிமைகள், மனிதவள முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம், ஜோதிடக்கலை, தாதி பராமரிப்பும் முதலுதவியும், சிறுதொழில் முகாமைத்துவம் போன்ற பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் நாளைய தினத்திற்குள் விண்ணப்பிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகில் உடற்கல்வி டிப்ளோமா மீள் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் விளையாட்டு விஞ்ஞான அலகில் விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக விளையாட்டு விஞ்ஞான அலகில் கையளிக்குமாறு பல்கலைக்கழக பதிவாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

* * *

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மாணவர்களுக்கான இலவச தொழிற்கல்வி பயிற்சியை வழங்கவுள்ளது. கணனி, தையல், ஆங்கிலம் ஆகிய துறைகளிலேயே பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.


தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் கல்விப்பொது சாதாரணதரம், உயர்தரம் பரீட்சை எழுதியவர்கள் மற்றும் பாடசாலை கல்வியை இடைநிறுத்திய மாணவர்கள் இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளமுடியும்.

பயிற்சிபெற விரும்பும் மாணவர்கள் 15 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. (54)

# டெங்கு நோய்த் தாக்கம்; தெரிந்து கொள்ளவேண்டியவை

### நோயை இனங்காணும் முறைகள்

சுலபமாக செய்யக்கூடிய ஆய்வு முறைகள் (Platelet Count, Pcv Count, Tourniquet Test, Haemato crit Test, Scanning Test) எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட குணங்கள் இருப்பின் சிகிச்சை உடன் மேற்கொள்ள வேண்டும்.




### சிகிச்சை முறைகள்

டெங்கு நோய் என்று கருதினால் ஒரு தகைமையுள்ள வைத்தியரைக்கொண்டு பரிசோதித்தல் அவசியம். ஆரம்பத்தில் சிகிச்சை மேற்கொண்டால் மட்டுமே சிக்கல் ஏற்படுவதையும, உயிர் இழப்பையும் தவிர்க்கலாம். அஸ்பிரின் (Aspirin) புறுபென் (Brufen) கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அவை நோயை சிக்கலாக்கும். பரசிற்றமோல் (Paracetamol) வைத்திய ஆலோசனையுடன் கொடுக்கலாம்.

கடுமையான வயிற்று நோவு, கறுப்பு நிறமாக மலம் வெளியேறுதல், கடும் வியர்வை வெளியேறுதல், மூக்கு, வாய், தோலுக்கு அடியில் இரத்தக்கசிவு காணப்படுதல், குளிர்ந்த தோல் என்பன நோயாளிக்கு உயிர் ஆபத்து ஏற்படுவதற்கான அறிகுறிகள். ஆகவே அவ்வேளையில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

### டெங்கு பற்றிய அடிப்படைத்தகவல்கள்

Aedes வகை நுளம்பினால் இந்த நோய்த் தொற்று ஏற்படலாம்.

ஒரு நோயாளியைக் கடித்த நுளம்பு ஒரு சுகதேகியைக் கடித்தால் அவருக்கு 5 - 7 நாட்களில் நோயின் அறிகுறி தென்படும். எந்த நுளம்பு நோய்க்காவியாக இருந்தது என்பதை கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் நுளம்புக் கடியில் இருந்து பாதுகாப்பது முக்கியம்.

### நுளம்பு பெருகும் இடங்கள்

நீர்த்தேக்கங்கள், நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப்பட்டிருக்கும் வெற்றுப்போத்தல்கள், பாவனைக்குதவாத சட்டிகள் போன்றவற்றிலும் தண்ணீர்த் தொட்டிகளிலும் மழை நீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் நுளம்பு பெருகும். தண்ணீரைத் தேக்கி வைக்கும் கொள்கலன்கள் மூடப்படாமல் இருப்பின் அவை 7 நாட்களுக்கு ஒரு முறை மாற்றப்பட வேண்டும். இல்லையேல் நுளம்பின் குடம்பிகள் உருவெடுத்துப் பெருகும்.

(தொடரும்...)

# பதிவிறக்கப் பெட்டகம்

மனிதன் சுதந்திரமாகப் பிறந்தவன் - எங்கும் அடிமைப்பட்டுக் கிடக்கின்றான். **- 'சமுதாய ஒப்பந்தம்' நூலில் ரூஸோ**

மனிதராக இருப்பதற்கான துணிவு என்பது தீமைகளை உறுத்தலின்றி செய்வதற்கான தெளிவில் ஆரம்பிக்கிறது. இறையியல் என்பது மனிதர் தாம் இழந்துபோன விலங்குத் தன்மையை ஈடுசெய்வதற்காக உருவாக்கிக் கொள்ளும் வலிநீக்கும் மருந்து.
**- பிரேம் ரமேஷ்**

அறிவுள்ளவர்கள் அவர்களது சொந்த வாழ்க்கையில் அறிவுடன் நடப்பதில்லை. போற்றப்படும் எழுத்தாளர்கள் அவர்களுடைய கதாபாத்திரங்களின் உளவியலை உள்நோக்கிப் பார்க்கும் ஆற்றல் பெற்றிருந்தும், அவர்களுடைய நண்பர்கள், மற்றும அவர்களைப் பொறுத்து அதே அளவுக்கு உள்ளுணர்வுடையவர்களாக இருப்பதில்லை. உயர்ந்த சிந்தனையாளர்கள் கூட வீட்டில் இருக்கும்போது அற்பமானவர்களாகவும், ஒரு கொள்கை வெறியால் பீடிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். மக்களைக் கவர்ந்து தங்களைப் பின்பற்றச் செய்யும் ஆற்றலுடைய உலகத் தலைவர்கள் கூட சில சமயங்களில் இரகசியமாக மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுகிறார்கள். அல்லது ஒரு பெண்ணின் படுக்கையறையில் கேவலப்படுத்தப்படுவதிலும் ஆட்டுவிக்கப்படுவதிலும் மகிழ்ச்சியடைகிறார்கள். **- டயன் அக்கர்மென்**

சித்தாந்தங்களின் எத்தனையெத்தனை வெடிகுண்டுகள் என் அகத்தளங்களில் விழுந்து வெடித்துச் சிதறியிருக்கின்றன.
**- முகம்மது பஷீர்**

காலம் ஏதோவொரு சிறுதுண்டை மிச்சம் வைத்திருக்கிறது. ஒரு துண்டாக மிஞ்சியிருப்பதற்குக் கூட பாக்கியம் வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் தூசியாகி காற்றில் கலந்துவிட்டிருக்கக் கூடும். ஆயிரமாயிரம் மனிதர்கள் வாழ்ந்து மடிந்த நகரங்களில் இன்று அதன் சுவடுகளே இல்லை. அரண்மனைகளும், அதன் மனிதர்களும் காற்றில் மறைந்து போய்விட்டார்கள். காலத்தின் கரங்கள் கருணையற்றவை. அது கலைகளைத் தவிர மாமனிதர்களைக் கூட அழித்து விடுவதில் தயக்கம் காட்டுவதேயில்லை. **- எஸ்.ராமகிருஷ்ணன்**

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பொலீஸ்காரனை நிறுத்திக் கண்காணிப்பதை விட ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ஞானவான் உருவாவதற்கு ஏதாவது செய்வதே நல்லது. **- ஜெயகாந்தன்**

மேன்மை, உயர்வு, பண்பாடு, மொழி, சமத்துவம், தேசபக்தி, ஜாதிப்பிரிவைத் தாண்டிநிற்கும் மனிதநேயம் ஆகியவை சார்ந்த மேலான நோக்கங்கள் நம்மைச் சுற்றி பேச்சிலும் எழுத்திலும் ஆவேசமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தக் கருத்துகளை மத்தியதர வர்க்கத்தினர் நேரடியாக எதிர்ப்பதில்லை. தங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றிக் காட்டும் வெற்றிகள் வழியாக இம்மதிப்பீடுகளை அவர்கள் மௌனமாக முறியடித்து விடுகிறார்கள். உழைப்பையோ காலத்தையோ சுய வாழ்க்கை சார்ந்த முன்னேற்றங்களுக்குச் செலவிடாதவர்கள் மீது இவர்களுக்கு உள்ளூரப் பரிதாபம் உண்டு. **- சுந்தர ராமசாமி**

ஒவ்வொரு உறவு நிலைக்கும் அதற்கேயுரிய கணிதம் இருக்கிறது. அதன் விதிகளுக்குக் கீழ்ப்பட்டு இயங்காவிட்டால், பெருங்களேபரம் ஆகிவிடும் எல்லாம். காலங்காலமாகப் பரிபாலிக்கப்படும் நியதிகளின் கீழ் நடந்து வருபவற்றை நானும் தொடர்ந்து கடைப்பிடிக்கிறேன், அவ்வளவுதான். **- யுவன் சந்திரசேகர்**

சமூகம் தரும் அடையாளங்களை ஏற்றுக்கொண்டோ அல்லது மறுத்துக்கொண்டோ இருப்பவர்கள்தான் சமூகத்தை வழிநடத்திச் செல்கின்றனர். இந்த அடையாளம் எதுவும் தன் சுய அடையாளம் அல்ல என்ற அறிவுணர்வு உள்ளத்தில் தோன்றத் தொடங்கியதும்தான் பிரச்சினை தொடங்குகிறது. பின்பு சமூகம் அளிக்கும் அடையாளங்களை ஏற்றுக்கொண்டு மகிழ்வதும் வெறுத்து மறுபபதும் பொருளற்றுப் போய்விடுகின்றன. **- க.நா.சு.**

சமூகம் தற்போது தருகிற சௌகரியமான இருக்கைகளில் அமர்ந்துகொண்டே புரட்சி, சீர்திருத்தம் பேசுபவர்களால்தான் சமூக மாறுதல் சாத்தியமற்றுப் போய்க்கொண்டேயிருக்கிறது. இந்தச் சமூகப் பிரச்சினையே தன் சொந்தப் பிரச்சினையாகவும் ஒருவனால் உணரப்படுகையில்தான் அவனிடமிருந்து அரசியல் கவிதைகளும் பிறக்கின்றன. **- தேவதேவன்**

வறுமையே எல்லாத் தீமைகளிலும் பெரிய தீமை; எல்லாக் குற்றங்களிலும் பெரிய குற்றம். **- பேணாட் ஷோ**

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

**சென்றவாரத் தொடர்ச்சி.....**


பிசுமத் குளோரைட்டும், பிசுமத் புரோமைட்டும் கூடிய அயன் தன்மை உடையவை. ஆனால் இவை நீர் கரைசல்களில் $BiO^+$ அயன்களை உண்டாக்கும். அந்திமனைல் SbO+, பிசுமதைல் $ViO^+$ அயன்கள் உண்டாகின்ற இத்தாக்கம், தொகுதி வழியே உலோகவியல்பு அதிகரிக்கும் என்ற கோலத்திற்கு அமைந்ததாகக் காணப்படுகிறது.


$SbCl_3 + 3H_2O \rightleftharpoons BiOCl + 3HCl$
$BiCl_3 + H_2O \rightleftharpoons BiOCl + 2HCl$

இவ்வொட்சிகுளோறைட்டுகள் நீரில் கரையாமல் பால்போன்ற வீழ்படிவாகத் தோன்றும். செறிந்த ஐதரோக்குளோறிக்கமிலம் சேர்க்கப்பட்டால் இத்தாக்கம் இடது பக்கமாக நடைபெறுவதால் இவ்வொட்சிகுளோறைட்டுகள் கரைந்து நிறமற்ற கரைசல்கள் உண்டாகும். மீண்டும் நீரைச் சேர்த்து ஐதாக்கினால் ஒட்சிகுளோறைட்டுகள் உண்டாவதால் பால் நிறம் உண்டாகும். அதாவது தாக்கம் வலது பக்கமாக நிகழும். சமநிலையில் செறிவின் தாக்கத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

நைதரசன் ஐஏலைட்டுகளை உருவாக்குவதில்லை. ஆனல் அடுத்து வரும் மூலகங்கள் ஐஏலைட்டுகளை உருவாக்கும். இவற்றில் d உபசத்தி மட்டங்களை உபயோகித்து தமது அட்டகத்தை விரிவாக்கக்கூடிய வசதியுண்டு.


உதாரணம் : பொசுப்பரசு




தனி இலத்திரன்களினால் நிரப்பப்பட்டவை, ஐந்து பங்கீட்டுப் பிணைப்புகளில் ஈடுபடலாம்.

நைதரசன்




தனி இலத்திரன்கள் மூன்று பங்கீட்டுப் பிணைப்புகளில் ஈடுபடலாம்.

பொசுப்பரசு ஐங்குளோரைட்டு நீர் பகுப்படைந்து அமிலங்களைத் தரும்.

$PCl_5 + 4H_2O \rightarrow H_3PO_4 + 5HCl$

**ஒட்சைட்டுகள்**

5 ஆம் தொகுதி மூலகங்களின் ஒட்சைட்டுகள் கீழே வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. நைதரசனுக்கு ஒவ்வொரு ஒட்சியேற்ற நிலையிலும் ஒரு ஒட்சைட்டு உண்டு. இது ஒரு அசாதாரணவியல்பாகும். தொகுதியின் வழியே ஒட்சைட்டுகளின் மூலவியல்பு இங்கேயும் அதிகரிக்கும். நைதரசன் நடுநிலை ஒட்சைட்டுகள் அல்லது அமில ஒட்சைட்டுகளைத் தரும். பொசுப்பரசு அமில ஒட்சைட்டுக்களைத் தரும்.

ஆசனிக்கும் அந்திமனியும் ஈரியல்புள்ள ஒட்சைட்டுக்களைத் தரும். பிசுமத் ஒட்சைட்டு மூலவொட்சைட்டாகும். ஒரு ஒட்சைட்டு அல்லது ஐதரொட்சைட்டின் அமில மூலவியல்பு அது நீர் பகுப்பு அடையும் தன்மையிலும், நீர் பகுப்பு அடையும் தன்மை, அம் மூலகத்தின் அணுவில் இருக்கும் ஏற்றத்திலும், அணுவின் பருமனிலும் தங்கியிருக்கும். $N^{+3}$, $Bi^{+3}$ யிலும் சிறியதாக இருப்பதால் அது நீருடன் கூடிய வன்மையுடன் தாக்கமுற்று அமிலவியல்பைத் தரும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் +5 ஒட்சைட்டுகள் +3 ஒட்சைட்டுக்களிலும் வன்மை கூடிய அமிலவியல்பைத் தரும்.

| ஒட்சியேற்றநிலை | +1 | +2 | +3 | +4 | +5 |
|---|---|---|---|---|---|
| மூலகம் | | | | | |
| N | $N_2O$ | NO | $N_2O_3$ | $NO_2, N_2O_4$ | $N_2O_5$ |
| P | — | — | $P_4O_6$ | — | $P_4O_{10}$ |
| As | — | — | $As_4O_6$ | — | $As_2O_5$ |
| Sb | — | — | $Sb_4O_6$ | — | $Sb_2O_5$ |
| Bi | — | — | $Bi_2O_3$ | — | — |

**நைதரசனின் ஒட்சைட்டுகள்**

(i) நைதரசு ஒட்சைட்டு

அமோனியம் நைத்திரேற்றின் வெப்பத் தாக்கத்தால் பெற்றுக் கொள்ளப்படும்.

$NH_4NO_3 \rightarrow N_2O \uparrow + 2H_2O$

தாக்கம் வெடித்தலுடன் நிகழக்கூடும். மெதுவாக வெப்பமேற்ற வேண்டும். மேலும் கனவளவு அரைப்பங்காகிய பின்பு தொடர்ந்தும் வெப்பமேற்றக்கூடாது.

இது ஒரு நிறமற்றவாயு. நீரில் கரைந்து நடு நிலையான கரைசலைத் தரும். வெப்பமேற்றுவதால் ஒட்சிசனாகவும் நைதரசனாகவும் பிரியும்.

$N_2O = N_2 + 1/2\ O_2 \rightarrow H = -90\ 4KJ\ mol^{-1}$

எரியும் பொருட்கள் $N_2O$ இல் தொடர்ந்து எரியும் (தகனத்துணையி) ஆனால் நைதரசன் மீதியாக விடப்படும்.

(ii) நைத்திரிக் ஒட்சைட்டு - NO

இதுவே மிகவும் உறுதியான நைதரசனின் ஒட்சிசன் சேர்வையாகும். நைதரசனும் ஒட்சிசனும் உயர் மின் இறக்கத்திற்குட்படுத்தும் போது நைத்திரிக் ஒட்சைட்டு உண்டாகும். $N_2 + O_2 = 2NO$ உதாரணம் : மின்னலின்போது ஆய்வுகூடத்தில் செம்புடன் ஐதான நைத்திரிக்கமிலம் தாக்கமுறுவதால் கிடைக்கும்.

$3Cu + 8HNO_3 = 3Cu(NO_3)_2 + 2NO\ \ 4H_2O$

நிறமற்ற வாயு வளியுடன் தொடுகையுள்ள மாத்திரத்தில் கபில நிறமான நைதரசனீரொட்சைட்டு உண்டாகும்.

$2NO + O_2 \rightarrow 2NO_2$

இவ்வாயு நீரில் அரிதாகக் கரையும். நடுநிலையான வாயு.

(iii) நைதரசன் ஈரொட்சைட்டு ($NO_2$) வும் இரு நைதரசன் நாவொட்சைட்டும் ($N_2O_4$)

செம்பு செறிந்த சல்பூரிக்கமிலத்துடன் வெப்பமேற்றும்போது இவ் வாயு பெறப்படும்.

$Cu + 4HNO_3 \rightarrow Cu(NO_3)_2\ 2H_2O + 2NO_2 \uparrow$

$140^0C$ க்கு மேல் கரும்கபில நிறமான இவ்வாயு மூலக்கூறுகள், வெப்பநிலை குறைய $N_2O_4$ ஆக மாறத் தொடங்கும்.

$2NO_2 \rightleftharpoons N_2O4$

$22^0C$ யில் $N_2O_4$ மெல்லிய மஞ்சள் நிறமான திரவமாக மாறும். $12^0C$ யில் $N_2O_4$ நிறமற்ற திண்மமாக மாறும்.

இது அமிலவியல்புடையதாகும். இது ஒரு கலப்பு அமில நீரிலியாகும்.

$2NO_2 + H_2O \rightarrow HNO_3 + HNO_2$

இவ்வாயுவை ஈயநைத்திரேற்றை வெப்பமேற்றியும் பெற்றுக் கொள்ளலாம். உறை கலவையினால் $NO_2$வை

$2Pb(NO_3)_2 \rightarrow 2PbO + 4NO_2 \uparrow + O_2$

திரவமாக ஒடுக்கி ஒட்சிசனில் இருந்து பிரிக்கலாம்.

(iv) இரு நைதரசன் மூவொட்சைட்டு ($N_2O_3$) இது நைதரசு அமிலத்தின் அமில நீரிலியாகும். இது நீல நிறமான பளிங்கு. உருகு நிலை $120^0C$.

$N_2O_3 + H_2O \rightarrow 2HNO_2$

உறுதியற்றது. தாழ்ந்த வெப்பநிலையில் இது பிரிந்துவிடும்.

$2N_2O_3 \rightleftharpoons 2NO\ N_2O_4$

(v) இரு நைதரசன் ஐயொட்சைட்டு $N_2O_5$

இது நைத்திரிக்கமிலத்தின் அமில நீரிலியாகும்.

$2HNO_3 \rightarrow N_2O_5 + H_2O$ பொசுபரசு ஐயொட்சைட்டுடன் செறிந்த நைத்திரிக் கமிலத்தை $30^0C$ யில் காய்ச்சி வடித்து வெள்ளை நிறத் திண்மமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

$4HNO_3 + P_4O_{10} \rightarrow 4HPO_3 + 2N_2O_5$

நைதரசனின் ஒட்சைட்டுகள் பற்றிய மேற்கூறிய தகவல்கள், இவற்றின் அமிலவியல்பை எடுத்துக்காட்டுகிறது.

**அமோனியா**

ஆய்வுகூடத்தில் அமோனியாவைத் தயாரிக்கும் சிறந்த முறை திண்ம அமோனியம் குளோரைட்டை, நீறாத சுண்ணாம்புடன் வெப்பமேற்றிப் பெற்றுக்கொள்ளலாகும்.


$2HN_4Cl + CaO \rightarrow CaCl_2 + 2NH_3 \uparrow + H_2O$

அமோனியா அறை வெப்பநிலையில் வாயுவாகக் காணப்படும். இலகுவில் குளிரூட்டி திரவமாக்கலாம். கொதிநிலை $240^0K$

இதன் பலவியல்புகளை அமோனியாவின் அமைப்பை அறிந்து கொள்வதால் விளங்கிக் கொள்ளலாம். எல்லாத் தொகுதிகளிலும் முதல் மூலகங்கள் d உபசக்தி மட்டங்கள் உள்ளவை அல்ல. நைதரசனும் அவ்வாறே.

பிணைப்புகளின் ஆக்கத்திற்கு d உபசத்தி மட்டம் இல்லாமையினால் நைதரசன் ஆதக்கூடியதாக நான்கு தனிப்பிணைப்புகளை உண்டாக்கலாம். அமோனியா அடிப்படையில் ஒரு நான்முகி அமைப்பு உடையது. ஒரு நிலையில் தனிச்சோடி இலத்திரன்கள் காணப்படுகின்றன. இதன் காரணமாக இம் மூலக்கூறு ஒரு முனைவுள்ள மூலக்கூறாகின்றது. எதிர் ஏற்றச் செறிவுள்ள நைதரசன் அணு அடுத்த செறிவுள்ள நைதரசன் அணு அடுத்த மூலக்கூறுகளில் உள்ள (நேர் ஏற்றச் செறிவுள்ள) ஐதரசன் அணுக்களை கவர்வதால் நீர் மூலக்கூறுகளுக்கிடையில் ஏற்படுவது போன்று இங்கேயும் ஐதரசன் பிணைப்பு ஏற்படுகிறது. இதன் காரணமாக அமோனியாவுக்கு உயர்ந்த கொதிநிலையும், உயர்ந்த ஆவியாதல் மறை வெப்பமும் உண்டு.

அமோனியா மிகுந்த கரைதிறன் உடைய திரவமாகும். 1 கனவளவு நீர், அறை வெப்பநிலையில் ஏறக்குறைய 700 கனவளவு அமோனியாவைக் கரைக்கின்றது. நிரம்பிய அமோனியாக் கரைசலின் அடர்த்தி 880 ஆகையால் இக்கரைசல் எட்டு எண்பது கரைசல் என்று அழைக்கப்படும். இத்தகைய உயர் கரை திறனுக்கு காரணம் அமோனியா மூலக் கூறுகளுக்கும் நீர் மூலக்கூறுகளுக்கும் இடையில் ஏற்படும் ஐதரசன் பிணைப்பு ஒரு காரணமாகலாம். அமோனியா நீருடன் தாக்கமுற்று அமோனியம் ஐதரொட்சைட்டு உண்டாதல் இரண்டாவது காரணமாகும்.



$NH_3 + H_2O = NH_4^+ OH^-$

அமோனியாவின் இரசாயனவியல்புகளிற்கு முக்கிய காரணம் அமோனியா மூலக்கூறின் நைதரசனில் உள்ள தனிச்சோடி இலத்திரன்களின் விளைவாகும்.

உதாரணம் : 1. $\ddot{N}H_3 + H_2O \longrightarrow NH_4^+OH^-$

2. $H_3N: + AlCl_3 = H_3N \rightarrow AlCl_3$

3. $H_3N: + BCl_3 = H_3N \rightarrow BCl_3$

அமோனியா சிக்கல் சேர்வைகள் ஆக்கத்தில் ஒரு இணையீடு (Ilgran) ஆகத் தொழிற்படுவதும் இத் தனிச் சோடி இலத்திரன்களினால் தான். இவை பற்றி பின்னால் தாண்டல் மூலகங்களில் அறிந்து கொள்வோம்.

அமோனியா மூலமாகத் தொழிற்படும் தாக்கங்களிற் சில

(1) $\underset{(g)}{NH_3} + \underset{(g)}{HCl} \rightleftharpoons NH_4Cl$ அதாவது $NH_4^+Cl^-$

(2) $\underset{(g)}{2NH_3} + \underset{(aq)}{H_2SO_4} \rightarrow 2NH_4^+ SO_4^{2-}$ அதாவது $(NH_4)_2SO_4$

அமோனியாவின் கரைசல்களில் $OH^-$ அயன்கள் இருப்பதனால் இவை பல உலோக உப்புக்களின் கரைசல்களில் இருந்து அவற்றின் ஐதரொட்சைட்டுக் களை வீழ்படிவாகக் கொடுக்கின்றன.

$FeCl_3\,(aq) + 3NH_4OH \longrightarrow Fe(OH)_3\downarrow + 3NH_4Cl$

செம்மஞ்சள் கரைசல் — கபில வீழ்ப்படிவு

$FeSO_4\,(aq) + 2NH_4OH \longrightarrow Fe(OH)_2\downarrow + (NH_4)_2SO_4$

மென்பச்சை — ஊத்தைப்பச்சை

$Al_2(SO_4)_3(aq) + 6NH_4OH \longrightarrow 2Al(OH)_3\downarrow + 3(NH_4)_2SO_4$

நிறமற்ற கரைசல் — வெள்ளை ஊண் பசை போன்றது

சில சந்தர்ப்பங்களில் முதலில் வீழ்படிவு தோன்றி பின்பு சிக்கல் அயன்கள் தோன்றுவதனால் வீழ்படிவு கரைகின்றது.

உ-ம்: $CuSO_4 + 2NH_4OH \longrightarrow Cu(OH)_2\downarrow + (NH_4)_2SO_4$

வெண்ணீல வீழ்படிவு

$Cu^{2+} + 4NH_3 \longrightarrow [Cu(NH_3)_4]^{2+}$

கடும் நீலக் கரைசல்

$2AgNO_3 + 2NH_4OH \longrightarrow Ag_2O\downarrow + 2NH_4NO_3 + H_2O$

கபில

$Ag^+ + 2NH_3 \rightarrow [Ag(NH_3)_2]^+$

$Zn(OH)_2 + 4NH_3 \longrightarrow [Zn(NH_3)_4]^{2+} + 2OH^-$

## பொசுபோரிக்கமிலமும் பொசுபேற்றுக்களும்

நேர்பொசுபோரிக்கமிலம் $(H_3PO_4)$ ஒரு நீர்மயமாகும் பளிங்குருத் திண்மமாகும். இது ஒரு மூலவமிலமாகும். இது மூன்று வகையான உப்புக்களை உருவாக்கும்.

உதாரணம் : $NaH_2PO_4$, $Na_2HPO_4$, $Na_3PO_4$

அநேகமான பொசுபேற்றுக்கள் நீரில் கரையாதவை. முதலாம் தொகுதி மூலகங்களின் பொசுபேற்றுக்கள் (இலிதியத்தைத் தவிர) நீரில் கரையும். நேர் பொசுபேற்று அயன் $PO_4^{3-}$ ஒரு வன் மூலகமாகும். அவ்வயன்கள் உள்ள கரைசல்கள் நீர்ப்பகுப்பினால் மூலவியல்பைக் காட்டும்.

$$(Na^+)_3 PO_4^{3-} + H_2O \rightleftharpoons Na^+OH^- + (Na^+)_2 HPO_4^{2-}$$

அல்லது $PO_4^{3-} + H_2O \rightleftharpoons OH^- + HPO_4^{2-}$

$OH^-$ அயன்கள் இருப்பதனால் இக்கரைசல்கள் மூலவியல்பைக் காட்டும்.

நேர் பொசுபேற்றுக்களை ஏறக்குறைய $60^0C$ யில் நைத்திரிக்கமிலத்துடனும் அமோனியம் மொலித்தேற்றுடனும் வெப்பமேற்றினால் மஞ்சள் நிறமான வீழ்படிவு கிடைக்கும். இது நேர் பொசுபேற்றுக்களுக்கு ஒரு சோதனையாகும்.

## ஆறாம் தொகுதி மூலகங்கள்

**சில பொதுக் குறிப்புகள்**

இத் தொகுதி மூலகங்கள் ஒட்சிசன், கந்தகம், செலேனியம், தெலூறியம், பொலோனியம் ஆகும். இவற்றின் ஈற்றுச் சத்திப்படி ns2 np4 ஆக அமைந்திருக்கும். இவற்றின் பௌதிகவியல்புகளைக் கீழ்வரும் அட்டவணையில் அவதானிக்கவும்.

| மூலகம் | அணு எண் | இலத்திரன் நிலை அமைப்பு | அணு ஆரை $A^0$ | அயன் ஆரை $A^0$ | உருகு நிலை $C^0$ | கொதி நிலை $C^0$ | முதலாம் அயனாக்க சக்தி $eV$ | மின் எதிர்மை |
|---|---|---|---|---|---|---|---|---|
| O | 8 | $[He]\ 2S^2, 2p^4$ | 0 74 | 1 40 | -218·95 | -182·96 | 13·6 | 3 5 |
| S | 16 | $[He]\ 3S^2 + 3p^4$ | 1·04 | 1·84 | 118·95 | 444·6 | 10 4 | 2·5 |
| Se | 34 | $[Ar]\ 3d^{10}, 4S^2, 4p^4$ | 1·17 | 1·98 | 217·4 | 684·8 | 9·75 | 2·4 |
| Te | 52 | $[Kr]\ 4d^{10}, 5S^2, 5p^4$ | 1·37 | 2·21 | 449·8 | 1390 | 9·01 | 2·1 |
| Po | 84 | $[Xe]\ 6S^2, 6p^4$ | 1·52 | — | — | — | 8·43 | 2·0 |

**அலோகவியல்புகள்**

6 ஆம் தொகுதி மூலகங்களிலும், மற்ற தொகுதிகளில் காணப்பட்ட அலோகவியல்பிலிருந்து உலோகவியல்புக்கான மாற்றங்கள் தொகுதி வழியே படிமுறையாகக் காணப்படுகின்றன. ஒட்சிசனும், கந்தகமும் அலோகங்களாகும். செலேனியமும், தெலூரியமும் உலோகப் போலிகளாக வும், பொலோனியம் உலோகமாகவும் இருக்கின்றன.

**ஒட்சியேற்ற நிலைகள்**

இவை இரண்டு இலத்திரன்களை ஏற்று இருவலுவுள்ள எதிர் அயன்களைத் தரலாம்.

உதாரணம் : $O^{2-}$, $S^{2-}$ (விதிவிலக்கு Po) இவற்றின் ஐதரைட்டுகள் இரண்டு பங்கீட்டுப் பிணைப்புக்களினால் ஆனது.


$H_2O$, $H_2S$, $H_2Se$, $H_2Te$, $H_2Po$

தெலூரியமும் பொலோனியமும் முறையே $Te^{+4}$, $Po^{+4}$ ஆகிய அயன்களை உருவாக்கலாம். ஒட்சிசனைத் தவிர மற்ற மூலகங்களில் நிரம்பாத d ஒழுங்குகள் உடையவையாய் இருப்பதால் அவை மேலும் பங்கீட்டுப் பிணைப்புகளை ஏற்படுத்தி அட்டகத்தை விரிவாக்கும்.

உதாரணம் $SF_6$


விளக்கப்படம் : கந்தகத்தின் ஈற்று சத்தி மட்டம்

(1) தரைநிலை




2 சோடியில்லா இலத்திரன்கள் : 2 பங்கீட்டுப் பிணைப்புகள்

(ii) கிளர்வூட்டப்பட்ட நிலை



நான்கு தனி இலத்திரன்கள் : நான்கு பிணைப்புகள் உண்டாக்கலாம்.

(iii) மேலும் கிளர்வூட்டப்பட்ட நிலை



6 தனி இலத்திரன்கள் இருப்பதனால் 6 பங்கீட்டுப் பிணைப்புக்கள் ஏற்படலாம்.

**மூலக்கூற்று அமைப்புகள்:**

ஒட்சிசன் ஈரணு மூலக்கூறுகளை உருவாக்கும். மற்றைய மூலகங்கள் சிக்கலானவையாக இருக்கும்.
உதாரணம் : கந்தம் $S_8$ ஆகும்.

**புற திருப்பங்கள் :**

எல்லா மூலங்களும் புற திருப்பங்களாகக் காணப்படுகின்றன.
உதாரணம் : (i) $O_2$, O3 ஓசோன்
(ii) கந்தகம் : சாய் சதுரக் கந்தகம்
ஒரு சரிவுக் கந்தகம்
களிக்கந்தகம் முதலியன.

**ஐதரைட்டுகள் :**

இத் தொகுதியின் ஐதரைட்டுகள் எல்லாம் ஆவிப்பறப்பானவையாகும். $H_2O$, $H_2S$, H2Se, $H_2Te$, $H_2Po$ :இவற்றின் உறுதி இவ் வொழுங்கில் குறையும். நீரைத் தவிர மற்ற ஐதரைட்டுகள் துர் தன்மை உடையவை. அமிலத்தன்மை நீரிலிருந்து $H_2Te$ வரை அதிகரிக்கும். மின் எதிர்மை வித்தியாசங்களைக் கொண்டு தொகுதி வழியே அமிலவியல்பு அதிகரிப்பதை விளக்க முடியாது. இம் மூலகங்களின் அணுக்களின் பருமன் அதிகரிப்பதனால் ஐதரசனுடன் அதன் பிணைப்பு வலு குறைந்து வருகிறது எனலாம். ஆகவே அமிலவியல்பு அதிகரிக்கின்றது.

ஆவிப்பறப்பாகும் தன்மை நீரில் மிகவும் குறைவானதாகும். அதாவது நீர் ஏனைய ஐதரைட்டுகளிலும் உயர்ந்த கொதிநிலையுடையதாகும். இதற்கான காரணம் ஐதரசன் பிணைப்பினால் மூலக்கூறுகளுக்கிடையில் ஏற்படும் இணைப்பே.

**ஒட்சைட்டுகள்:**

எல்லா $MO_2$ என்ற பொதுச் சூத்திரம் உடைய ஒட்சைட்டுகள் உண்டாகும். $SO_2$ மட்டும் வாயுவாகும். மற்றவை திண்மங்கள் S,Se, Te ஆகியவை $MO_3$ என்ற பொதுச் சூத்திரம் உடைய மூவொட்சைட்டுகளையும் உண்டாக்கும்.

**ஒட்சி அமிலங்கள்:**

சல்பூரசு அமிலம் ($H_2SO_3$) சல்பூரிக்கமிலம் ($H_2SO_4$) ஆகிய ஒட்சி அமிலங்களை கந்தகம் தருவது போல் Se, Teயும் ஒத்த அமிலங்களைத் தரும். இவ்வமிலங்களின் உறுதிப்பாடும் வன்மையும் தொகுதியின் வழியே குறைகின்றது.

**அயனாக்கற் சக்தி**

தொகுதியின் வழியே குறைகின்றது.

**மின் எதிர்மை**

மின் எதிர்மையம் தொகுதியின் வழியே படிமுறையாகக் குறைகின்றது.

**ஏலைட்டுகள்**

இத் தொகுதி மூலகங்களின் ஏலைட்டுகள் அறியப்பட்டுள்ளன. ஏலைட்டுக்களில் இம் மூலகங்களின் வலுவளவு ஆறாகவும் (உ-ம்) $SF_6$, $SeF_6$), நான்காகவும் (உ-ம் : $TeCI_4$) இரண்டாகவும் (உ-ம் : $SCI_2$ $F_2O$, $TeBr_2$) இருக்கலாம். இருபகுதியமாகக் காணப்படும் ஓர் ஏலைட்டு களும் (உ-ம் $S_2CI_2$) உண்டு. இவற்றில் உள்ள பிணைப்புகள் பெரும்பாலும் பங்கீட்டு வலுப் பிணைப்புகளாகும்.

**காபனுடன் சேர்வைகள்**

எல்லா மூலகங்களும் காபனுடன் சேர்வைகளை ஆக்கும்.
அவையாவன:
CO, $CO_2$, CS, $CS_2$, $CSe_2$, $CTe_2$

**கந்தகத்தின் இருக்கை:**

கந்தகம் சுயாதீனமாக சிசிலி, இத்தாலி, யப்பான், தென் அமெரிக்கா, U.S.A, ருசியா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன.
சேர்வை நிலையில் பின்வரும் கனிப் பொருள்களாகக் காணப்படுகின்றது.

| | |
|---|---|
| நாகமயக்கி | Zns |
| கலேனா | PbS |
| செப்பு கந்தகக் கல் | Cu $FeS_2$ |
| கிப்சம் | $CaSO_4$ $2H_2O$ |
| பரிற்றா | $BaSO_4$ |
| எபுசம் உப்பு | $MaSO_4$ $7H_2O$ |

## கந்தகத்தின் இயல்புகள்

**பௌதிகவியல்புகள்:**

சாதாரணமாக கந்தகம் ஒரு மெல்லிய மஞ்சள் நிற பளிங்குருத் திண்மமாகும். இதற்கென சுவையும், மெல்லிய மணமும் உண்டு. இது நீரில் கரையாது. ஆனால் காபனிருசல்பைட்டில் நன்றாகக் கரையும். அற்ககோல், ஈதர் ஆகிய திரவங்களில் மிக அற்பமாகவே கரையும். மின் வெப்பம் ஆகியவற்றின் அரிதிற் கடத்தியாகும். இதற்கு பல புறதிருப்ப வடிவங்கள் உண்டு.

**இரசாயனவியல்புகள் :**

(i) எரிதல் இது வளியில் $250^o$ கு வெப்பமேற்றப்பட்டால், மெல்லிய நீல நிறச் சுவாலையுடன் எரிந்து கந்தகவீரொட்சைட்டைத் தரும். கந்தக மூவொட்சைட்டு அற்பமாகத் தோன்றக்கூடும்.

$$S + O_2 = SO_2$$
$$2S + 3O_2 = 2SO_3$$

பல உலோகங்களுடனும், அலோகங்களுடனும் சேரும் இதன் தொழிற்பாடு ஒட்சிசனுடனும் ஒப்பிடக்கூடியது.

(1) உதாரணமாக காபன் செஞ்சூட்டில் உள்ள பழுப்பு நிலக்கரியின் மேல் கந்தக ஆவி செலுத்தப்பட்டால் காபன் இரு சல்பைட்டு ஆகும்.

$$C + 2S \longrightarrow CS_2$$

(2) ஐதரசனும் குளோறினும் கொதிக்கும் கந்தகத் திரவத்தினூடாக செலுத்தப்பட்டால், இவற்றின் சேர்வைகள் உண்டாகும்.
$S + H_2 = H_2S$ (ஐதரசன் சல்பைட்டு)
$2S + CI_2 = S_2CI_2$ (கந்தகவோர் குளோரைட்டு)

அநேக உலோகங்களுடன் வெப்பமேற்றும்போது கந்தக உலோக சல்பைட்டுக்களைத் தருகிறது.
உதாரணம் :
$Fe + S = FeS$
$Zn + S = ZnS$
$Cu + S = CuS$

(4) தாழ்த்தும் கருவியாகத் தொழிற்படல்: செறிந்த சல்பூரிக் அமிலத்துடன் வெப்பமேற்றப்படும் போதும், செறிந்த நைத்திரிக்கமிலத்துடன் வெப்பமேற்றப் படும் போதும் இவை முறையே கந்தகவீரொட்சைட்டாகவும் நைதரசனீரொட் சைடாகவும் தாழ்த்தப்படுகின்றன.

$$S + 2H_2SO_4 \rightarrow 3SO_2 + 2H_2O$$
$$S + 6HNO_3 \rightarrow H_2SO_4 + 6NO_2 + 2H_2O$$

(5) கந்தகம் காரங்களுடன் வெப்பமேற்றப்பட்டால் சல்பைட்டுக்களும் கந்தக சல்பேற்றுக்களும் உண்டாகும்.

$$4S + 6NaOH \rightarrow 2Na_2S + Na_2S_2O_3 + 3H_2O$$

(6) ஒட்சியேற்றும் கருவிகளுடன், கந்தகம் வெடிக்கும் தகவுள்ள கலவைகளைத் தருகிறது.
**உதாரணம் :** பொற்றாசியம் குளோறேற்று, பொற்றாசியம் நைத்திரேற்று.

**கந்தகத்தின் உபயோகங்கள்:**

பின்வருவனவற்றின் பெருந்தொழிற் தயாரிப்புகளில் உபயோகப்படுகிறது.
1) கந்தகவீரொட்சைட்டு
2) காபனிருசல்பைட்டு
3) பொசுப்பரசு மூசல்பைட்டு (தீப்பெட்டித் தொழில்)
4) வெடிமருந்தும் வாணங்களும் (கரி, கந்தகம், பொற்றாசியம் நைத்திரேற்று)

இறப்பரை வல்கனைசுப்படுத்தலில் கந்தகம் உபயோகிக்கப்படுகிறது.

**கந்தகத்தின் புற திருப்பங்கள்**

ஒரு மூலகத்தின் புறதிருப்பங்கள் என்பன ஒரே மூலகம் பௌதிகவியல்பு களில் வித்தியாசங்களைக் காட்டும் உருவங்களில் காணப்படுவதாகும். கந்தகத்தின் புற திருப்பங்களாவன.

1. சாய்சதுரக் கந்தம் அல்லது $\alpha$ கந்தகம்
2. ஒரு சரிவுக் கந்தகம் அல்லது $\beta$ கந்தகம்
3. களிக்கந்தகம் அல்லது $\gamma$ கந்தகம்
4. கூழ்க்கந்தகம்

**பரிசோதனை :** சாய்சதுரக் கந்தகத்தை தயாரித்தல்

குறிப்பு :
1) சுவாலைகள் அருகாமையில் இருத்தல் தவிர்க்கப்படவேண்டும்.
$CS_2$ திரவம் எரியும் தகவுடையது.
2) $CS_2$ ஆவி நச்சுத்தன்மையானது காற்றோட்டமான இடத்தில் இப்பரி சோதனை செய்யப்படும்.

ஒரு சோதனைக் குழாயில் 1 cm ஆழத்திற்கு கந்தகத் தூளை எடுத்து அதனுள் 5 க.ச.மீ காபனீரு சல்பைட்டை சேர்க்கவும். 2 நிமிடங்களுக்கும் நன்றாகக் குலுக்கவும். பின்பு ஒரு மணிக்கூட்டுக் கண்ணாடிக்குள் வடித்து, அதன் மேற்பரப்பில் ஒரு வடிதாளை வைத்து (ஆவியாதலின் விரைவைக் குறைக்க) சில நிமிடங்களின் பின் அவதானிக்கவும். சில பளிங்குகள் உண்டாகி இருக்கும். நுணுக்குக் காட்டியின் கீழ் இவற்றை அவதானிக்கவும்.

**பரிசோதனை :** ஒரு சரிவுக் கந்தகத்தை தயாரித்தல்.

ஒரு ஆவியாக்கற் கிண்ணத்தை கந்தகத்தினால் நிரப்பி, அதை இடையிடையே கலக்கி மெதுவாக உருகும்வரை வெப்பமேற்றவும். முழுவதும் உருகியதும் அதை சிறிது நேரம் விட்டு வைக்கவும். அப்பொழுது கந்தகத்தில் மேற்பரப்பு ஒரு பொருக்காக மாறும். இதற்கிடையில் ஒரு குறட்டை பன்சன் சுவாலையில் வெப்பமேற்றி வைத்துக் கொள்ளவேண்டும். வெப்பமேற்றிய குறட்டினால் அதன் மேற்பரப்பில் துளையிட்டு அதன் உள்ளே இருக்கும் கந்தகத் திரவத்தை ஒரு பீங்கான் தகட்டில் ஊற்றுக. ஒரு கத்தியினால் பொருக்கை நீக்கி உள்ளே அவதானித்தால், மெல்லிய ஊசிபோன்ற கடும் மஞ்சள் நிறமுடைய ஒரு சரிவுப் பளிங்குகள் படிந்து காணப்படும். கந்தகம் இப்படியே விடப்பட்டால் இப்பளிங்குகள் நொருங்கும் தன்மையடையும். ஒளி உட்புகா மெல்லிய மஞ்சள் நிறத்தைப் பெறுகிறது. சிறிய மஞ்சள் நிறமான சாய்சதுரப் பளிங்குகளாக கந்தகம் இப்பொழுது மாறியிருக்கும்.

(தொடரும்...)

# கும்பமேளா சென்று திரும்பியவேளை

# ரயில் நிலைய நெரிசலில் சிக்கி 36 பேர்பலி



உத்தரப்பிரதேசத்தின் அலகாபாத் நகரில் நடைபெற்று வரும் கும்பமேளா நிகழ்ச்சியில் மவுனி அமாவாசையை முன்னிட்டு சுமார் 3 கோடி பக்தர்கள் நேற்றுமுன்தினம் புனித நீராடினர்.

இதனையடுத்து, சொந்த ஊர்களுக்குச் செல்வதற்காக பக்தர்களில் பெரும்பாலானோர், அலகாபாத் ரயில் நிலையத்திற்கு வந்திருந்ததனால், பக்தர்கள் கூட்டத்தால் ரயில்நிலையம் நிரம்பி வழிந்து காணப்பட்டது.

இந்நிலையில், மாலை சுமார் 7 மணி அளவில் 6 ஆவது நடைமேடையில் வந்த ரயிலில் ஏறுவதற்காக 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகள் திடீரென விரைந்ததால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கி 36இற்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தனர். ஏராளமானோர் காயம் அடைந்தனர்.

எனினும் கூட்டத்தை ஒழுங்குபடுத்த பொலிஸார் தடியடி நடத்தியதே இந்த துயர சம்பவத்திற்குக் காரணம் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள பிரதமர் மன்மோகன் சிங், பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க ரயில்வே அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த துயரச் சம்பவத்திற்கு பாரதிய ஜனதா கட்சியும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது. அதேநேரத்தில், பெருமளவில் மக்கள் கூடுவார்கள் என்பது தெரிந்திருந்தும், அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதது ஏன் என்றும் அக்கட்சி கேள்வி எழுப்பி உள்ளது.

கூட்ட நெரிசலுக்கான காரணத்தை அறிய உத்தரப்பிரதேச முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார். மேலும், உயிர் இழந்தவர்களின் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இந்தியச் செய்திகள்



நாடாளுமன்ற தாக்குதல் குற்றவாளி அப்சல்குரு தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து, காஷ்மீர் மாநிலத்தின் பல பகுதிகளில் நேற்று முன்றாவது நாளாக ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தது. தலைநகர் ஸ்ரீநகரில், வெறிச்சோடியுள்ளசாலையில், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸார்.

# சிவப்புக் கம்பள வரவேற்பை மகிந்தவிற்கு அளிக்கவில்லை

## என்கிறார் வாசன்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய அரசு சார்பில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்படவில்லை என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார். முன்னாள் மேயர் எம்.ராதாகிருஷ்ணபிள்ளை நூற்றாண்டு விழா வேப்பேரி பெரியார் திடலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வந்த ஜி.கே.வாசனிடம் நிருபர்கள் கேட்ட கேள்விக்கு அவர் பதில் கூறியதாவது

இலங்கை அதிபர் ராஜபக்ஷ இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்தார். அவருக்கு இந்திய அரசு சார்பில் சிவப்பு கம்பளம் வரவேற்பு அளிக்கவில்லை. திருப்பதி வந்தது அவரது சொந்தப் பயணம். தமிழக மக்கள் உணர்வை புரிந்து பயணத்தை அவர் இரத்து செய்திருக்க வேண்டும். மேலும், அப்சல்குரு தூக்குத்தண்டனை குறித்து கேட்டதற்கு, அப்சல்குரு தூக்குதண்டனை பயங்கரவாதத்துக்கு எதிரான மத்திய அரசின் நடவடிக்கையாகும். இதில் சட்டம் தன் கடமையை செய்துள்ளது என்றார்.

# குஷ்புவை பாதுகாப்பதற்கு நேரமில்லாத கருணாநிதி





குஷ்புவுக்கு பாதுகாப்பு கொடுக்கவே நேரமில்லாதவருக்கு தமிழக மக்களை பாதுகாக்க எப்படி நேரம் இருக்கும் என கருணாநிதி குறித்து பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம் தெரிவித்தார். மத்திய அரசு கட்சிக்காக எதையும் அறிவிக்கவில்லை. மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க.வும் தமிழக விவசாயிகளுக்கு நிவாரணம் பெற்றுத்தர, வலியுறுத்தவும் இல்லை. கருணாநிதிக்கு குஷ்புவை காப்பாற்றவே நேரமில்லை. அதில், தமிழக மக்களை காப்பாற்றவும், பாதுகாக்கவும் அவருக்கு நேரம் எங்கே இருக்கிறது. தமிழக முதல்வர் விவசாயிகளின் நலனை காக்க, காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை, மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என தொடர்ந்து போராடினார். இதற்காக தி.மு.க. இதுவரை மத்திய அமைச்சர்களை அனுப்பி, மத்திய அரசிடம் முயற்சி மேற்கொள்ளவில்லை. கடந்த காலத்தில் மத்தியிலும், மாநிலத்திலும் தி.மு.க.ஆளும் கட்சியாக இருந்த போது கூட, அதற்கான முயற்சியை அவர் எடுக்கவில்லை. இவ்வாறு அமைச்சர் ராமலிங்கம் தெரிவித்தார்.

# கும்பமேளாவில் நித்தியானந்தா ஆதரவாளருடன் நீராடினார்

(அலகாபாத்)

கும்பமேளாவில் கலந்து கொண்ட நித்தியானந்தா அங்கு மூன்று ஆறுகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார். அலகாபாத் நகரில் மகா கும்பமேளா நிகழ்ச்சி கோலாகலமாக நடந்து வருகிறது. நேற்றுமுன்தினம் அங்கு



புனித நீராடுவதற்காக கோடானு கோடி மக்கள் குவிந்தனர். பெரும் திரளான சாதுக்கள், பிரபலமான சாமியார்கள் உள்பட பல தரப்பினரும் குவிந்துள்ளனர். அதேபோல சாமியார் நித்தியானந்தாவும் அங்கு தனது ஆதரவாளர்கள் சகிதம் முகாமிட்டிருந்தார்.

தினசரி அவரது முகாமில் பஜனைகளும் நடந்தன. நேற்று முன்தினம் அவர் கங்கா, யமுனா, சரஸ்வதி ஆகிய புனித ஆறுகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார். மவுனி அமாவா சையை யொட்டி இந்த புனித நீராடல் நடைபெற்றது.

மகா கும்பமேளாவின் முக்கிய நிகழ்ச்சி இந்த புனித நீராடல் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜிவ் கொலைவழக்கின் விசாரணை முடிவடையவில்லை

## கூறுகிறார் ரகோத்தமன்



(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விசாரணை இன்னமும் முழுமையாக முடிவடையவில்லை என்று அக்கொலை வழக்கின் விசாரணை அதிகாரியான ரகோத்தமன் தெரிவித்திருக்கிறார்.

அப்சல் குருவைத் தூக்கிலிட்ட நிலையில் ராஜிவ் மற்றும் பியாந்த்சிங் கொலையாளிகள் இன்னமும் தூக்கிலிடப்பட வில்லையே என்று ஒருதரப்பில் கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது. இது தொடர்பாக ஊடகங்கள் பலவும் பல கோணங்களில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ராஜிவ் கொலையாளிகள் விவகாரமும் அப்சல் குரு விவகாரமும் எப்படி வேறுபட்டது என்று டெக்கான் கிரானிக்கல் பத்திரிகையில் மூத்த பத்திரிகையாளர் பகவான்சிங் ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில், ராஜிவ் காந்தி கொலையாளிகளை தூக்கிலிட்டால் காங்கிரஸ் கட்சிக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் 2014ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில் கடுமையான பாதிப்பு ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார். மேலும் இந்த வழக்கில் கருணை மனு நிராகரிக்கப்பட்டது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இந்தக் கட்டுரைக்காக பேட்டியளித்திருக்கும் ராஜிவ் கொலை வழக்கு விசாரணை அதிகாரி ரகோத்தமனோ வழக்கு விசாரணையே இன்னமும் முழுமை அடையவில்லை என்று கூறியுள்ளார். ராஜிவ் கொலையாளிகளான தானு மற்றும் சிவராசனுக்கும் காங்கிரஸ் மூத்த தலைவர் மரகதம் சந்திரசேகர் குடும்பத்தினருக்குமான தொடர்பு என்ன? 1991 ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தை திமுக தலைவர் கருணாநிதி திடீரென இரத்துச் செய்தது ஏன்? என்பது போன்ற கேள்விகளுக்கு, மரகதம் சந்திரசேகர் மற்றும் கருணாநிதியிடம் விசாரணையே நடத்தப்படவில்லை. ஒரு வழக்கில் அத்தனை அம்சங்களுமே விசாரிக்கப்பட வேண்டும். ஆனால் ராஜிவ் கொலை வழக்கில் அப்படி நடக்கவில்லையே என்று குமுறியிருக்கிறார்.

இதேபோல் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சந்திராசாமி, சுப்பிரமணியசுவாமி ஆகியோரை விசாரிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் திருச்சி வேலுச்சாமி நீண்டகாலமாக வலியுறுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# யாத்திரிகர்கள் பேருந்து கவிழ்ந்து பதினாறு பேர் பலி; பலர் படுகாயம்



(டாக்கா)

பங்களாதேஷில் யாத்திரிகர்களின் பேருந்து விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காயமடைந்தனர்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இருந்து 300 கி.மீற்றர் தூரத்தில் உள்ள காக்ஸ் பஜார் மாவட்டத்தில் உள்ள தர்காவுக்கு புனித யாத்திரை சென்ற 43 இஸ்லாமியர்கள் தனியார் பேருந்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

டாக்கா நோக்கி வந்துக் கொண்டிருந்த அந்த பஸ் நேறறு அதிகாலை சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து உயரமான ஒரு பாலத்தின் தடுப்புச் சுவரை உடைத்துக் கொண்டு தலைகுப்புற தரையில் பாய்ந்தது. விபதது பற்றிய தகவல் கிடைத்ததும் மீட்புப் படையினருடன் சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்து சென்றனர். இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த குழந்தைகள் உட்பட 16 பேரின் சடலங்களை மீட்டனர்.

படுகாயமடைந்த 15 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள்னர்.

## ஜேர்மன் கல்வி அமைச்சரின் பட்டப்படிப்பு மோசடி அம்பலம்




ஜேர்மனியில் பி.எச்.டி. ஆராய்ச்சி படிப்பில் தில்லு முல்லு செய்ததாக எழுந்த புகாரின் பேரில் அந்நாட்டு கல்வி அமைச்சர் இராஜினாமா செய்தார். ஜேர்மனியில் ஆளும் ஜனநயாக கிறிஸ்டியன கட்சி ஆட்சி உள்ளது. சான்சலராக ஏஞ்சலா மார்க்கல் உள்ளார்.

இவரது அமைச்சரவையில் கல்வி அமைச் சராக இருந்த அன்னாட்டி ஸ்வாச்சவான், இவர் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர், டாஸ் செல்ட்ரோப் பல்கலை யில ஆராய்ச்சி படிப்பு (பி.எச்.டி) பட்டம் பெற்றார். இதனை ஆய்வு செய்த போது வேறொருவரின் ஆய்வு கட்டுரையை அப்படியே உல்டா செய்து பி.எச்.டி. பட்டம் பெற்றதாக தெரியவந்தது.

இந்த விவகாரம் அம்பலமானதை தொடர்ந்து,அவரது பி.எச்டி. பட்டம் பறிக்கப்பட்டது. தொடர்ந்து அவருக்கு நெருக்கடி ஏற்படவே, தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார். அவரது இராஜினாமாவை சான்சலர் ஏஞ்சலா மார்க்கல்லும் ஏற்றுக் கொண்டார்.

## விண்வெளியிலும் பாடல்

விண்வெளியில் முதன் முதலாக ஒரு பாடல் எழுதி பதிவு செய்யபபட்டுள்ளது. கனடாவை சேர்ந்த விண்வெளி வீரர் ஒருவரும், அமெரிக்காவின் இசைக்குழுவை சேர்ந்த பாடகர் ஒருவரும் இணைந்து இந்தச் சாதனையை செய்துள்ளனர்.



பூமிக்கு மேலே 402 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி பணிபுரியும் கனடாவைச் சேர்ந்த கிறிஸ் ஹேட்பீல்டு நல்ல பாடகரும் கூட. அவரும், பேர்நேக்டு லேடீஸ் இசைக் குழுவின் முக்கிய பாடகர் எட் ராபர்ட்சனும் நல்ல நண்பர்கள். இருவரும் சேர்ந்து விண்வெளியில் இருந்து ஒரு பாடலை பாடி, பதிவு செய்ய திட்டமிட்டனர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள கப்போலா எனும் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கிறிஸ் ஹேட்பீல்டும், கனடாவில் உள்ள ஒலிப்பதிவுக் கூடம் ஒன்றில் இருந்து எட் ராபர்ட்சனும் இணைந்து இந்த பாடலை எழுதினர்.

பிறகு, செயற்கைக்கோள் ஒளிபரப்பு மூலம் கிறிஸ் ஹேட்பீல்ட் பாடிய பாடல் பூமியில் உள்ள ஒலிப்பதிவு கூடத்தில் பதிவு செய்யப்பட்டது. அவருடன், எட்ராபர்ட்சனும் இணைந்து பாடினார்.

விண்வெளி வீரர் ஒருவர் பூமியில் உள்ள தன் அன்புக்குரியவர்களை நினைத்து பாடுவதாக, பாடல் வரிகள் அமைந்துள்ளன. பாடல் ஒலிப்பதிவு சிறப்பாக அமைந்துள்ளதாக எட் ராபர்ட்சன் தெரிவித்துள்ளார். தன் விண்வெளி பணிகளுக்கு இடையில், இன்னும் சில பாடல்களை உருவாக்கி ஒரு இசை ஆல்பம் தயாரிக்க கிறிஸ் ஹேட்பீல்டு திட்டமிட்டு உள்ளார்.

உலகச் செய்திகள்

## மிதக்கும் கல்விக்கூடங்களை அமைத்தது நைஜீரிய அரசு



நைஜீரியாவில் ஏற்படும் வெள்ளத்தால் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படக்கூடாது என்ற வகையில் சமீபத்தில் மிதக்கும பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் அதிக சனத்தொகைமிக்க நகரான லாகோஸில் அமைந்துள்ள மக்கோக்கோ எனும் ஓடைகள் மிகுந்த பகுதியில் ஒன்றுடன் ஒன்று முட்டுக்கட்டையாக அமைந்திருக்கும் தற்காலிக கட்டடங்களில் 250 000 பொதுமக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நகரில் முக்கிய போக்குவரத்து சாதனமாக படகுகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதி அடிக்கடி வெள்ளததால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அதனால் அங்கு நிலையான வீடுகளை அமைப்பது கடினம் எனவும் நைஜீரிய சிற்பி ஒருவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் தற்போது அங்கு மிகக் குறைந்த செலவில் (சூ 6250) 108 சதுர அடி பரப்பளவில் அத்திவாரமும் 33 அடி உயரத்திலும் ஒரு பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மிதக்கும் தளம் 256 பிளாஸ்டிக் டிரம்களாலும் உடல் முற்றிலும் மரத்தாலும் ஆக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக் கட்டடம் சுமார் 100 மாணவர்கள் கற்பதற்கு ஏற்ற வசதியுடையது.

மேலும் இதன் உள்ளே உள்ள மின்விளக்குகளுக்கான மின்சாரம் கூரையிலுள்ள சூரிய சகதிப் படல்கள் மூலம் சூரிய ஒளியில் இருந்து பெறப்படுகின்றது. இக்கட்டடம் மழைநீரை அப்படியே உள்வாங்கி சற்றும் ஒழுகாமல் வெளியேற்றக் கூடியது. மேலும் இப்பாட சாலைக்குள் சொந்தமாக மலசலக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்நகரில் அமைகக்கப்பட்டிருந்த பள்ளிகள் வெள்ளத்தால் அடிக்கடி பாதிக்கப்பட்டு மாணவர்களின் கல்வியும் தடைப்பட்டதாலேயே இந்த மிதக்கும் பாடசாலைத் திட்டம் கொண்டு வரபபட்டுள்ளது.

இனி வருங்காலத்தில் நைஜீரியாவில் மட்டுமன்றி மேற்கு ஆபிரிக்காவில் உள்ள செனெகல் போன்ற நாடுகளிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வரும் இடங்களில் இதே போன்ற பள்ளிகள் அமைக்கப்படும் சாத்தியக் கூறுகள் அதிகமாகியுள்ளது.

## அரிவாள், சுத்தியல் சின்னத்தை கைவிட்டது பிரெஞ்சு கம்யூனிஸ்ட்



பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் அட்டையில் இனி அரிவாள், சுத்தியலின் படம் இடம் பெறாது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

இன்றுள்ள கம்யூனிஸ்ட் இளைஞர்களுக்கு அரிவாள், சுததியல் சின்னம் ஏற்புடையதாக இல்லை என்பதால் இனி அந்த சின்னத்தைப் பயன்படுத்தப் போவதில்லை என்று அக் கட்சியின் பொதுச்செயலாளர் பியர் லாரன் ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அரிவாள் சுத்தியல் சின்னத்தை நீக்குவது கட்சியின் அழிவுக்கு வழி வகுக்கும் என்போரின் கூற்றை முற்றிலுமாக மறுக்கும் லாரன், இச்சின்னம் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியதுதான். என்றாலும் புதியதலைமுறை கம்யூனிஸ்ட்டுகளுக்கு இது பொருந்துவதாக இல்லை என்றார்.

இந்த மாற்றத்தை அறிந்து அனைவரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர் என்று பாரிஸ் நகர்ச் செயலாளர் இம்மானுவேல் டேஙட்ரான கூறினார்.

## விற்பனைக்குத் தயாராகும் மனித முகத்துடன்கூடிய நாய்



அமெரிக்காவின் மிக்சிகன் மாகாண மிருக நல அமைப்பு மனித முகத்துடன் உள்ள நாய் "டோனிக்கை" விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது. 2 வயதான அந்த நாயின் முகமும் கண்களும் மனித முகத்தை ஒத்து இருப்பது எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவ்வளவாக யாரிடமும் பழகாத இந்த டோனிக் மற்ற நாய்களைக் காட்டிலும் உயர்வானதாக கருதப்படுகிறது. பார்ககச் சந்தோசமாய் இருந்தாலும், வீட்டில் குழந்தைக்ளுடன் வைத்து பராமரிக்க சிபாரிசு செய்யப்படவில்லை. முறையான பயிற்சி, அணுகு முறைக்கு பிறகு இதை வட்டில் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது.

வீட்டில் வைத்து பராமரிக்க தயாராக உள்ள செல்லப் பிராணி வளர்ப்போர் எங்களை இணைய தளத்தில் அணுகலாம் என்று 'ஹோம்வார்ட் பௌண்ட் அனிமல் வெல்பேர் குரூப்' என்ற அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## குண்டு துளைக்காத மாளிகையில் குடியேறினார் பாகிஸ்தான் ஜனாதிபதி

(லாகூர்)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி லாகூரில், புதிதாக கட்டப்பட்டுள்ள மாளிகையில், தனது மகனுடன் குடி புகுந்துள்ளார். பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி. லாகூரில், பஹரியா நகரில் "பிலாவால் ஹவுஸ்" என்ற பெயரில் உள்ள குண்டு துளைக்காத மாளிகையில் குடியேறியுள்ளார்.

சர்ச்சைக்குரிய தொழிலதிபர் மாலிக் ரியாஸ ஹுசைன் பரிசாக அளித்துள்ள, பிலாவல் ஹவுஸ் 25 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த மாளிகையில் சிறிய ஜெட் விமானங்கள், ஹெலி கொப்டர்கள் தரையிறங்கும் வசதி செய்யப்பட்டுளளன. மாளிகையை சுற்றிலும் 10 ஆயிரம் பேர் அமரும் அளவிலான புல்வெளி உள்ளது.

இந்த மாளிகையின் சுவர்கள் 30 அங்குல தடிமனானவை.சகல வசதிகளும் கொண்ட, இந்த மாளிகை பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பண்ணை வீட்டில் இருந்து 1.5 கி.மீற்றர் தொலைவில் உள்ளது. ஜனாதிபதி சர்தாரியும் அவரது மகன் பிலாவலும் கடந்த சனிக்கிழமை இந்த மாளிகையில் சம்பிரதாயமாக குடியேறினர்.

# "உலகின் சந்தைவாய்ப்பு நோக்கி" கொழும்பில் தோற்பொருள் கண்காட்சி



'உலகின் சந்தைவாய்ப்புக்களை நோக்கிய நடைப்பயணம்' என்னும் தொனிப்பொருளிலான தோல் மற்றும் பாதணி உற்பத்திகளின் கண்காட்சியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, றிஷாட் பதியுதீன் சகிதம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

கொழும்பில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தின் சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சிக் கூடத்தில் மேற்படி கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் இடம்பெற்றது.

கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சின் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினது ஏற்பாட்டிலும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கைத்தொழில் அபிவிருத்தி சபையினதும் இணை ஏற்பாட்டுடன் ஒழுங்கமைக்கப்பட்ட இக்கண்காட்சியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தோற்பொருள் உற்பத்தியாளர்களால் 200 இற்கும் மேற்பட்ட கூடங்கள் அமைக்கப்பட்டு உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன.

அத்துடன், உலகின் பல்வேறு நாடுகளிலும் இலங்கையின் தோற்பொருள் உற்பத்திகளை அறிமுகம் செய்தல், சந்தை வாய்ப்பினை பெற்றுக் கொடுத்தல் மற்றும் இதனூடாக துறை சார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்ட இக் கண்காட்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிற்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கெடுத்துக் கொண்டனர்.

முதலாம் நாளின் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஆகியோர் பிரதான வாயிலில் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து அதிதிகளால் மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டது.

கண்காட்சியை அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள் சம்பிரதாயபூர்வமாக தொடக்கி வைத்ததுடன், ஏனைய அமைச்சர்கள் சகிதம் காட்சிக்கூடங்களைப் பார்வையிட்டதுடன், அவை தொடர்பில் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடிக் கேட்டறிந்து கொண்டனர்.

கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சின் பதில் செயலாளர் ஜெயசிங்கா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் றிஷாட் பதியுதீன் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

உலகின் சந்தை வாய்ப்புக்களை நோக்கிய நடைப் பயணம் என்ற தொனிப் பொருளிலான 5 ஆவது தோல் மற்றும் பாதணிகளின் கண்காட்சி 2013 நேற்று முதல் நாளை மறுதினம் வரையான மூன்று நாட்கள் நடைபெறவுள்ளதுடன், 2009 ஆம் ஆண்டு தொடங்கிய மேற்படி கண்காட்சி இவ்வாண்டு 5 ஆவது தடவையாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச்சபை உள்ளிட்ட நிறுவனங்களில் துறைசார்ந்த பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பயங்கரவாதம்...

ஊடகத்துறையினருக்கான சந்திப்பொன்று நேற்று யாழ்.சிவில் அலுவலகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் கலந்து கொண்ட யாழ். கட்டளைத் தளபதி மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் சமாதானம் நிலை நாட்டப்பட்டுள்ளது. 30 ஆண்டுகளின் பின்னர் இந்த நிலையேற்பட்டுள்ளமை மகிழ்ச்சியான விடயமே. எந்தவொரு பாகுபாடும் இன்றி இம்மக்கள் அரசினால் ஆதரவளிக்கப்படுகின்றனர். புலிகள் அழிக்கப்பட்டு, பாடசாலைகள், வைத்தியசாலை என்பன இயங்குகின்றன. நீதிமன்றில் முறையிடலாம், பொலிஸார் பாதுகாக்கின்றனர். இவ்வாறு வளர்ச்சி கண்டுவரும் வேளையில் மீண்டும் பயங்கரவாதத்தைத் தூண்டும் வகையில் செய்திகளை வெளியிட வேண்டாம் 3 வருடத்திற்கு மேலாக நான் இங்கு இருக்கிறேன். எனக்கு நன்றாக யாழ்ப்பாணத்தைப் பற்றித் தெரியும். அவற்றை விளக்கிக் கொண்டு பத்திரிகைத் துறையைத் தவறாகப் பயன்படுத்தாது மக்களின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துங்கள்.

அண்மையில் தினக்குரல் பத்திரிகை விஷமிகளால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் யாழ்.கட்டளைத் தளபதிதான் பொறுப்புக் கூறவேண்டும் என்கிறார். நான் ஒரு அரசாங்க அதிகாரி. நான் 'அரசியல்வாதிக்கு பொறுப்புக் கூறவேண்டியதில்லை. அவர்கள் அரசியல் நடத்துகிறார்கள். நாம் நிர்வாகம் நடத்துகிறோம். தற்போது இராணுவ பிரசன்னம் யாழ்ப்பாணத்தில் மிக மிகக் குறைவு. ஆனால் சில பத்திரிகைகள் இப்பவும் இராணுவ ஆதிக்கம் என்கிறார்கள். இராணுவம் குறைக்கப்பட்டு முகாம்களும் அகற்றப்பட்ட நிலையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால் நாம் எவ்வாறு பதில் கூறுவது. இதற்கு நாம் பொறுப்புக்கூற முடியாது. அவ்வாறே இராணுவத்தின் மீது சேறுபூசும் செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டால் எதிர்காலத்தில் நாம் நீதிமன்றம் செல்லவேண்டிய நிலைமைகூட ஏற்படலாம். பத்திரிகைத் துறையைச் சரியான முறையில் பயன்படுத்துங்கள் தவறாக மக்களை வழிநடத்தாதீர்கள்.

எத்தனையே சிறுவர்கள், பாடசாலைப் பிள்ளைகள் தற்போது தந்தையால், உறவினரால் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்படுகிறார்கள். அவ்வாறான நிலையில் சமூகத்தைப் பாதுகாக்க செய்திகளை வெளியிடுங்கள். இதைவிட்டு இராணுவத்தை மட்டும் தாக்கிச் செய்திகளை ஒரு சில பத்திரிகைகள் வெளியிடுவதுதான் கவலையான விடயம்.

இராணுவம் மக்களின் நண்பன். பிரபாகரன் அல்ல. பிரபாகரனின் கொள்கை பயங்கரவாதமானது. இதைத்தான் பகவத் கீதையும் பயங்கரவாதம் என்று சொல்லுகின்றது.

உங்கள் உறவினர்கள் போன்றோர் லண்டன் போன்ற நாடுகளில் இருக்கிறார்கள். அவர்களிடம் தற்போதைய யாழ்ப்பாணத்தின் நிலை இராணுவத்தினரின் அணுகுமுறைகளைக் கூறுங்கள். அப்போது தான் அந்நாடுகளில் பயங்கரவாத்தை மீண்டும் தூண்டாது இருப்பார்கள். மக்களின் மனங்களைக் குழப்பும் வகையில் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். சமூகத்தின் ஒரு பகுதியே அரசியல். அரசியல் தான் சமூகம் சமுதாயம் அல்ல. இராணுவம் தற்போது மக்களுடன் நட்புடனேயே நடக்கின்றது. அது எப்போதும் நிலைக்கும். இராணுவம் பிழை செய்தால் எழுதுங்கள். நான் நடவடிக்கை எடுப்பேன். யாழ்ப்பாண மக்களையும், யாழ்ப்பாணத்தைப்பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும்.

மயிலிட்டிப் பகுதியில் 100 குடும்பங்களுக்கு தற்போது காணிகள் வழங்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது மீன்பிடித் தொழிலுக்கு உதவியளிக்கின்றோம். பலாலி விமானத்தளம், காங்கேசன்துறை துறைமுகம் விஸ்தரிக்கப்படும். இதனால் சட்டத்திற்கு அமைய காணிகள் என்பன எடுக்கப்படுகின்றன. இதற்கான பெறுமதி மக்களுக்கு வழங்கப்படும் என்றார்.(இ)

## 'யாழ்ஒளி'....

நிலையத்தை திறந்துவைக்கிறார். தொடர்ந்து காலை 11.00 மணிக்கு யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெறும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பங்கு கொள்வார். பின்னர் மாலை 4.00 மணிக்கு நயினாதீவுக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி அங்குசமய நிகழ்வுகளில் கலந்து கொள்வார்.

மேலும் நாளை காலை 10.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகள் கொண்ட ஐந்து மாடிக் கட்டடத்தை திறந்து வைக்கும் ஜனாதிபதி பொது மக்களையும் சந்திக்க உள்ளதோடு, சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## ஒருங்கிணைப்புக்...

எம்.பி.க்கள் உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தாம் அவற்றை விநியோகித்ததாக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இந்த அழைப்புக் கடிதம் தமக்கு கிடைத்ததைக் கூட்டமைப்பு எம்.பி.யான விநாயகமூர்த்தி அரசாங்க அதிபரிடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

# மடிக்கணனியில் 32 இலட்சம்; சிக்கினார் வியாபாரி

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 32 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு பணத்தை மாலை தீவிற்கு எடுத்துச் செல்ல முயற்சித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நபர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

25,610 அமெரிக்க டொலர்கள் மற்றும் 500 சிங்கப்பூர் டொலர்களும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவற்றின் இலங்கைப் பெறுமதி 32 இலட்சம் ரூபா எனக் கணிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது.

இவர் தனது மடிக்கணனியில் பணத்தை மறைத்து எடுத்துச் சென்றுள்ளார்.

சந்தேகநபர் மாலைதீவிற்கும் இலங்கைக்கும் இடையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர் என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி....

யிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே திறந்து வைக்கப்பட்ட சந்தையை எதற்காக மீண்டும் இரண்டாவது தடவையாகத் திறந்து வைத்துள்ளனர் என்று பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சந்தை வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையை அடுத்து, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரின் முயற்சியினால், இந்தச் சந்தைக்கு 2010 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2011 ஆம் ஆண்டு ஜனாதிபதியினால் அடிக்கல் நாட்டப்பட்டது.

கடந்த 25.09.2012 ஆம் திகதி இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாமல் ராஜபக்ஷ, முருகேசு சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, மாகாணசபையின் செயலாளர் விஜயலட்சுமி, உள்ளூராட்சி ஆணையாளர், சந்தை வர்த்தகர் சங்கப்பிரதிநிகள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மொத்தமாக 250 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படும் பொதுச்சந்தையின் முதற்கட்டடத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி இரண்டாம் கட்டட நிர்மாணப்பணிகள் தொடரும் என்று அன்றைய தினம் அறிவித்திருந்தார்.

எனினும் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்ட சந்தையில் தமக்கு உரிமம் கிடைக்க வேண்டும் என சில வர்த்தகர்கள் கரைச்சிப் பிரதேச சபைக்கெதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை அடுத்து, நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது. இதனையடுத்து இந்தச் சந்தை மூடப்பட்ட நிலையிலேயே இருந்தது.

எனினும் கடந்த 07.02.2013 அன்று இடைக்காலத் தடையுத்தரவு நீக்கப்பட்டது. இதனையடுத்து, இரண்டாவது தடவையாக இந்தச் சந்தையை நேற்று மீண்டும் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வைத்திலிங்கம் குகராசா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செல்வம் ஆகியோர் திறந்து வைத்துள்ளனர்.

இந்த நிகழ்வில், பிரதேச சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்தச் சந்தையின் இரண்டாம் கட்ட வேலைகள் பூர்த்தியாகும் வரையில் வடமாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் 16 மில்லியன் ரூபாய் செலவில் 216 தற்காலிகக் கடைகள் நிர்மாணிக்கப்பட்டு அவற்றை எதிர்வரும் 16 ஆம் திகதி திறந்து வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதைக் குழப்பும் முகமாகவே இந்த அவசர ஏற்பாட்டினைக் கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் முயற்சித்திருப்பதாக வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

## உறவுகளுடன்....

இவர் கதறியழுது கொண்டிருந்தபோது இவரது பரிதாப நிலையை உணர்ந்து ஒருவர் இவரைத் தூக்கிச்சென்றுள்ளார். விறகு வெட்டச் சென்ற முதியவர் திரும்பி வந்தபோது தனது குடும்பத்தவர்கள் அனைவரும் இறந்து போனதையிட்டுக் கண்ணீர் விட்டுக் கலங்கி அழுதார்.

தப்பிப் பிழைத்த முதியவரின் பேத்தியை ஒருவர் தூக்கிச் சென்றதாக வேறொருவர் முதியவரிடம் தெரியப்படுத்தினார். குடும்பத்தில் எஞ்சியிருந்த அந்தப் பேத்தியை தனது முதுமையையும் பொருட்படுத்தாமல் அவர் தேடத் தொடங்கினார்.

வன்னிப் பகுதியைச் சேர்ந்த பிரதேச செயலர் ஒருவர் இம்முதியவருக்கு உதவினார். பிச்சை எடுப்பவர் போலப் பல இடங்களிலும் தேடுதல் செய்யுமாறு ஆலோசனை கூறி பல உதவிகளைச் செய்தார்.

ஒருநாள் வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் பக்கம் முதியவர் சென்ற போது திடீரென்று பாடசாலையில் விளையாட்டில் ஈடுபட்டிருந்த பெண்பிள்ளையொன்று தாத்தா எனக் கத்தியவாறு ஓடிவந்து முதியவரைக் கட்டியணைத்தது. அப்பிள்ளை தனது பேத்தி என்பதைக் கண்டு கொண்ட முதியவர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

பிள்ளையை வளர்த்த குடும்பத்தவருடன் அப்பகுதிக் கிராம அலுவலருடன் சென்று கதைத்த முதியவர் பேத்தியை வாஞ்சையோடு தன்னுடன் அழைத்துச் சென்றார். தொடர்ந்து பேத்தியை வளர்ப்பதற்கு முதியவரின் முதுமை இடங்கொடுக்காதபடியினால் நீதிமன்றத்தின் மூலம் பிள்ளைகளில்லாத ஒரு பணக்காரக் குடும்பத்தவரிடம் தனது பேத்தியை அவர் ஒப்படைத்தார்.

தற்போது ஒன்பது வயது நிரம்பிய அப் பெண் பிள்ளை மிகவும் சந்தோசமாக அக் குடும்பத்தவருடன் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

## பாப்பரசர்....

லுக்கான காரணங்கள் எதுவெனத் தெரியவரவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. பாப்பாண்டவர்கள் பதவி விலகுவது ஒன்றும் புதிதான விடயமல்ல. ஆனால் பதவியிலிருக்கும்போதே பாப்பாண்டவர் ஒருவர் பதவி விலகுவது இதுவே முதல் தடவையாகும்.

# முறைதவறிய கடற்றொழில்
# தொண்டைமானாறில் பணிப்புறக்கணிப்பு

தடைசெய்யப்பட்ட உள்ளூர் இழுவைப் படகு மீனவர்களின் மிலேச்சத்தனமான செயற்பாடுகளினால் தொண்டைமானாறு கடற்றொழிலாளர்கள் நேற்று தொழில் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

தொண்டைமானாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட 133 கடற்றொழில் அங்கத்தவர்களே இவ்வாறு தொழில் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தமையால் அன்றைய ஜீவனோபாயமும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


வல்வெட்டித்துறைப் பகுதி உள்ளூர் இழுவைப் படகுகள் வடமராட்சி கடற்பரப்பில் தட்டிக்கேட்பார் அற்று அண்மைகாலமாக தொடர்ச்சியாக சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபடுட்டும் வருகின்றன. அத்துடன் திட்டமிட்டு காத்திருந்து சிறுதொழில் மீனவர்கள் கடன்பட்டு அன்றாட ஜீவனோபாயத்துக்காக வாங்கிய வலைகளையும் நாசகாரம் செய்தும் அருகிச் செல்லும் மீனினத்தை முற்றாக அழிக்கும் நோக்கில் தொடர்ச்சியாக வடமராட்சி கடற்பரப்பிலே ஈடுபட்டு வருகின்றனர். குறித்த உள்ளூர் இழுவைப்படகு மீனவர்களின் அதிகாரபூர்வ எல்லை மீறிக்கடற்றொழிலில் ஈடுபட்டு சிறுதொழில் மீனவர்களின் வலைகளை அறுக்கும தான்தோன்றித்தனமான செயற்பாடுகளினால் கடந்தவாரம் சுமார 50 இற்கும் மேற்பட்ட கடற்றொழலாளர்களின் தொழில் உடமைகள் சேதமடைந்து பல இலட்சம் ரூபா இழப்பீடு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைகளைக் கண்டித்தே கடற்றொழிலாளர்கள் தொழில் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (116)

# சவுதிக்கான தூதுவர் வி.கிருஸ்ணமூர்த்தி?

சவுதி அரேபியாவிற்கான இலங்கை தூதுவராக சிரேஷ்ட இராஜதந்திரியான வி.கிருஷ்ணமூர்த்தியின் பெயர் சிபாரிசு செயயப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. பணிப் பெண்ணாக கடமையாற்றிய மூதூரைச் சேர்ந்த ரிசானா நபீகிற்கு கடந்த ஜனவரி 9 ஆம் திகதி சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சவுதி அரேபியாவிற்கான தூதுவர் அஹமட் ஜவாத், இலங்கை அரசாங்கத்தினால் மீளழைக்கப்பட்டார். இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு சிரேஷ்ட இராஜதந்திரியான வி.கிருஷ்ணமூர்த்தியின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராஜதந்திர சேவையில் 33 வருட அனுபவம் கொண்ட இவர், தற்போது சார்க் மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகள் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வருகின்றார். சென்னையிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தில் பிரதி உயர்ஸ்தானிகராக இறுதியாக வி.கிருஷ்ணமூர்த்தி கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.



இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக யாழில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக நேற்று சங்கானைப் பிரதேச செயலகத்தில் ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றஜிவ விஜயசிங்க உரையாடலில் ஈடுபட்டிருக்கின்றார். பிரதேச செயலர் எ.சோதிநாதன மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஆகியோர் அருகில் இருப்பதையும் காணலாம்.

# மூன்று குட்டித்தேர்தல்கள் இந்த ஆண்டில் நடக்கும் வாய்ப்பு

நான்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை இவ்வருடத்தில் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக தேர்தல்கள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதத்தில் மத்திய, வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தவும் ஆகஸ்ட் மாதத்தில் மேல் மாகாண சபைக்கான தேர்தலை நடத்தவும் அரசு தீர்மானித்துள்ளது. இந்த 3 மாகாண சபைகளுக்கான தேர்தல்களை முடித்துக்கொண்டு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபையின் பதவிக் காலம் 2014 மே மாதத்திலேயே முடிவடையவிருக்கின்றபோதிலும் அதனை ஒன்பது மாதங்களுக்கு முன்னதாக நடத்த அரசு திட்டமிட்டிருக்கின்றது. எதிரவரும் மார்ச் மாத இறுதியில் மத்திய, வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்படலாமெனவும் மே மாதம இரண்டாம் வாரமளவில் தேர்தல இடம்பெறலாமெனவும் தெரிய வருகின்றது.

மத்திய, வடமேல் மாகாண சபைகளின் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்திருக்கும் தேர்தல் திணைக்களம், இத் தேர்தலுக்காக 6 கோடி ரூபா தேவைப்படுவதாக கணக்கிடப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வீதி விபத்தில் கடற்படை வீரர் பலி

அம்பாறையில் இடம்பெற்ற வாகன விபத்தில் கடற்படை வீரர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு கடற்படை வீரர் படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்ற கடற்படை வீரரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், படுகாயமடைந்த கடற்படை வீரர் பொத்துவில் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வசந்த குமார தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்திலிருந்து சென்ற கடற்படை வீரரான எம்.கே.வி.ரணசிங்க ஜயசிங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் கோமாரி, முருங்கந்தனை பிரதேசத்திலேயே நேற்று திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. பொத்துவிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்றடிப்பர் ரக வாகனத்துடன் அக்கரைப்பற்றிலிலிருந்து பொத்துவில் நோக்கிச் சென்றமோட்டார் சைக்கிளுமே மோதி விபத்திற்குள்ளானதாகவும் அவர் கூறினார். இவ்விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது . இவ்விபத்து தொடர்பான விசாரணையை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# துப்பாக்கியுடன் மூன்றுபேர் கைது

யாழ். கொடிகாமம் பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இரவுநேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கொடிகாமம் கச்சாய் பகுதியில் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

கைதுசெய்யப்பட்டவர்கள் சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# எதிர்க்கட்சிகளின் கூட்டு கூட்டமைப்பு ஒப்பமிடவில்லை


(கொழும்பு)

அரசுக்கெதிரான பிரசார யுத்தத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் பல்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒப்பமிடவில்லை. இந்த ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை தீவிரமாக முன்னெடுக்கும் நோக்கத்துடன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி உட்பட 12 கட்சிகள் பொது வேலைத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் இணைவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, நவ சமசமாஜ கட்சி, நவ சிஹல உறுமய, மவ்பிம ஜனதா கட்சி, ருஹுனு ஜனதா கட்சி, எக்சத் ஜனதா பெரமுன மற்றும் முஸ்லிம் தமிழ் முன்னணி உட்பட 11 கட்சிகள் கைச்சாத்திட்டன. வெளிநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடு திரும்பிய பின்னர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமத்திரன் தெரிவித்தார்.

# செம்பியன்பற்றுக்கு மின்சார விநியோகம்



65 வருடங்களுக்குப் பின்னர் செம்பியன் பற்று கிராமத்திற்கு மின் விநியோகம் கிடைத்துள்ளதென பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று, வடக்கு தெற்கு மற்றும் மாமுனை கிராமத்திற்கு மின் விநியோகத்திட்டத்தை ஆரம்பித்து வைத்த பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

இக்கிராம மக்கள் சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து மின்சாரம் இன்றி வாழ்ந்துள்ளதுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக இக்கிராம மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மாமுனை பாடசாலைக்கு அருகாமையில் செம்பியன்பற்று தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவரும், சமாதான நீதிவானுமாகிய பி.தங்கராசா தலைமையில் நடைபெற்ற நேற்றைய நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் என்.திருலிங்கநாதன், இலங்கை மின்சார சபையின் யாழ் பிரதேச பொறியிலாளர் என்.ஞானகணேசன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச மின அத்தியட்சகர் க.ராஜேஸ்வரன், பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் மணிதரன் ஆகியோர கலந்துகொண்டனர். தாளையடிப் பங்குத்தந்தை எம்.யேசுரட்ணம் அடிகளாரின் ஆசியுரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது.

# அவுஸ்ரேலியாவில் புதிய அரசியல் கட்சி
## இல.தமிழர்கள் திரண்டு அமைப்பு

அவுஸ்ரேலியாவிற்குச் சென்று அங்கு குடியேறிய இலங்கையர்கள் அங்கு அரசியல் கட்சியொன்றை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளனர். "அவுஸ்ரேலிய எழுச்சி கட்சி" என பெயரிடப்பட்டுள்ள இந்தக் கட்சியில தற்போது ஆயிரத்து 500 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.

இந்தநிலையில் எதிர்வரும் பிராந்திய தேர்தலில் 65 வேட்பாளர்களை நிறுத்த இந்தக் கட்சி தீர்மானித்துள்ளது. இலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட டெனியல் நல்லையா என்பவரினால் இந்த அவுஸ்ரேலிய எழுச்சிக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவிற்குள் நுழைபவர்கள் அந்த நாட்டிற்கு விஸ்வாசமான முறையில் தம்மை மேம்படுத்துவதுடன் அவுஸ்ரேலியாவின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற முக்கிய கொள்கையை இந்த புதிய கட்சி கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.